கரூர் சிறப்பிதழ்



தொழிலமைச்சர் பேட்டி!

கல்கி

KALKI 31.10.93 ரூ. 3.00



கரூர்: ஏற்றுமதியில் ஜரூர்!



பண்டைக்காலத்தில் மன்னர்கள் இதற்காகவே போர் தொடுத்திருப்பார்கள்.

மாங்காய் மாலை — அழகுமிக்க ஒரு பாரம்பரியம் வழி வழியாக வந்த சிறந்த கலை. தங்கத்திலே ஒரு மகத்தான படைப்பு. அதிலே வைரமும் மரகதமும் மாணிக்கமும் அழகுறப் பதிப்பு. இது செல்வத்தைப் பறைசாற்றும் சிறப்பு. மாங்காய் மாலை — மேத்தா ஜுவல்லரியின் திறமை, தேர்ச்சி மற்றும் கைவினைத் திறனுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.



வைரம், மணிக்கற்கள், தங்கம் மற்றும் வெள்ளியில் மிகச் சிறந்த படைப்புகள்... இவை எல்லாம் மேத்தா பாரம்பரியத்தின் ஓர் அங்கம். 100 ஆண்டுகளுக்கும் மேலாக இணைந்து பெற்ற அனுபவத்துடன் மேத்தா நிறுவனத்தார் தங்கள் கலையிலும் கைவினைத் திறனிலும் கருத்துடன் கவனம் செலுத்திக் கடமையே கண்ணாக இருக்கின்றனர் — இவர்களுடைய படைப்புகளில் உள்ள தரமும் தனித்தன்மையுமே இதற்குச் சான்று. பாபாவாலில் இவர்கள் பெற்ற பல்லாண்டு அனுபவம், இவர்களுடைய கடமை உணர்ச்சி,

என்றும் மாறாத பாரம்பரியச் சிறப்பு.

செய்யும் பணியில் சிறந்த தரம் ஆகியவற்றால், சிறந்ததையே நாடுவோர் பார்வையில் இவர்கள் உயர்ந்தோர் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.



வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் தனிப்பட்ட சேவையின் மூலம், மாறிவரும் இன்றைய உலகில் மாறாத நற்பண்புகளைக் கொண்டுள்ளதாகத் திகழ்கிறது மேத்தா பாரம்பரியம்.

Mehta JEWELLERY

40, திருமலைப் பிள்ளை ரோடு, தி.நகர்,
ஜி.என்.செட்டி ரோடு பிரிவு
சென்னை-600 017. போன்: 8283130
காலை 9.30 முதல் பிற்பகல் 1.30 வரை
பிற்பகல் 2.30 முதல் மாலை 6.30 வரை

ARTIG/1300



✱ திண்ணப்பா நகர்ப் பெண்கள்

"ஒரு லட்ச ரூபாய் எங்கே போச்சு?"

"இந்தக் கேள்வியைத் தான்தோன்றி மலை பஞ்சாயத்து யூனியனிலிருந்து, சப்-கலெக்டர் ஆபீஸ், திருச்சி மின் வாரியம் என்று பல இடங்களில் கேட்டுப் பார்த்து விட்டோம். கடைசியாகக் கிடைத்த உறுதி பெறாத தகவலின் படி, சென்னை மின் வாரியத்தலைமை அலுவலகத்துக்கு அந்தப் பணம் சென்று விட்டதாம். எப்படி ஸார் கண்டு பிடிக்கறது? உங்களுக்கு ஏதேனும் வழிகள் தெரிகிறதா?" என்று நம்மை ஓர் உலுக்கு உலுக்கி விட்டார் கரூர் திண்ணப்பா நகர் நுகர்வோர் நல பாதுகாப்புச் சங்க பெண்கள் பிரிவின் செயலாளரான திருமதி சகுந்தலா.

விஷயம் இதுதான். திண்ணப்பா நகர்ப் பகுதிகளுக்குத் தெரு விளக்குகள் போட, யூனியன் சார்பில் ஒரு லட்ச ரூபாய் உள்ளூர் மின் வாரியத்திடம் டெபாஸிட் செய்யப்பட, அந்தப் பணம் திருச்சி, சென்னை என்று குடி பெயர்ந்து விட்டதாம். இப்போது விதிகளின் படி, சென்னை மின் வாரியத் தலைமை, இனி லோக்கல் அதிகாரிகளுக்கு உத்தரவு தந்தால்தான், வேலை துவங்கி திண்ணப்பா நகர் வெளிச்சம் பெறுமாம். 'அந்த நாளும் வாராதோ; தொல்லைகள் தீராதோ!' என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் திண்ணப்பா நகர் வாசிகள்.

நாங்கள் சென்றிருந்த அந்த முன்னிரவு நேரத்திலும் எங்களைச் சந்திப்பதற்காக செயலாளர் சகுந்தலா, பொருளாளர், தலைவர் மற்றும் சங்க உறுப்பினர்கள் வீடுகளுக்கு ஆள் மேல் ஆள் அனுப்ப, பல அம்மணிகள் டார்ச் லைட் சகிதம் திண்டாடி வந்த போதுதான், தெருவிளக்கு இல்லாமல் அந்த நகர் வாசிகள் படும் கஷ்டம் நமக்கும் முழுமையாகப் புரிந்தது.

"எங்கள் வேதனைகள் இன்னமும் உள்ளன. டோல் கேட்டிலிருந்து திண்ணப்பா நகர், காந்தி கிராமம், வீட்டு வசதி வாரியம் வழியாகச் செல்லும் சாலை, புலியூர் அருகில் கரூர் திருச்சி - சாலையில் சேர்கிறது. இந்தச் சாலை குண்டும் குழியுமாக இருப்பதால் (இரவையும் பொருட்படுத்தாமல் விடாப்பிடியாக அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தார்கள்!) நெடுந்தூர பஸ்கள் நான்கைந்து கி.மீ. சுற்றிக் கொண்டு புலியூர் வழியாகச் செல்கின்றன. இதனால் நேரம் மட்டுமல்ல, எரிபொருளும் வீணாகிறது. சாலை மோசமாக இருக்கிறது என்ற காரணத்தினால் டவுன் பஸ்களும் சரிவர விடப் படுவதில்லை!" அலுத்துக் கொள்கிறார் சகுந்தலா.

நல்ல தண்ணீருக்கும் திண்டாட்டம்தான். சாயப்பட்டறைகளின் சகாயம் காரணமாக, நிலத்தடி நீர் மாசுபட்டு விட, கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்களில் கலர் கலர் தண்ணீர்!

"அது என்னங்க, பெண்கள் பிரிவுன்னு தனியா வைச்சிருக்கீங்க...?" என்று கேட்ட போது, "காரணமாத்தான். மேலே சொன்ன பிரச்னைகளுக்காக, எல்லா அலுவலகங்களுக்கும் போக வேண்டியிருக்கிறது. ஆண்கள் அடிக்கடி லீவு போட முடியாது. அதனால், அவர்களை ஆபீஸுக்கு அனுப்பி விட்டு நாங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குக் கிளம்பி விடுகிறோம். ஆனாலும் ஆண்கள் தான் வழி காட்டுகிறார்கள்!" என்று விட்டுக் கொடுக்காமல் சொன்னார் சகுந்தலா.

ரேஷன் கடையில் கெரஸின் ஊற்றும் போது அளவு சரியாக இருக்கிறதா என்று கண்காணிப்பது, புதிதாகச் சாலை போட்டால், தரமான முறையில்தான் வேலை நடைபெறுகிறதா என்று முறை போட்டுக் கொண்டு கவனிப்பது என்று சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார்கள் கரூரிலுள்ள இந்தப் பெண்கள்.

– கௌசல்யா

இங்கே பாருங்கள்; ஓர் உதாரண கிராமம்!

"நாமெல்லாம் படித்து முடித்து விட்டோம்; சிலர் வேலை வாய்ப்பு காரணமாக வெளியூர் சென்று செட்டிலாகி விட்டார்கள். சிலர் உள்ளூரிலேயே தங்கி விட்டார்கள். நம்மை, நம் குடும்பத்தைப் பொறுத்தவரை ஒரு கவலையுமில்லை. ஆனால் பின் தங்கிய நிலையிலுள்ள நமது கிராமத்திற்கு - நாம் பிறந்த மண்ணுக்கு நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டாமா?"

* ராஜமாணிக்கம்





* பழனிச்சாமி


ஒரு முறை, கரூர் அருகிலுள்ள கருப்பம்பாளையத்தைச் சேர்ந்த நண்பர்களான கரூர் வைசியா வங்கியில் வேலை பார்க்கும் ராமலிங்கம், ஸ்பின்னிங் மில்லில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ராஜமாணிக்கம், மிராசுதாரரான பழனிச்சாமி ஆகியோர் ஒன்று சேர்ந்த போது எழுப்பப்பட்ட கேள்வி இது! இதன் விளைவாக உருவானதுதான் பழைய மாணவர் சங்கம். ஆங்கிலத்தில் ஓசாகா (OSAKA - Old Students Association of Karuppampalayam) என்று பெயரிட்டார்கள். உள்ளூர் உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்த பலரையும் ஒன்று சேர்த்தார்கள்.

எது செய்ய வேண்டுமென்றாலும் முக்கியமானது ஒற்றுமை மட்டுமல்ல; பணமும் என்பதை அந்த நண்பர்கள் புரிந்து கொண்டார்கள். வசதி கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவுக்கு ஒரு சிறு தொகையைப் பங்கு மூலதனம் போட, ஒரு நிதி அமைப்பு (Fund) செயல்படத் துவங்கியது. விவசாயிகளுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் சிறு சிறு கடன்கள் கொடுக்கத் துவங்கினார்கள். சீட்டு பிடித்தார்கள். பணம் வட்டியாகக் குட்டி போடத் துவங்கியது.

"முதலில் எங்கள் கிராமத்துக்கு எது முக்கியமான தேவை என்பதைப் புரிந்து கொண்டு செயல்படத் துவங்கினோம். கல்யாணத்திற்கான சமையல் பாத்திரங்களைக் கரூருக்குச் சென்று எடுத்து வர வேண்டியதாக இருந்தது. அதோடு, வெளியிலிருந்து வாடகைக்கு வாங்கி வரும் பாத்திரங்களின் உட்புறம் சரியான படி ஈயப்பூச்சு பூசப்பட்டிருப்பதில்லை என்பதால், இரண்டொரு முறை அப்படிப்பட்ட பாத்திரங்களில் சமைத்ததன் மூலம், எங்கள் கிராம விருந்திலேயே பலருக்கு உடல் நலக்குறைவும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கிட்டத்தட்ட மூன்று

* கிராமத்தின் தோற்றம்





* பொது தொலைபேசி.

கல்யாணத்திற்கு வேண்டிய பாத்திரங்களைச் சங்கத்தில் சார்பில் வாங்கினோம். இந்த பாத்திரங்களை, எங்கள் கிராம மக்களுக்கு மட்டுமல்ல; சுற்று வட்டாரத்திலுள்ள எட்டுப்பட்டிக் கிராமத்துக்கும் குறைந்த வாடகைக்குக் கொடுக்கிறோம். அவ்வப்போது சயம் பூசும் ஆளைக் கூட்டி வந்து, சயம் வாங்கிக் கொடுத்து எங்கள் கண்காணிப்பிலேயே சயமும் பூசுகிறோம்....'' என்று சொன்னார், 'ஓசாகா'வின் செயலாளர் ராஜ மாணிக்கம். ஸ்பின்னிங் மில்லில் ஓய்வு பெற்று இப்போது முழு நேரமும் சங்கப் பணிகளையே கவனித்துக் கொண்டிருக்கிறார் இவர்.

இவர்கள் படித்த பக்கத்துக் கிராமமான வாங்கல் உயர்நிலைப் பள்ளியில் நன்றாகப் படிப்பவர்களுக்கு இலவசப் புத்தகங்கள், மேல் நிலைத் தேர்வில் முதல் மாணவனுக்குத் தங்க மெடல். பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்குக் கட்டட நிதியுதவி, ஏழை மாணவியருக்கு உதவி என்று தொடர்ந்து செய்து வருகிறது சங்கம்.

''பக்கத்திலுள்ள கிராமத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் நல்ல மார்க் எடுத்து, விவசாயக் கல்லூரியிலும் இடம் கிடைத்தது. ஆனால் வசதியில்லாததால் படிக்க முடியாத சூழ்நிலை. நாங்கள்தான் அம்மாணவனைப் படிக்க வைக்கிறோம்!'' என்கிறார் ராஜ மாணிக்கம்.




''இந்திரா காந்தி இறந்த போது, சுற்று வட்டாரமே எங்கள் கோவிலின் முன்னே தான் கூடி இருந்தது. சில கிராமங்களிலிருந்து மாட்டு வண்டி பூட்டிக் கொண்டெல்லாம் வந்து குவிந்தார்கள். ஏன் தெரியுமா?'' என்று கேள்வி கேட்டு நிறுத்தினார் பொருளாளர் பழனிச்சாமி.

''எதற்கு?''

''அந்த நேரத்தில் இந்த வட்டாரத்தில் இந்த ஒரே டி.வி எங்கள் ஊர் மக்களுக்காக நாங்கள் வாங்கிய சங்க டி.வி.தான். கோடைக்கானல் தூர்தர்ஷன் பொறியாளர் ஒருவர் போக்குவரத்தில்லாமல் வாங்கலில் மாட்டிக் கொண்டார். அவரும், மக்களோடு மக்களாக அமர்ந்து இந்திரா காந்தி இறுதி ஊர்வலத்தை எங்கள் டி.வியில்தான் பார்த்தார்!'' என்று தொடர்ந்தார் பழனிச்சாமி.

''எங்களுருக்கு டெலிவிஷன் வாங்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது தெரியுமா? சொன்னால் நம்பமாட்டீர்கள்... நான் திருச்சியில் கல்லூரிப் படிப்பு படிக்கச் சென்ற புதிது. முதல் முறையாக ஹாஸ்டல் மெஸ்ஸில் 'போர்ன்விடா' கொடுத்தார்கள். நான் கிராமத்துக்காரன் என்பதால், எனக்கு 'போர்ன்விடா' என்று ஒன்று இருப்பதாகவே தெரியாது. எனவே, மெஸ்ஸில் கொடுத்ததைக் காப்பி என்று

* சங்கக் கட்டடம்



நினைத்து, 'காப்பி என்ன இப்படியிருக்கிறது? நன்றாகவே இல்லை!' என்று சொன்னேன். சகமாணவர்கள் சிரித்தார்கள். பிறகு தான் எனக்கு விஷயம் புரிந்தது.

''எனது அந்த அனுபவத்திற்கு என்ன காரணம்? வெளியுலகத் தொடர்பேயில்லாத கிராமத்துச் சூழ்நிலை. இனிவரும் தலைமுறையாவது வெளியுலகத் தொடர்பு பெற்றுப் பொது அறிவு பெற வேண்டும் என்று தீர்மானித்தோம். சங்கத்தின் சார்பில் டீ.வி. வாங்க முடிவு செய்தோம். அதற்காக நான் எனது பி.எஃப்பில் லோன் வாங்கிக் கொடுத்தேன்!'' என்கிறார் இன்று சென்னையிலுள்ள கரூர் வைசியா வங்கியின் தலைமை மேலாளராக இருக்கும் எஸ். ராமலிங்கம்.

கிராம மக்களின் வசதிக்காக ஊர்க் கோயிலில் உள்ள தொலைபேசி வசதியும் சங்க ஏற்பாடுதான். தொலைபேசியால் கிராம மக்களுக்கு என்ன பயன்? ''திடீரென்று பிரசவ வலி அல்லது யாருக்காவது உடல் நலக்குறைவு... அந்த நேரத்தில் உடனடியாக டாக்டரை கூப்பிட முடியும். செலவுக்குச் சங்கம் உடனே கடன் கொடுக்கும்'' என்கிறார்கள். கோயிலுக்கான மின் கட்டணத்தையும் சங்கம்தான் கொடுக்கிறதாம்.

வருடத்திற்கொருமுறை பழைய மாணவர் சங்க நிர்வாகப் பதவிகளுக்குத் தேர்தலும் உண்டு. ''காரசாரமான வாக்கு வாதங்கள் நடக்கும். அத்தோடு சில புதிய அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, முழு ஒத்துழைப்பும் கொடுப்போம். அப்புறம் சங்க முன்னேற்றம், கிராம வளர்ச்சி ஆகியவைதான் மனத்தில் நிற்கும்!'' என்கிறார் பழனிச்சாமி.

ஆரம்பத்தில் பணம் திரட்டுவதற்காக நிதி, சீட்டு என்று ஆரம்பித்த சங்கம், இன்னமும் அந்த வசதிகளை நிறுத்தவில்லை. 10,000 ரூபாய் சீட்டு நடத்துகிறார்கள். வங்கியில் கணக்கு வைத்துக் கொள்வது போல இவர்களிடத்திலும் கடன் வாங்க கொடுக்க மட்டுமின்றிச் சேமிப்பு வசதியும் உண்டு. சங்கம்தான் கிராம வசதிகளை அற்புதமாகக் கவனித்துக் கொள்கிறதே என்று அரசு நிர்வாகமான பஞ்சாயத்து, பாராமுகமாக இருக்கிறது. அரசின் வானொலிப் பெட்டி கூட பழுதாகிப் போய்க் கிடக்கிறது.

கருப்பம்பாளையத்தின் மற்றொரு சிறப்பு, எங்கேயும் எந்தக் கட்சிக் கொடியும் பறக்காதது. சினிமா போஸ்டர்கள் உள்பட அரசியல் கூட்ட போஸ்டர்கள் எதையும் கிராம எல்லைக்குள் ஒட்ட முடியாது. அப்படியொரு கட்டுப்பாடு. ''இதனால் எங்கள் ஊரில் உள்ளவர்களுக்கு அரசியல் ஆர்வமே கிடையாது என்று நினைத்து விடாதீர்கள். எங்களுக்கும் கட்சி சார்புகள் உண்டு. அதையெல்லாம் சுவர் முழுக்கப் போஸ்டர்களை ஒட்டி அசிங்கப்படுத்தித் தான் வெளிக்காட்ட வேண்டுமா என்ன?'' என்று கேட்கிறார் ராஜமாணிக்கம்.

''ஆமாம், சங்கத்தின் எதிர்காலத் திட்டம்தான் என்ன?''

''நாங்கள் உடனடியாகச் செய்ய நினைப்பது சங்கத்துக்கென்று ஒரு கட்டடம் கட்டியது போலவே ஒரு கல்யாண மண்டபமும் கட்டுவதுதான். அடுத்த முறை நீங்கள் வரும்போது அதையும் பார்ப்பீர்கள்'' என்று அழுத்தமாகச் சொல்கிறார் ராஜமாணிக்கம்.

– ஸ்ரீநிவாசன்

தகவலளித்த வாசகர் : ராமலிங்கம்.

நாகர்கோயில்–கன்னியாகுமரி வாசகர்களே!

நாகர்கோயில் – கன்னியாகுமரி வாசகர்களே, கும்பகோணம் மற்றும் கரூர் வாசகர்களைப் போலவே உங்கள் ஊர்ச் சிறப்பிதழ் ஒன்று தயாரிக்கும் வாய்ப்பு உங்களுக்கும் தயாராய் இருக்கிறது.

அந்த நாகர்கோயில் – கன்னியாகுமரி சிறப்பிதழுக்குச் சிறப்புச் சேர்க்கும் விதமாக என்னென்ன விஷயங்கள் இடம் பெற வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவை பற்றி எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.

ஊரின் தொழில் வளர்ச்சி, சுற்றுலா வளர்ச்சி, தனி மனிதர்கள், நிறுவனங்கள் அல்லது அமைப்புகளின் சிறப்புகள், அரசியல், ஊரின் பாரம்பரியச் சிறப்புகள் மற்றும் நவீனத்தின் தாக்கம், இவற்றோடு சிறுகதை, துணுக்கு என்று எதுவேண்டுமானாலும் எங்களுக்கு எழுதியனுப்பலாம்.

நீங்கள் எழுதும் விஷயங்களின் அடிப்படையில், நாங்களும் நேரில் வந்து பார்த்து விட்டுப் பிரசுரம் செய்கிறோம்.

நாகர்கோயில் - கன்னியாகுமரி பற்றிய உங்கள் கடிதங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 10.11.93.

உடனடியாக எழுதியனுப்புங்கள்.

– ஆசிரியர்.

பணத்துக்குப் பஞ்சமில்லை!



* எம்.ஜி. சங்கர நாராயணன்



* லட்சுமி நரஸிம்மன்

கரூர் வீதிகளில் செல்பவர்கள் தடுக்கி விழுந்தால், ஒன்று, சாக்கடைக் கால்வாயில் விழ வேண்டும், இல்லையேல் ஃபைனான்ஸ் கம்பெனிகளின் வாசல் படியில் விழ வேண்டும். அந்த அளவுக்கு நூற்றுக் கணக்கான தனியார் 'பைனான்ஸ்'கள் கரூரில் செயல்படுகின்றன.

கரூர் ஒரு தொழில் நகரமாக இருப்பதால், பணம் புரட்டுவது என்பது தினசரித் தேவைகளில் ஒன்றாக இருக்கிறது. காலையில் கடன் வாங்கி மாலையில் வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படும் 'தண்ட'லி லிருந்து, மாத, ஆறுமாத, வருட, தவணை களில் திருப்பிக் கொடுக்கப்படும் கடன்கள் என்று தினுசு தினுசான கடன் வகைகள், அதற்கேற்றவாறு வட்டி விகிதங்கள். சளைக்காமல் கொடுக்கிறார்கள்; வாங்கு கிறார்கள். வீடு, நகை என்று கடனுக்கு ஈடாக அடமானம் பெற்றுக் கொண்டா லும், பல சமயங்களில், நம்பிக்கையின் பேரிலேயே லட்சங்கள் புரளுகின்றன.

இந்த ஃபைனான்ஸ் நிறுவனங்கள், வட்டிக்குப் பணம் கொடுக்கும் வேலையை மட்டும் செய்யாமல், மக்களிடமிருந்து டெபாஸிட் பெறவும் செய்கின்றன. பதினெட்டிலிருந்து முப்பத்தியிரண்டு சதவீதம் வரை டெபாஸிட்டுகளுக்கு வட்டி கொடுத்து, ஆளை மடக்கிப் போடுகிறார்கள். இந்த அளவுக்கு கரூரில், ஃபைனான்ஸ் நிறுவனங்கள் செயல்படுவதற்கு என்ன காரணம்?

''ரொம்ப சிம்பிள். வங்கியில் போய்க் கடன் கேட்டால் ஆயிரத்தெட்டு ஃபார்மாலிட்டிகள். ஆனால் ஃபைனான்ஸ் களில் அப்படியல்ல. தூங்கிக் கொண்டிருப் பவரைத் தட்டி யெழுப்பி லோன் வாங்கிக் கொண்டு போகலாமே!'' என்று சொல்கிறார் 'ஒயிட் ஹவுஸ்' லட்சுமி நரஸிம்மன். ''இது போன்ற ஒரு ஃபைனான்ஸ் நிறுவனம்தான் பின்னர் 1926 ல், லட்சுமி விலாஸ் வங்கியாக மாறியது'' என்ற தகவலையும் சொன்னார் லட்சுமி நரஸிம்மன். இந்த வங்கியைத் துவக்கிய வர்களுள், லட்சுமி நரஸிம்மனின் மூதாதை யரும் உண்டு. இதன் காரணமாகத் தொடர்ந்து இவர் குடும்பத்தில் ஒருவர் நிர்வாகக் குழுவில் இயக்குனராகப் பதவி வகிக்கிறார்.

''இன்று லட்சுமி விலாஸ் வங்கிக்கு 180 கிளைகள் உள்ளன. 450 கோடி மக்களின் டெபாஸிட்டுகள் உள்ளது. வங்கியின் 30,000 பங்குதாரர்களுக்கு 23 சதவீதம் டிவிடெண்ட் கொடுத்திருக்கிறோம். ரிஸர்வ் வங்கியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம்.'' என்று பூரிப்புடன் சொன்னார் லட்சுமி நரஸிம்மன்.

இதே கரூர் நகரில், லட்சுமி விலாஸ் வங்கிக்கு முன்னோடியாகப் பிறந்ததுதான் கரூர் வைசியா வங்கி. ஆதி கிருஷ்ண செட்டியார், வெங்கட்ராம செட்டியார் போன்ற வைசிய சமூகத்துப் பிரமுகர் களால் 1916 ல் துவக்கப்பட்ட இந்த வங்கிக்கு இன்று 164 கிளைகள் உள்ளன. 550 கோடி டெபாஸிட், செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் தகவலை நமக்குச் சொன்னவர் வங்கியின் முன்னாள் டைரக்டர் எம்.ஜி. சங்கர நாராயணன். வங்கியைத் துவக்கியவர்களுள் இவரது முன்னோர்களும் உண்டு.

நஷ்டத்தில் ஓடும் அரசுடைமையாக் கப்பட்ட வங்கிகள், இந்த இரண்டு வங்கிகளிடமிருந்தும் நிறையக் கற்றுக் கொள்ளலாம்.

– தில்லப்பா.

தகவல் தந்த வாசகர் : ந. விஸ்வநாதன்



"அமைச்சரான பிறகும் தொகுதிக்குச் செல்கிறேன்!"

- தொழில் அமைச்சர் பேட்டி

கரூர் பயனியர் மாளிகை. மாளிகையின் உள்ளே, மாநில தொழில்துறை அமைச்சர் சின்னசாமி, சுய தொழில் துவங்குவதற்கு வங்கிகள் கடன் கொடுக்கும் விஷயமாக உள்ளூர் வங்கி மேலாளர்களுடன் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தார். முடிவாக, ''மக்களுக்காகக் கடன் கொடுப்பதற்குப் பணமும் வேணும்; மனமும் வேணும்! பார்த்துச் செய்யுங்கள்!'' என்று அந்தக் கூட்டத்தை முடித்து வைத்து விட்டு, நம்மோடு பேச ஆரம்பித்தார்.

''கரூரின் பெரிய பிரச்னையே குடி தண்ணீர்ப் பிரச்னைதான். அமராவதியில் முன்பு மாதிரி தண்ணீர் வரத்து கிடையாது. சரி, ஆற்றுப்படுகையில், ஆழ்கிணறு போடலாமென்றால், சாயப்பட்டறைகள் வெளிப்படுத்தும் ரசாயனக் கழிவு நீரால், நிலத்தடி நீரும் மாசு பட்டு விட்டது. ஆக, மாற்று ஏற்பாடு என்பது, பத்து கி.மீ. தூரத்திலிருந்து காவிரித் தண்ணீர் கொண்டு வருவதுதான். கிட்டத்தட்ட நாலேகால் கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட இருக்கிற திட்டம் இது. குழாய்கள் பதிக்கப்பட்டு விட்டன. 95 ல் திட்டம் செயல்படத் துவங்கும். அப்புறம் கரூரில் தண்ணீர் பிரச்னையே இருக்காது!'' என்றார் சின்னசாமி. இது தவிர சுற்றுப்புற கிராமங்களில் செயல்பட இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் விவரித்தார்.

''நிலத்தடி நீர் மாசு பட்டிருப்பதாகச் சொன்னீர்கள். மேலும் மாசு படாமலிருக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?''

''கரூர் மற்றும் சுற்று வட்டாரங்களில் கிட்டத்தட்ட முந்நூறு சாயப் பட்டறைகளும் நூறு வெளுக்கும் (Bleaching) பட்டறைகளும் உள்ளன. சுமார் 10,000 தொழிலாளர்கள் இந்தப் பட்டறைகளில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பட்டறைகளிலிருந்து வெளிப்படும் ரசாயனம் கலந்த கழிவு நீரை, ஆறு இடங்களில் மையப் படுத்தி, சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கத் தீர்மானித்திருக்கிறோம். இதிலொரு சந்தோஷமான விஷயம் என்னவென்றால், அந்தப் பட்டறைகளின் சொந்தக்காரர்களே நிதி உதவி செய்வதுதான். இன்னமும் ஒருவருட காலத்தில் இந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படத் துவங்கும்!'' என்று நம்பிக்கையை வெளிப்படுத்திய அமைச்சர் மேலும் தொடர்ந்தார்.

''எங்கள் பகுதி தொழில் வளம் நிறைந்த பகுதி. 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் செய்தித்தாள் நிறுவனம், தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில், சிமெண்ட் மற்றும் சர்க்கரை ஆலைகள் தவிர, கைத்தறி தொழிலில் சிறப்பானதொரு இடம் வகிப்பதாய் ஆயிரக்கணக்கான தறிகள், ஒரு சிறு தொழில் பேட்டை.... மேலும் புரட்சித்

தலைவியவர்கள், திருச்சியின் இன்னொரு கோடியான ஜெயங்கொண்டத்தில், பழுப்பு நிலக்கரிச் சுரங்கமும், மின் நிலையமும் அமைக்கவிருக்கிறார்கள். இந்தியாவி லேயே, கனிமங்கள் வெட்டுவதற்கு லைசென்ஸ் பெற்ற முதல் மாநிலம் தமிழ் நாடுதான். இது முதல்வரின் சாதனை!'' என்று சொல்லிப் பூரிக்கிறார் சின்னசாமி.

கரூரில் உள்ள பழைய அமராவதிப் பாலத்தைப் பற்றி நமக்குப் பலர் கடிதம் எழுதியது தவிர நேரிலும் நிறையப் பேர் சொன்னார்கள். பாலம் பலவீனமாக இருப் பதால் ஒரு வழிப்பாதையாக மாற்றியிருக்கி றார்கள். எனவே, பஸ்கள் கிட்டத்தட்ட பத்து கி.மீ. சுற்றிக் கொண்டு செல்ல வேண் டியதாக இருக்கிறதாம். இதனால் வீணாகும் எரிபொருள் செலவு, தினமும் ஆயிரக்கணக் கான ரூபாய் இருக்கும்!

இது பற்றி அமைச்சரிடம் கேட்ட போது ''இங்கே கரூரில் இருக்கும் வங்கி களிடமிருந்து நிதி வாங்கி, பாலத்தைப் புதுப்பித்து அகலப்படுத்தலாம் என்றிருக்கி றோம். பின்னர் வாகனங்களிடமிருந்து சுங்க வரி வசூலித்து, வங்கிகளில் வாங்கும் கடனைத் திருப்பிக் கட்டலாம் என்பது திட்டம். முதல்வரும் இத்திட்டத்தை அங்கீ கரித்து விட்டார். வேலைகள் துவங்க வேண்டியதுதான் பாக்கி!'' என்றார்.

''அடுத்து, கரூர் - காங்கேயம் பகுதி களில், கண்ணைக் கவரும் வண்ண வண்ண இயற்கைக் கற்கள் கிடைக்கின்றன. இப் போது தனியார்தான் இதை எடுத்து விற்றுச் சம்பாதித்து வருகிறார்கள். பக்கத்தில் கொடுமணல் என்ற ஊரில் தோண்டியெடுக் கப்பட்ட கல்வெட்டின்படி, இந்தக் கற்கள் அந்தக் காலத்திலேயே ரோமாபுரி போன்ற நாடுகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, பெண்களின் அணிகலன்களாக விளங்கிய தாம். அரசு சார்பில் செயற்கை வைர வளர்ச்சி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி, இந்தக் கற்களைத் தோண்டியெடுத்து அரசே விற்பனை செய்யும் திட்டமும் பரிசிலனை யில் இருக்கிறது!'' என்று தெரிவித்தார் அமைச்சர்.

எம்.ஜி.ஆர். புதுக்கட்சி ஆரம்பித்த வுடனேயே கட்சியில் சேர்ந்து விட்ட சின்ன சாமி ஒரு வழக்கறிஞர். ஜா. - ஜெ பிரச்னை யின் போது, எந்தவித மனக்கிலேசமும் இல்லாமல் ஜெ. பக்கம் சாய்ந்து விட்டவர்.

''தமிழ்நாட்டில், இதுவரை பல கட்சி களின் ஆட்சிகள் நடந்திருந்தாலும் கரூர் தொகுதியிலிருந்து யாரும் அமைச்சராக நியமிக்கப்பட்டதில்லை. முதல் முறையாக



''ஆண்டவன் நமக்கு அங்க தலை யைக் கொடுக்காமே போனானே!''
''அங்க தலையா... எதுக்கு?''
''சிரிக்கிறதுக்குத்தான்! இப்போ தூர்தர்ஷன் அந்த சேனல்கள்லே ஒளி பரப்புதே!''
- கு. அருணாசலம்.


புரட்சித் தலைவி, எனக்கு அமைச்சர் பதவி கொடுத்ததன் மூலம், கரூர் மக்களைப் பெருமைப்படுத்தி இருக்கிறார். இதை நீங்கள் கட்டாயம் எழுத வேண்டும்'' என்ற அமைச்சரிடம், ''இதே காரணத்தினால் மக்களும் உங்களிடம் மிக அதிகமாக எதிர் பார்க்கிறார்கள் அல்லவா!'' என்றோம்.

''ரொம்ப சரி, அதனால்தான் நான் அமைச்சரான பிறகும் கூட, தொகுதி மக்கள் என்னை வந்து சந்தித்துக் குறைகளைச் சொல்ல வேண்டும் என்று நினைக்காமல், நானே கிராமம் கிராமமாகச் சென்று, மக்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எல்லாக் குறைகளை யும் தீர்த்துவிட முடியாது என்றாலும் கூட, அவர்களுடைய குறைகளைக் காது கொடுத் துக் கேட்பதன் மூலம் அவர்களுக்கு ஆறு தலையாவது தர முடியுமல்லவா!''

''அரசியல் கொடிகளோ, போஸ்டர் களோ நுழைய முடியாத கருப்பம்பா ளையம் கிராமம் உங்கள் தொகுதிக்குள் தானே இருக்கிறது?''

''ஆமாம், அந்த கிராம மக்களைப் போல் எல்லா கிராம மக்களும் யோசித்துச் செயல்பட்டால், நமது நாட்டில் தேர்தல் செலவு என்ற ஒன்றே இருக்காது. கட்சி களுக்கும் செலவு மிச்சம்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்ன அமைச்சருக்கு, பெரம் பலூரைத் தலைநகராகக் கொண்டு திருச்சி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டால் மட்டும் போதாது; கரூரையும் தலைநக ராகக் கொண்டு இயங்குவது போல் மூன் றாகப் பிரிக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையும் இருக்கிறது!

சந்திப்பு : ப்ரியன்


இந்த சர்க்கஸ் எத்தனை நாளைக்கு? பாத்திருவோம்!
பெனசிர் புட்டோ
நவாஸ் ஷெரீப்
பாக். மக்கள் கட்சி
பாக். முஸ்லிம் லீக்
குவாமி கட்சி
முதல்ல ஊசிப் பட்டாசு... இப்ப லக்ஷ்மிப் பட்டாசு...
என் பங்குக்கு இந்தா, புஸ்வாணம்!
பாரம்பரக் குற்றச் சாட்டுக்கள்
ஆட்டம்பாம்
முதல்வர்
ஆளுநர்
இந்த ஆளு, யாரை டேவிட்டுன்னு சொல்றான்?... யாரை கோலியாத்துன்றான்?... சவுல் மன்னன் யாரு? பெலிஸ்தியர் யாரு? சவுல்ராஜா மகன் யாரு? மகன் யாரு? ஒரு இழவும் புரியலையே, கதையை வேற பாதியிலேயே நிறுத்திட்டான்...
BIBLE



ௐ
கல்கி



1993
அக்டோபர் 31
மலர் : 52
இதழ் : 14
ஸ்ரீமுக
ஐப்பசி 15

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

ஆளுனர் Vs முதல்வர்!

தமிழக ஆளுனருக்கும் முதல்வருக்கும் இடையே ஒரு பனிப்போர் தொடங்கி, ஜாம் ஜாம் என்று நடந்து வருகிறது. பூகம்ப நிவாரணத்துக்கு இருவரும் தனித்தனியே நிதி திரட்டுவதில் தொடங்கி, 'தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கெட்டு விட்டதாக 200 பக்க அறிக்கை தயாரித்துள்ளார் ஆளுனர்' என்று பேசப்படுவது வரை, இந்தப் பனிப்போர் தீவிரமடைந்துள்ளது.

சென்னாரெட்டி தமிழக ஆளுனராக நியமிக்கப்பட்டதிலிருந்தே இந்த கைய நிலை உருவாகும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். காரணம், சென்னா ரெட்டி தீவிர (காங்கிரஸ்) அரசியல்வாதியாக இருந்து ஆளுனரானவர். ஆளுனர் பதவியை ஓர் அலங்காரப் பதவியாக எண்ணாதவர். ஏற்கெனவே ஆளுனராக இருந்த மாநிலங்களிலும் தாம் பதவி வகிப்பதை அழுத்தம் திருத்தமாக அவ்வப்போது புலப்படுத்திக் கொண்டவர். 'அ.தி.மு.க.வுக்கும் காங்கிரஸுக்கும் இடையே உறவு முறிந்து விட்டதால், சென்னா ரெட்டி வாண வேடிக்கை நடத்துவார்' என்று ஊகிக்கப்பட்டது. ஆனால் சென்னா ரெட்டி வாண வேடிக்கை காட்டுவது மட்டுமின்றி டென் தௌஸண்ட் வாலா எலெக்ட்ரிக் பட்டாசுக் கருவையே கொளுத்தி விட்டிருக்கிறார்! அது படார் படாரென்று செவிப்பறை கிழிய, சதா வெடித்துக் கொண்டே இருக்கிறது!

ஜெயின் உண்ணாவிரதத்தின் போதே அவர் தம்மைக் கலந்தாலோசிக்காமல் திடீரெனச் செயல்பட்டது தமக்குப் பிடிக்கவில்லை என்பதைக் காட்டிக் கொண்டார். ஆர்.எஸ்.எஸ். கட்டட வெடிகுண்டுச் சம்பவத்தையொட்டி அதிகாரிகளை ஓர் உலுக்கு உலுக்கினார். எஸ்.ஆர்.பி. - போலீஸ் மோதலின் போது காவல் துறையிடம் விளக்கம் கோரினார். தேர்தலின் போது நடந்த அசம்பாவிதங்களுக்குத் தலைமைச் செயலரையே தட்டிக் கேட்டார்.

எஸ்.டி.எஸ்ஸுக்குப் பொத்துக் கொண்டு வந்து விட்டது கோபம்! "ஒரு சூப்பர் முதல்வராக ஆளுனர் செயல்படுகிறார்" என்று அவர் குற்றம்சாட்ட, பனிப்போர் ஒரு தீவிர கட்டத்தை அடைந்தது. சட்டசபை கூடுவதற்கான கோப்புகளை ஆளுனர் தாமதப்படுத்த, ஜெ. பதற்றமடைந்து புகார் செய்ய, ஆளுனர் மாளிகை தொடர்பான கோப்புகள் தலைமைச் செயலகத்தில் உறங்குவதாக பதிலுக்கு ராஜ் பவன் பாய்ச்சல் காட்ட, 'இதெல்லாம் எங்கே போய் எப்படி முடியப் போகிறதோ?' என்று சராசரி குடிமகன் கவலைப்படுகிறான். ஜெயலலிதாவின் சமீப டில்லி பயணம் (உடல்நிலை காரணம் காட்டி) ரத்து செய்யப்பட்டதானது, மேலும் பல வதந்திகளுக்கு இடமளித்துள்ளது.

தப்போ சரியோ, மக்கள் ஜெயலலிதாவுக்கு அமோகமான ஆதரவு தந்து, ஐந்தாண்டுகளுக்குப் பட்டா வழங்கி விட்டார்கள். தவறு செய்து விட்டதாக மக்கள் உணர்ந்தால், அடுத்த தேர்தலின் போது சரி செய்து விடுவார்கள். அது வரை காத்திருக்க வேண்டியதுதான். பெரிய அளவில் லஞ்ச ஊழல் நடந்திருக்கிறது; சட்டம் - ஒழுங்கு முற்றிலும் குலைந்து வருகிறது என்றால் ஆட்சியை டிஸ்மிஸ் செய்யலாம்தான். ஆனால் மக்கள் அவ்வாறு உணராத போதும், போதிய சாட்சியமின்றியும் டிஸ்மிஸ் ஆயுதத்தை ஜெ மீது பிரயோகிக்கும் போது, மக்களின் அனுதாபம் என்ற கேடயம் அவரைக் காத்து, மேலும் ஓர் ஐந்தாண்டுகளுக்குப் பதவியை உறுதி செய்து விடுகிற நிலை தோன்றக்கூடும். இது காங்கிரஸ் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டதாகி விடும்.

இந்தப் பனிப் போரைக் கைவிட்டு, ஆளுனரும் முதல்வரும் ஒருவரை ஒருவர் மதித்து நடந்து கொள்வதே ஆள்பவருக்கும் ஆளப்படுகிறவர்களுக்கும் நல்லது. 'சொல்பவர் யார்?' என்று பாராமல், 'கூறப்படுவது என்ன?' என்று கவனித்து, நியாயங்களை ஏற்கும் மனப்பக்குவம் பெற்றால், நிர்வாக இயந்திரம் மிகச் சிறப்பாக இயங்கி, மக்களுக்கு நன்மை பயக்கும்.

எதிர்ப்பது எதிர்க்கட்சிகளின் பணி. எதிர்க்கட்டும். ஆளுனர் எதிர்க்கட்சி போல் செயல்பட அவசியமில்லை; ஆளுனரை எதிர்க்கட்சியாக ஆட்சியில் உள்ளோர் எண்ண வேண்டியதுமில்லை. ஆட்சிக்கு உதவத்தான் ஆளுனர்.

'ராஜகம்பீரக் கரூர்!'



✱ திருமதி விசாலாட்சி



✱ கல்யாணராமன்

●● கரூரின் சரித்திர காலப் பெயர்களான கருவூர், வஞ்சி ஆகியவை அனைவரும் அறிந்த விஷயம். பலருக்கும் தெரியாத இன்னும் சில பெயர்கள் : ஆதிபுரம், கர்ப்பபுரி, வஞ்சுளாரண்யம், வஞ்சித் தாய் ஊர், பாஸ்கரபுரம், க்ஷண்மங்கல க்ஷேத்திரம், வீரசோழபுரம், முடிவழங்கி சோழபுரம், ஆதிமாபுரம், கரபுரி!

●● ஏழாம் எண் தேசிய நெடுஞ்சாலை (NH7) இன்றைய நமது அரசாங்கத்தாலோ அல்லது வெள்ளையர் ஆட்சியிலோ போடப்பட்டதல்ல. அது சரித்திர காலத்திலேயே இருந்திருக்கிறது. கங்கைக் கரையிலிருந்து, தக்கணத்து நகரங்களைத் தொட்டுக் கொண்டு கன்னியாகுமரி வரை தெற்கு நோக்கி வந்த ராஜபாட்டைதான் அது. அதுவும் கள்ளிக் கோட்டையிலிருந்து பாலக்காட்டுக் கணவாய் வழியாகக் கிழக்குக் கடற்கரை நோக்கி வந்த ராஜபாட்டையும் கரூரை ஒட்டித்தான் சந்தித்துக் கொண்டன என்பதால் பல்வேறு இன, மொழி மக்களின் தொடர்பு கரூருக்கு இருந்திருக்கிறது. கிரேக்க அறிஞர் தாலமி என்பவர் கரூரைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'உள்நாட்டு நகரங்களிலேயே கரூர் ஒரு ராஜ கம்பீரத்தோடு இருந்தது' என்கிறார்.

●● கரூரை ஒட்டி ஓடும் அமராவதி நதிப் படுகையில் இதுவரையில் சுமார் 25,000 பழங்கால நாணயங்கள் கிடைத்துள்ளதாக கரூர் வரலாற்றுப் பேரவையின் தலைவர் பேராசிரியர் ம. ரா. தங்கமணி குறிப்பிடுகிறார். இன்றைக்கும் ஆற்றுப் படுகையில் பழங்கால நாணயங்கள் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த நாணயங்களைத் தோண்டியெடுத்து விற்பனை செய்வதையே பலர் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகவே திருவண்ணாமலையிலிருந்து வந்து, அமராவதி ஆற்றுப் படுகையில் குடிசை போட்டுக் கொண்டு வசிக்கும் கண்ணன், ''ஒரு நாணயம் இரண்டு ரூபாய் மேனிக்கு என்னிடமிருந்து வாங்கிச் செல்ல ஆட்கள் வருவார்கள்!'' என்கிறார்.

●● டெலிவிஷன், ரேடியோ விளம்பரங்கள், பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்கள் ஆகியவை மக்களைக் கவரும் வண்ணம், யோசித்து யோசித்து வெளியிடுவதற்கு ஏராளமான விளம்பர ஏஜென்சிகள் இருக்கின்றன. ஆனால் கவர்களில் செய்யப்படும் விளம்பரங்களையும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்பதற்காக ஏதாவது ஏஜென்சி இருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? கரூரில் இருக்கிறது. அதை நடத்துபவர் கல்யாணராமன் என்கிற இளைஞர்.

●● தொன்மை வாய்ந்த கரூர் நகரில் நமது பாரம்பரிய இசையைக் கேட்டு ரசிக்க முடிவதில்லை என்பதில் திருமதி விசாலாட்சிக்கு ஏகப்பட்ட வருத்தம். ''என் கணவர் பள்ளியாசிரியராக இருந்ததால் அடிக்கடி மாற்றலாகும். எனினும் நான் அவ்வப்போது கரூருக்கு வந்து, நாரதகான சபாவில் நடக்கும் கர்நாடக இசைக் கச்சேரிகளைக் கேட்டு ரசித்து விட்டுச் செல்வது வழக்கம். என் கணவர் ஓய்வு பெற்றதும் கச்சேரி கேட்பதற்கென்றே நான் கரூரில் குடும்பத்தோடு செட்டில் ஆனேன். ஆனால் இப்போதோ இங்கே கச்சேரி நடப்பதே அபூர்வமாகி விட்டது. நாரதகான சபாவின் பாதி அரங்கைக் கல்யாண மண்டபமாக்கி விட்டார்கள்'' என்கிறார் பெருமூச்சுடன்.

– நமது நிருபர்கள்



✱ கண்ணன் : ''ஒரு நாணயம் ரெண்டு ரூபாய்!''

கல்கி தீபாவளி மலர் 1993



லட்சத் தீவு படம் : யோகா

பக்தி மார்க்கத்துக்குப் பண்டரிபுரம்... உல்லாசத்துக்கு லக்ஷத் தீவுகள்! இன்னும் அள்ளக் குறையாத அற்புதங்கள்!

● **வண்ண ஓவியங்கள்!**

- பாகவதத்தில் இராமாயணம்!
- பாரதி முதல் கண்ணதாசன் வரை – *கவிதைச் சித்திரங்கள்*
- மேதா தட்சிணாமூர்த்தி, மயிலாடுதுறை
- வண்ணச் சிரிப்பு : ஆகயா, எலெக்ஷன்! ஈபாவளி!

● **வண்ணப் புகைப்பட மடல்கள் :**

- லட்சத் தீவுகளுக்கு ஒரு விசிட்
- கொண்டபள்ளி பொம்மைகள்
- இன்னிசைக்கு ஓர் இளையராஜா
- கிருஷ்ணா நதிக் கரையில்...
- பண்டரிபுரத்தில் பக்தி பரவசம்

● **வணக்கத்துக்குரிய பெரியோர்கள் :**

- காஞ்சி முனிவர்கள் மூவர்
- தூப்புல் லக்ஷ்மி நரசிம்மன்

● **அமரர் கல்கி எழுதிய குலசேகரன் அதிர்ஷ்டம்**

மற்றும் பிரபலங்களின் ஏராள சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள்

விலை ரூ 40/-.
பதிவுத் தபால் செலவு ரூ. 8/-.

உடனடியாக உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளவும்; அல்லது கல்கி காரியாலயத்துக்கு எழுதவும்!

மானேஜர், கல்கி, சென்னை – 600 097.

ஜக்கையன் பதவி பறிக்கப்பட்டது ஏன்?



• சமரசவாதியா?



• போட்டி தேவையா?



• சிலையா அணையுமா?



• தூண் சரிந்தது



• ஜெயித்து விடுவாரா?

● அ. சோ. விசுவநாதன், காட்பாடி.

? இஸ்லாமியரின் புனிதத் தலமான ஹஸ்ரத்பாலில் உள்ள போராளிகளை வெளியேற்ற இந்திய ராணுவம் சூழ்ந்ததை பாகிஸ்தான் கண்டனம் செய்துள்ளதே?

! ஐ.எஸ்.ஐ. எனப்படும் பாகிஸ்தானின் உளவுத் துறை தான் பயங்கரவாதிகளை ஊக்குவித்து, இதுபோன்ற காரியங்களைச் செய்யச் சொல்கிறது. ஹஸ்ரத்பாலை ஆக்கிரமித்துள்ள பயங்கரவாதிகள், ராணுவம் தாக்கினால் தாங்கள் தயார் நிலையில் வைத்துள்ள வெடிகுண்டுகள் அப்புனிதத் தலத்தை அழித்து விடும் என்கின்றனர். பயங்கரவாதிகள் சில பிணைக் கைதிகளையும் வைத்திருப்பதாக ஊகம். ராணுவத்துக்குக் கெட்ட பெயர் வர வேண்டாம் என்பதற்காகத் தாமதித்து, பயங்கரவாதிகளுக்கு மின் சப்ளையும் குடிநீரும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. என்னைக் கேட்டால், ராணுவம் 24 மணி நேரம் நோட்டீஸ் தந்து விட்டு, அதன் பிறகு புனித தலம் அழியுமானால் அதற்கு பாகிஸ்தானும் அவர்கள் ஏவிய போராளிகளுமே பொறுப்பு என அறிவித்து விட்டு, உட்புகுந்து பயங்கரவாதிகள் மீது கடும் தாக்குதல் நடத்த வேண்டும். பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் தயக்கம் காட்டும் போதுதான் பாகிஸ்தானும் பிரச்னையைத் திரித்துப் பிரசாரம் செய்து, நம்மைக் கண்டிக்கவும் துணிவு பெறுகிறது.

● ப. பாக்கியலட்சுமி, கீழக்கிருஷ்ணன்புதூர்.

? பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு யார் காரணம்?

! ஆந்திராவில் இந்தப் பிரச்னை முன்னை விடவும் பல மடங்கு அதிகரித்து வருவதாக ஒரு செய்தி கூறுகிறது. பெண்களுக்கு எதிராகப் பெண்களே அநீதி இழைப்பதாகக் கூறி மாமியார்களை உதாரணம் காட்டுவார்கள். இது தவறு. கணவன்மார் உறுதியாக இருந்தால் மாமியார்களும் வாலைச் சுருட்டிக் கொள்வர்.

● அ. அப்துல்காதர், சிங்கபெருமாள் கோயில்.

? மறைந்த மன்னை நாராயணசாமி பற்றி?



• ...மேல்!



• பனிப்...



❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
அ. சோ. விசுவநாதன்,
4, 5வது குறுக்குத் தெரு,
பாரதி நகர் விரிவு,
காட்பாடி, வேலூர் - 632 007.

! ஐம்பது ஆண்டுக ளுக்கு மேலாக சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார். அண்ணாதுரையுடன் திரா விடர் கழகத்திலிருந்து வெளியேறி அன்று முதல் தி.மு.க.வின் விசுவாச ஊழியராக இருந்தவர். விவசாய மந்திரியாக விளங்கிய வர். ஒரு சோதனையான காலகட்டத்தில் தி.மு.க.வின் ஒரு தூண் சரிந்தது வேதனை தான். கலைஞருக்கு இரட்டிப்பு அதிர்ச்சி.

● பி. குமார், சேலம்.

? பாகிஸ்தானில் பேனசிர் ஆட்சி அமைப்பது பற்றி?

! பூரண மெஜாரிட்டி இருந்தாலே பாகிஸ் தானில் ஆட்சி கலகலப்பது உண்டு. முழு மெஜாரிட்டி இல்லாமலும் இதர கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றும் இன்று அமைந் துள்ள பேனசிர் ஆட்சி, அதன் முழு ஆயுட் காலத்துக்கு நீடிக்க வேண்டுமானால் பேனசிர் படுகட்டித்தனமாகச் செயல்பட வேண்டும்.

● பி. ஜெயப்பிரகாஷ், வேட்டைக்காரன் புதூர்.

? வை.கோவுக்கு ஆதரவாகத் தீக்குளித்து மரணமடைந்த தொண்டருக்குத் தலைமைத் தி.மு.க. நிதியுதவி அளிக்குமா, சார்?

! ஆசை, தோசை, அப்பளாம் வடை!

● கே. ரமேஷ், பள்ளிபாளையம்.

? தனி மனிதன் கோபத்துக்குக் கதிர்வீச்சு பேழை சென்னையைப் பயமுறுத்திக் கொண் டிருக்கிறதே?

! 'ஆபத்து ஒன்றுமில்லை' என்று விஞ்ஞா னிகள் அறிவித்தும் கூட, அச்சம் கவ்வத்தான் செய்கிறது - காரணம், அருகில் நடப்பதால். ஒரு தனிமனிதன் கோபத்துக்கு அணு குண்டுப் போர் தொடங்கி, கதிர்வீச்சிலே உலகமே அழியக்கூடும் என்பதை எத்தனை பேர் எண்ணிப் பார்க்கிறோம்? ஒரு தவறான பட்டனை அழுத்தப் போக கிளின்டன் சமீ பத்தில் ஒரு தவறான சொற்பொழிவை டீவி யில் படிக்க ஆரம்பித்து விட்டு, சட்டென விழித்துக் கொண்டு, தம்மைத் திருத்திக் கொண்டார். அணுப் போர் விஷயத்தில் பட் டனைத் தட்டி விட்டால் பிறகு திருத்திக் கொள்ளக் கூட வாய்ப்பில்லையே!

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? பம்பாயில், பெண்கள் ரயில் பெட்டியில் ஏற் பட்ட விபத்து பற்றி...?

! இதெல்லாம் நமது கல்வி முறையில் உள்ள குறைகளையே எடுத்துக் காட்டுகின்றன. ஆபத்து சமயத்தில் நிதானம் இழக்காமல் சிந்திக்கக் கற்றுத் தரப் பட வேண்டும். அபாயச்சங்கிலியைப் பிடித்திழுத்து ரயிலை நிறுத்தாமல் ஒருவரைப் பின் பற்றி பிறரும் (பலி) ஆடுகள் போல் பதற் றமடைந்து வெளியே குதிப்பா னேன்? குதித்தவர்கள் எதிர்ப் பக்க ரயில் வரும் தண்டவாளத்திலேயே நிற்பானேன்? பயத்தில் மூளை மழுங்குவதே காரணம்.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? அண்ணா சாலையில் இந்திரா காந்தி சிலை அமைக்கத் தமிழக அரசு தடைவிதித்திருப் பது சரியா?

! அது, கூறப்படும் காரணத்தைப் பொறுத் தது. இந்திரா காந்தி சிலையை எங்கு வேணுமானாலும் வைக்கலாம். ஆனால் அண்ணா சாலை போக்குவரத்தைத் திசை திருப்ப முடியாது. சரியான காரணம் எனில் கண்ணியமாக ஏற்பதே நல்லது.

● விவேக், திருவெண்ணெய்நல்லூர்.

? பள்ளி மாணவிகளே குழந்தைகளைக் கடத் துகிறார்களே, நாடு முன்னேறி விட்டதல் லவா?

! கிண்டல் ஒருபுறமிருக்க, அவர்கள் ஏன் அப்படி நடந்து கொண்டார்கள் என்ற மன நலரீதியான ஆய்வு தேவை. பத்திரிகைகள் உள்ளிட்ட நமது வெகுஜன தொடர்பு சாத னங்கள் பலவும் மக்களுக்கு நல்லதை விடத் தீமையே அதிகம் விளைவிக்கின்றன என்பது தெரியவரும்.

● ஏ. கருமார், காட்டுக்கானூர்.

? ஹர்ஷத் மேத்தா போன்ற குற்றவாளி களைக் கல்கியும் பேட்டி கண்டு வெளியிட வேண்டுமா?

! அவரை நாங்கள் ஹீரோ ஆக்கவில்லை என்பதை திருபரின் கேள்விகளே நிரூபிக் கும். மேலும் அவர் நீங்கள் குறிப்பிடுவது போல் குற்றவாளி அல்ல; குற்றம்சாட்டப் பட்டிருப்பவரே.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? தியாகிகளுக்காக வாழப்பாடியார் இருந்த உண்ணாவிரதம்?

! இன்று ஒருவேளை உணவு துறப்பது கூட உண்ணாவிரதமாகி விட்டது! காந்தியத் தத் துவங்கள் இன்று எவ்வளவு நீர்த்துப் போய் விட்டன என்பதன் அடையாளம்தான் இந்த அடையாள உண்ணாவிரதங்கள்.

● அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.


? பூலான்தேவி சட்டசபைத் தேர்தலில் ஜெயித்து விடுவாரா?

! அரசியல் கொள்ளைக்காரர்களுக்கும், கொள்ளைக்காரர் அரசியலில் புகுவதற்கும் அப்படியொன்றும் ரொம்ப வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

● தெ. க. திலீபன், வத்ராயிருப்பு.

? தமிழக அரசின் தில்லி பிரதிநிதி - ஜக்கையன் பதவி பறிக்கப்பட்டது ஏன்?

! முதல்வருக்கும் ஆளுனருக்கும் இடையே நிலவும் பனிப்போரைப் புரிந்து கொள் ளாமல் புதுதில்லியில் சென்னாரெட்டியை அவர் பூங்கொத்து கொடுத்து வரவேற்ற அசட்டுத்தனம்தான்!


குமரன் சில்க்ஸ்
12, நாகேஸ்வரன் சாலை, (பனகல் பார்க் எதிரில்)
தியாகராயநகர், சென்னை-600 017.
போன்: 443544, 447777
எங்களுக்கு கிளைகள் எங்கும் கிடையாது
UIPG:KS:3:93

முதலீடு கோரும் முதல்தர நிறுவனங்கள்!

DENMUR FAX ROLLS LTD.

செய்தித் தொடர்பு என்பது இன்று எல்லாத் துறைகளிலும் மிக முக்கியமானதாகி விட்டது. இதிலே FAX என்பது பெரும்பங்கு வகிக்கிறது. இதன் மூலம் கடிதமோ, தகவலோ எதுவாயினும் இந்தியா வின் எந்த பாகத்திலும், அல்லது அயல் நாட்டிலும் கூட அப்படியே மறுபிரதி எடுத்தது போல் போய்ச் சேருகிறது. இதற்கு அடிப்படைத் தேவைகளுள் ஒன்று விசேஷரக காகிதம். குறிப்பிட்ட உஷ்ணத்தில் ரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகிய, மிக மென்மையான உணர்வுகளையும் ஏற்கின்ற காகிதம். இந்த FAX காகிதத்தைத் தற்போது ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அயல் நாடுகளில் வசிக்கும் சில இந்தியர்கள், இந்தத் தாளுக்கு, நாளுக்கு நாள் தேவை அதிகரித்து வருவதை உணர்ந்து, கோவையில், ஆண்டொன்றுக்கு 1500 டன் Fax தாள் உற்பத்தி செய்ய ஓர் ஆலை அமைக்க இருக்கிறார்கள்.

ரூபாய், 19 கோடி மூலதனம் தேவைப்படுகிறது. இதில் பொது மக்களிடமிருந்து 6.50 கோடி கோருகிறார்கள். மீதியை வங்கிக் கடன்களும், ஆலை தொடங்குகிறவர்களின் மூலதனமும் இட்டு நிரப்புகிறது. ஒவ்வொன்றும் பத்து ரூபாய் பெறுமானமுள்ள 65 லட்சம் பங்குகளுக்கு பொது மக்கள் நவம்பர் மூன்றாம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம். இந்த நிறுவனம், முதல் ஆண்டே ஒரு கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்க முடியும் என்று கருதுகிறது. இரண்டாம் ஆண்டு, இது நாலு கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. Fax தாளுக்கு, நாளுக்கு நாள் தேவை அதிகரிக்கப் போகிறது என்பதால், தாராளமாக முதலீடு செய்யலாம். பங்குகள் விலை உயர நிறையவே வாய்ப்புண்டு.

MERCARD LTD, MADRAS

“கிரெடிட் கார்ட்” என்பது இன்று மிக அதிகமாகப் புழக்கத்துக்கு வந்து விட்டது. மணிபர்ஸில் கொஞ்சமே பணம் எடுத்துப் போகிறார்கள். ஓட்டலில் தங்கினாலும், நகையோ, புடவையோ, வீட்டுச் சாதனங்களோ எது வாங்கினாலும் கிரெடிட் கார்ட்தான் காட்டுகிறார்கள். உறுப்பினர் கணக்கில் பற்று வைத்து, கிரெடிட் கார்ட் நிறுவனம் பில்லுக்குப் பணம் தந்து விடுகிறது. உறுப்பினருக்கு மாதா மாதம் கணக்கு விவரம் அனுப்புகிறது. இன்று பல நிறுவனங்களும் வங்கிகளும் கிரெடிட் கார்ட் வசதி செய்து தருகின்றன. இவற்றுள் “மெர் கார்ட்” மிகவும் பிரசித்தி. இதனை மெர்கண்டைல் கிரெடிட் கார்ப்பரேஷன் நிறுவனம், ஏஎல். வடிவேலு தலைமையில் நடத்துகிறது. 4200 மெர் கார்ட் உறுப்பினர்கள் உள்ளனர். இந்த நிறுவனம் தற்போது தனது மூலதனத்தை அதிகரிக்கவும், வாடகைக்கு இயந்திரங்களை வாங்கி அளிக்கும் லீஸிங் துறையில் விரிவாக்கம் செய்யவும் விரும்புகிறது. இதற்காக 36 லட்சம் பங்குகளை ஒவ்வொன்றும் ரூ 10 பெறுமானத்துக்கு வழங்குகிறது. நல்ல முதலீடாகவே கருதலாம்.

TAMILNADU PETRO PRODUCTS

‘ஸ்பிக்’ நிறுவனமும் தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷனும் இணைந்து கூட்டுத் துறையில் நடத்தி வரும் நிறுவனம். சலவை சோப்புகளில் பயனாகும் ரசாயனப் பொருளைப் பிரதானமாக உற்பத்தி செய்து வருகிறது. சென்னை அருகே மணலியில் ஆலை அமைந்துள்ளது. மிகக் குறுகிய காலத்தில் நிறைய முன்னேற்றம் கண்டு, 54 கோடி மூலதனத்துக்குக் கடந்த ஆண்டு மட்டும் 20 கோடி லாபம் பார்த்திருக்கிறது. இப்போது, மருந்துகள் உற்பத்தி, மற்றும் பூச்சிக் கொல்லிகள் உற்பத்தியில் பயனாகும் சில ரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் துறையில் விரிவாக்கம் செய்ய விரும்புகிறது. இதற்கு 104 கோடி மூலதனம் தேவை. இதற்காக ஏற்கெனவே பங்குதாரர்களாக உள்ளோருக்குப் புதிய பத்து ரூபாய் பங்குகளை ரூ 15 கூடுதல் விலைக்கு விநியோகிக்கிறது. தவிர, புதிய பங்குதாரர்களுக்கும் ரூ 20 கூடுதல் விலைக்குப் பத்து ரூபாய் பங்குகளை வழங்குகிறது. இவ்வாறு மொத்தம் 98 கோடி திரட்டப்படுகிறது. இன்று இந்த நிறுவனத்தின் பங்கு ரூ 39க்கு விலை போகிறது என்பதைக் கவனத்தில் கொண்டால் நல்ல முதலீடு என்பது சொல்லாமலே விளங்கும்!

– வி. கோபாலன்

பஜனை முடிந்தது. சாஸ்திரியார் ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்து கற்பூர ஹாரத்தி காட்டினார். எல்லோரும் சேர்ந்து மங்களம் பாடினார்கள்.

பிறகு, தீக்ஷிதர் எழுந்திருந்து பிரஸாத விநியோகம் செய்ய ஆரம்பித்தார். பஜனையில் இந்தப் பணியை அவர்தான் ஏற்றுக் கொள்வது வழக்கம். விநியோகம் செய்து வரும் போது, தம்முடைய பிள்ளைகளுக்கு மட்டும் தெரிந்தும் தெரியாமலும் இரண்டு மூன்று தடவை சுண்டல் கொடுப்பார். அந்தப் பிள்ளைகளும் தகப்பனாரின் நோக்கத்தை அறிந்தவர்களாய் மூலைக்கு மூலை வந்து சுண்டல் வாங்கி மடி நிறையக் கட்டிக் கொண்டு போவார்கள்.

இன்று வழக்கம் போல் தீக்ஷிதர் சுண்டல் கொடுத்துக் கொண்டிருக்கையில் திடீரென்று மடத்தின் வாசலில் ஏதோ கூக்குரல் கேட்டது. மழை, காற்று சப்தத்துக்கிடையே பலர் ஓடி வரும் சப்தம் போல் இருந்தது. 'இது என்னவாயிருக்கலாம்?' என்று யாரும் யோசிப்பதற்கு முன்னால், படீரென்று மடத்தின் வாசல் கதவு திறந்தது. திறந்த கதவு வழியாகத் திமுதிமுவென்று சொட்ட நனைந்திருந்த பெண் பிள்ளைகளும் குழந்தைகளும் உள்ளே பிரவேசித்தார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து மழைச் சாரலும் உள்ளே புகுந்து அடித்தது.

பஜனை மடத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் அவ்வளவு பேருடைய கண்களும் ஏக காலத்தில் வாசற்படிப் பக்கம் திரும்பி இந்தக் காட்சியைக் கண்டன. அவர்களில் பலருக்குக் கண் விழி பிதுங்கி விடும் போல் இருந்தது.

அதே சமயத்தில், உள்ளே புகுந்த பெண் பிள்ளைகளும் இவர்களைப் பார்த்து விட்டுப் பயப் பிராந்தி கொண்டவர்களைப் போல் திகைத்து நின்றார்கள். பின்னால் வருகிறவர்களுக்குக் கூட இடங்கொடாமல் அவர்கள் வாசற்படியண்டை நின்று விட்டார்கள்.



தியாக பூமி


ஒரு கணநேரம், இந்தக்காட்சி. அடுத்த கணத்தில், ''ஐயையோ! இது என்னடா இது! சேரிப் பொம்பிளைகள் போலிருக்கே!'' என்று முத்துசாமி அய்யர் ஒரு கூச்சல் போட்டார்.

''அட கிரகசாரமே! இது என்ன கூத்து?'' என்று சாமா அய்யர் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்தார்.

''ஓகோகோ! கலி முத்திப் போச்சு!'' என்றார் ராமய்யா வாத்தியார்.

நாணு கனபாடிகள் வாயிலிருந்த கண்டலை விழுங்கிக் கொண்டே, ''விரட்டு! விரட்டு! எல்லாருமா உக்காந்திருக்கயளே!'' என்று கூவினார்.

ஐந்தாறு பேர் எழுந்திருந்து, கையை ஓங்கியவண்ணம் வாசற்படியை நோக்கிச் சென்றார்கள். அவர்களுக்கெல்லாம் முன்னால், கையில் விசிறிக் கட்டையுடன் தீக்ஷிதர் சென்றார்.



''அபஸ்மாரங்களா!''

''மூதேவிகளா!''

''இங்கே எங்கே வந்தயள்?''

''அவ்வளவு தைரியங் கொடுத்துப் போச்சா?''

''போ! போ! போ!''

''பீடை! தரித்திரம்!''

இப்படி இவர்கள் விரட்டி அடிக்க, அந்தப் பெண் பிள்ளைகள் தங்களுடைய குழந்தை குட்டிகளைக் கையினால் வளைத்துப் பின்னால் தள்ளியவண்ணம் தாங்களும் பின்னால் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகத்தில் ஏக்கமும் பீதியும் குடிகொண்டிருந்தன. அவர்களில் ஒரு ஸ்திரீ சற்றுத் துணிச்சலாக நின்று, ''சாமி! கோவிச்சுக்காதீங்க. தெரியாம வந்துட்டோங்க!'' என்றாள்.

''தெரியாத வந்துட்டீங்களா? திமிரைப் பார்த்தயோல்லியோ திமிரை! அக்கிரகாரத்துக்குள் வரக் கூடாதுன்னு தெரியாதா?''

''இல்லேங்க! பட்டிக்கார ஐயா, பஜனை மடத்துக்குப் போன்னு சொன்னாங்க. அதைக் கேட்டு வந்துட்டோங்க.''

''என்ன! பட்டிக்காரன் சொன்னானா? அவன்தான் இந்த சாஸ்திரி இடங் கொடுத்துக் கொடுத்துத் திமிர்பிடிக்கக் கிடக்கானே? அவன் சொன்னா, நீங்க வந்துடறதோ?''

''அவ்வளவு துணிச்சலா உங்களுக்கு வந்துடுத்து?''

''நாளைக்கே சேரியிலே நெருப்பை வச்சுக் கொளுத்தச் சொல்றேன் பாரு!''

''சாமி சேரியிலே நெருப்பு வைக்கிறதுக்கு ஒண்ணுமில்லீங்க; எல்லாம் வெள்ளம் அடிச்சுட்டுப் போயிட்டுதுங்க!''

''போயிடுத்தா? போயிடுத்தோல்லியோ? நீங்கள்ளாம் இப்படித் திமிர்புடிக்க

அமரர் கல்கி

அலைஞ்சாக்கே, ஸ்வாமியே பார்த்துத் தண்டிக்கடறார்.''

இதற்குள்ளாக, அந்த ஸ்திரீகள், குழந்தைகள் எல்லாரும் மறுபடியும் வாசற்படியைத் தாண்டி மடத்துக்கு வெளியே கொட்டுகிற மழையில் சென்றார்கள்.

மேற்சொன்னதவ்வளவும் இரண்டு நிமிஷ நேரத்திற்குள் நடந்தது. சேரி ஜனங்கள் உள்ளே வந்த போது, சம்பு சாஸ்திரி தம்புராவை எடுத்து அதனுடைய உறையில் போட்டுக் கொண்டிருந்தார். சாவித்திரி, பூஜை சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். இரண்டு பேரும் அப்படியே பிரமித்து நின்று, நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் நடந்த சம்பாஷணை அரை குறையாக அவர்கள் காதில் விழுந்தது.

சேரி ஜனங்கள் மறுபடி வெளியில் போனதும், சாஸ்திரி, சாவித்திரியைப் பார்த்து, ''குழந்தை! சேரியிலே ஏதோ ஆபத்துப் போல் இருக்கிறது. இல்லாவிட்டால் இவர்கள் இப்படி வந்திருக்க மாட்டார்கள். நாம் போய் விசாரிக்கலாம், வா!'' என்றார்.

அவர்களை வெளியிலே விரட்டி விட்டுத் திரும்பி வந்தவர்கள் சாஸ்திரியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''ஓய் சம்பு சாஸ்திரி! பார்த்தீரோல்லியோ; எல்லாம் உம்மால் வர்றதுதான் காணும்'' என்றார் தீக்ஷிதர்.

''அதிலே என்ன சந்தேகம்? இந்த மனுஷன் இடங்கொடுத்துக் கொடுத்துத் தான் ஊரே இப்படிக் கெட்டுப் போச்சு!'' என்றார் முத்துசாமி அய்யர்.

''ஓய்! உம்ம பட்டிக்காரன்தான் இங்கே வரச் சொன்னானாங்காணும். அந்தப் பயலை ஒழிச்சுட்டு மறு காரியம் பாரும்னா, நீர் கேக்கறீரா? அவனைத்தான் தலைமேலே தூக்கி வச்சுக்கிறீரே?'' என்றார் சாமா அய்யர்.

''உம்ம பஜனையிலே இடி விழ!'' என்று தீக்ஷிதர் முத்தாய்ப்பு வைத்தார்.

சாஸ்திரிகள் சாவதானமாக, ''என் மேலே என்னத்துக்குக் கோவிச்சுக்கறயள்? நல்லானும் அப்படியெல்லாம் தப்புத் தண்டாவா ஒரு காரியம் செய்றவனில்லை. என்ன ஆபத்தோ, என்னமோ; நான் போய் விசாரிக்கிறேன். நீங்கள்ளாம் அவாவா ஆத்துக்குப் போய்ப் பேசாம தூங்குங்கோ! பொது விடிஞ்சாப் பாத்துக்கலாம்!'' என்றார். பிறகு சாஸ்திரியும், சாவித்திரியும் பஜனை மடத்தை விட்டு வெளியில் சென்றார்கள்.

15. அடைக்கலம்

அன்றிரவு சுமார் நடுநிசிக்கு, சம்பு சாஸ்திரியாரின் மாட்டுக் கொட்டகையில் ஒரே கலகலப்பாயிருந்தது. அந்தக் கொட்டகை நாலு பக்கமும் தாழ்வாரமும், நடுவில் பெரிய முற்றமுமாக அமைந்தது. ஒரு தாழ்வாரத்தில் நெல் குதிர்கள் வைத்திருந்தன. மற்ற மூன்று தாழ்வாரங்களில் எப்போதும் மாடு கட்டியிருப்பது வழக்கம். இன்று மேலண்டைத் தாழ்வாரத்திலிருந்த மாடுகளையெல்லாம் கீழண்டைத் தாழ்வாரத்திலேயே கொண்டு வந்து நெருக்கியடித்துக் கட்டியிருந்தார்கள். மாடுகளுக்கும் பாஷை உண்டு, அவை ஒன்றோடொன்று பேசிக் கொள்ளும் என்று சொல்வது உண்மையானால், சம்பு சாஸ்திரியாரின் மாடுகள் அப்போது பின்வருமாறுதான் பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும் :

''ஹம்மா! இந்த மனுஷப் பிராணிகளைப் போலச் சுயநலம் பிடித்த பிராணிகளை நான் பார்த்ததேயில்லை.''

''ஏற்கெனவே மழையிலும் குளிரிலும் அவஸ்தைப்படுகிறோம். பாதி நிசிக்கு வந்து நம்மைத் தூக்கத்திலிருந்து எழுப்பித் தொந்தரவு செய்கிறார்களே?''

''முற்றத்தின் வழியாக வந்த போது மேலே மழை பெய்ததில் சொட்ட நனைந்து போனேன்.''

''உனக்கென்ன கேடு! என் குழந்தைக்கு உடம்பு குளிரினால் நடுங்குகிறது, பார்!''

''உங்கள் கஷ்டத்தையே நீங்கள் சொல்கிறீர்களே தவிர, அந்த மனுஷர்களின் அவஸ்தையைப் பார்க்கவில்லை. முற்றத்தில் சற்று நனைந்ததற்கு இப்படிப் புகார் செய்கிறீர்களே? இவர்கள் ஆற்றங்கரை மேட்டிலிருந்து நனைந்து கொண்டே வந்திருக்கிறார்களே?''

''ஹாமாம்! இவர்கள் எதற்காக அங்கிருந்து ஓடி வந்திருக்கிறார்கள்?''

''இது தெரியாதா? இவர்கள் இருந்த கூரைக் குச்செல்லாம் மழையிலே விழுந்திருக்கும். நம்மைப் போல் இந்த ஜனங்களுக்கு ஓடு போட்ட வீடு இருக்கிறதா, என்ன?''

''அதற்காக, பிச்சைக்காரன் குடிசையிலே சனிசுவரன் புகுந்தாற்போல், இவர்கள் நம்முடைய இடத்தைப் பங்குபோட்டுக் கொள்ள வந்து விட்டார்களாக்கும்?''

''காலையிலே எஜமான் வரட்டும். அவரிடம் நான் புகார் சொல்கிறேனா இல்

''நம்ப தலைவரு ரொம்பத்தான் சகுனம் பார்க்கிறாரு...!''

''என்ன பண்றாரு...?''

''அவரோட பூணைப்படையில உள்ளவங்க குறுக்க வந்தாக்கூட, கெட்ட சகுனம்னு சொல்றாரு...!''

- திவா



லையா, பார்!''

''இவர்களாக ஒன்றும் வந்திருக்க மாட்டார்கள். எஜமான் சொல்லித்தான் வந்திருப்பார்கள்.''

''போகட்டும்; இவர்கள் வந்ததுதான் வந்தார்கள். நம்முடைய இடத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள். எதற்காக இப்படிக் கூச்சல் போடுகிறார்கள்? இரையாமல் இருந்து தொலைந்தால், நாம் தூங்கலாமல்லவா?''

''ஹொஹ்ஹோ! உனக்கு அது தெரியாதா? மனுஷ ஜாதியினிடத்தில் அதுதான் பெரிய குறை. அவர்களுக்குச் சப்தம் போடாமல் பேசவே தெரியாது. அவர்கள் மேல் குற்றம் இல்லை. சுவாமி அப்படி அவர்களைப் படைத்து விட்டார்!''


மேற்கண்டவாறு மாடுகள் நிஜமாகவே பேசிக் கொண்டனவா என்று நமக்குத் தெரியாது. ஆனால் அப்போது உண்மையில் கீழண்டைத் தாழ்வாரத்தில் மட்டும் கூச்சல் பலமாகத்தான் இருந்தது. சேரி ஜனங்கள் - ஆண்கள், பெண்கள், குழந்தைகள் - அவ்வளவு பேரும் அங்கே இருந்தார்கள். சிலர் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தார்கள். சிலர் பசியினால் கத்திய குழந்தைகளைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

பட்டிக்கார நல்லானும் அங்கே காணப்பட்டான். அவன் ஒரு குதிரின் இடுக்கிலிருந்து பெரிய சாக்குச் சுருள் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து, ''ஏ பிள்ளைகளா! கொழந்தைகளைக் கொன்னுடாதீங்க. தலைக்கு ஒரு சாக்கை விரிக்கப் போடுங்க!'' என்றான்.

அந்தச் சமயத்தில், மாட்டுக் கொட்டகையின் வாசற்கதவு திறந்தது. சம்பு சாஸ்திரியும் சாவித்திரியும், கையில் ஹரிகேன் லாந்தருடனும் பித்தல் குடையுடனும் உள்ளே பிரவேசித்தார்கள். அவர்களைக் கண்டதும் மாடு கன்றுகள் எல்லாம், ''ஹம்மா! ஹம்மா!'' என்று கத்தின. அவர்களை வரவேற்பதற்காகத்தான் அப்படிக் கத்தினவா அல்லது தங்களைத் தொந்தரவுபடுத்தியது பற்றி எஜமானிடம் புகார் சொல்லிக் கொண்டனவா என்று நமக்குத் தெரியாது.

அதே சமயத்தில், கீழண்டைத் தாழ்வாரத்திலும் கலகலப்பு ஏற்பட்டது. ''சாமி! சாமி! நீங்க மவராசரா இருக்கணும். இந்த மழையிலேயும் குளிர்லேயும் தங்க இடங் கொடுத்தீங்களே? இல்லாட்டா, எங்க கதி என்ன ஆயிருக்கும்? பிள்ளை குட்டிங்கள்ளாம் செத்துப் போயிருக்குமே?'' என்று தலையாரி வீரன் சொன்னான். ''சாமி! நீங்க நல்லாயிருக்கணும்!'' என்று பல குரல்கள் ஏககாலத்தில் கூவின. சிலர் தரையில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள்.

பட்டிக்காரன் நல்லான், ''இந்தக் கழுதைகளுக்கு இடங்கொடுத்ததே பிசகுங்க. இப்பக்கூட விரட்டியடிக்கடலாமான்னு



''எங்க ஆபீஸ் மானேஜருக்குத் தாராள மனசு!''

''என்ன விஷயம்...?''

''பூகம்ப நிதிக்கு நாங்கள்லாம் ஒருநாள் சம்பளத்தைத்தான் கொடுத்தோம். அவர் ஒருநாள் லஞ்சத்தையே தந்துட்டார்!''

- ஞா. ஞானமுத்து

தோணுது. 'பஜனை மடத்திலே சாஸ்திரி அய்யா இருப்பாரு, போய்க் காலிலே விழுங்க'ன்னு நான் சொன்னா, இதுங்க பஜனை மடத்துக்குள்ளேயே பூந்துட்டுதுங்களே! பெரிய எழவால்ல போச்சு!'' என்றான்.

''நீ பின்னோட வந்திருக்க வேணும், நல்லான். பொம்பிளைகள் என்னத்தைக் கண்டார்கள்? அதிலும் இந்த மழையிலும் காத்திலும்? பாவம், ஒண்ணுமே தெரியாமே திகைச்சுப் போய் நின்றார்கள். அப்புறந்தான் எனக்கு இந்த யோசனை தோணித்து. ராத்திரி மாட்டுக் கொட்டாயிலேயிருந்தால், பொழுது விடிஞ்சு பாத்துக்கலாம் என்று...''

''இதுக்குக் கூட நம்ம அக்கிரகாரத்து ஐயமாரெல்லாம் நாளைக்கு என்ன சொல்லப் போறாங்களோ?''

''ஒண்ணும் சொல்ல மாட்டார்கள், நல்லான்! ஆபத்துக்குத் தோஷமில்லைன்னு அவாளுக்குத் தெரியாதா? இல்லாட்டா, நடுராத்திரியிலே இந்த ஜனங்கள் குழந்தைகளையும் குட்டிகளையும் வைத்துக் கொண்டு என்ன பண்ணுவார்கள்?''

இந்தச் சமயத்தில், குழந்தை ஒன்று 'வீல்' என்று கத்துகிற சப்தம் கேட்டது.

''ஏ காத்தாயி! ஏன் பிள்ளையைப் போட்டு அடிக்கிறே!'' என்றான் நல்லான்.

''பின்னே என்வாங்க! உயிர் பிழைச்சதே புண்ணியம். இப்போ, வவுத்தைப் பசிக்குதுன்னா, நான் என்ன செய்றது?'' என்றாள் காத்தாயி.

இதைக் கேட்ட சாவித்திரி, ''அப்பா! நான் ஆத்துக்குப் போய் அவல் இடிச்சிருக்கே, அதிலே கொஞ்சம் எடுத்துண்டு வரட்டுமா? குழந்தைகள் பசி, பசின்னு கத்தறது பரிதாபமாயிருக்கே!'' என்றாள்.

''சித்திக்குத் தெரிஞ்சால், 'ஙொள்ளு'ன்னு விழுவாளே, அம்மா! இருந்தாலும் பாதகமில்லை. போய்க் கொண்டு வா! ஜாக்கிரதையாய், சேத்திலே கீத்திலே விழுந்துடாமே வா!'' என்றார்.

அப்போது பட்டிக்காரன் நல்லான், ''நாளைக்கு இத்தனைக் கித்தனை ஊரிலே வம்பும் தும்பும் வந்து சேரப் போகிறது'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

(தொடரும்)

சிறுவனுக்காகக் குனிந்த பெருமாள்; பக்தனுக்கு இடம் தந்த இறைவன்!

ஒரு சமயம், பெருமாளுக்கு நெறி தவறாமல் பூஜைகள் செய்து வந்த பட்டாச்சாரியார் ஒருவரின் உறவினர் இறந்து விட்ட தீட்டு காரணமாகத் தமக்குப் பதிலாகப் பெருமாளுக்கு பூஜை செய்ய, சிறுவனான தமது மகனை அனுப்பி வைத்தார். பெருமாளுக்கு நிலைமாலை சார்த்துவது வழக்கமாதலால், அன்றும் ஒரு பக்தர் நிலை மாலை வாங்கி வந்து, சிறுவனிடம் கொடுத்துப் பெருமாளுக்குச் சார்த்தச் சொன்னார்.

பெருமாள் உயரமாக இருந்தபடியால் சிறுவனால் நிலைமாலை சார்த்த முடியவில்லை. சிறுவன் கஷ்டப்படுவதைக் கண்ட பெருமாள் உடனே தமது தலையைக் குனிந்து கொடுத்துச் சிறுவன் நிலைமாலை சார்த்த உதவினார் என்பது ஐதீகம். அதனால் தான் கரூரை ஒட்டியுள்ள தான்தோன்றி மலையிலிருக்கும் கல்யாண வேங்கடரமணர் இன்றும் குனிந்த நிலையிலேயே பக்தர்களுக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பெருமாளுக்கு உடையார், இல்லார் என்கிற வித்தியாசமெல்லாம் கிடையாது என்பதற்கு இங்கு நடைபெறும் அபிஷேகமே சாட்சி. யாருக்காகவும் இங்கே ஸ்பெஷல் அபிஷேகம் செய்யப்படுவதில்லை. எத்தனை பக்தர்கள் அபிஷேகப் பொருட்கள் கொண்டு வந்தாலும் உச்சிக் கால பூஜைக்கு முன்பு நடைபெறும் அபிஷேகத்தின் போது, அத்தனை பக்தர்களின் பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்து, ஒரே யொரு முறைதான் அபிஷேகம் செய்யப்படுகிறது. அப்போது தவறினால் மீண்டும் அடுத்த நாள்தான் அபிஷேகம்.



✱ பசுபதீஸ்வரர் ஆலயம்



✱ தான்தோன்றி மலை

பெருமாள் இங்கு மேற்கு நோக்கி இருப்பது ஒரு விசேஷமென்றால், தாயார் சன்னதி இல்லாதது இன்னொரு விசேஷம். திருப்பதி மாதிரி இங்கும் தாயாரை




✱ பக்தர்களின் காணிக்கை...

மார்பிலேயே வைத்திருக்கிறார் பெருமாள். இதன் காரணமாகவே, திருப்பதிக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைகளைக் கூட அங்கு சென்று செலுத்த வசதிப்படாத பக்தர்கள், அவற்றை இங்கேயே செலுத்தி விடுகிறார்கள்.

சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்தக் குடைவரைப் பெருமாள் கோயி லின் இன்னொரு விசேஷம், இங்கு செலுத் தப்படும் செருப்புக் காணிக்கை. பெருமாள் தமக்குத் தேவைப்படும் போதெல்லாம், யாராவதொரு செருப்புத்தைக்கும் தொழிலாளியின் கனவில் தோன்றி, தமக்கு இன்ன அளவில் வலது கால் செருப்பு தேவை என்று சொல்வாராம். உடனே அந்தத் தொழிலாளி அந்த அளவில் ஒரு செருப்பைத் தைத்து வந்து காணிக்கை செலுத்துவதென்பது இங்கு வழக்கமாக நடைபெறும் ஒரு விஷயம். ''ஆனால், பெருமாள் ஏன் அனைவரிடமும் வலதுகால் செருப்பு மட்டும்தான் கேட்கிறார் என்பது இன்னும் புரிபடாத புதிராகத்தான் இருக்கிறது!'' என்கிறார்கள்.

சைவ - வைணவ ஒற்றுமைக்கும் இத்தலம் ஓர் எடுத்துக்காட்டு. காரணம், முன்பு வாழ்ந்திருந்த மகான் சதாசிவ பிரம்மேந்திரர், இந்தப் பெருமாளுக்கு வில்வத்தில் அர்ச்சனை செய்திருக்கிறார் என்பது. இன்னமும் ஒவ்வொரு புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமையும் அந்த மகான் வந்து பெருமாளை பூஜித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பது ஊகீகம்.



✱ ஒளிர்ந்த திருக்கோலம்...

அவர் மட்டுமின்றி, இன்னும் பல மகான்கள் பெருமாளை வழிபட வருகிறார்கள் என்று அனைவரும் நம்புகிறார்கள். அதனால்தான் பெருமாள் சந்நிதி திறக்கப்படும் போது, யாரும் கதவைப் படாரென்று திறந்து உட்செல்வதில்லை; கதவைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திறந்து, ஒதுங்கி ஒதுங்கித் தான் உட்செல்கிறார்கள், பட்டாச்சாரியர்கள். ''காரணம் இரவில் அமைதியாகப் பெருமாளைப் பூஜிக்கும் மகான்கள், நாம் கதவு திறக்கும் போது வெளியேறலாம். அப்படி வெளியேறும் மகான்களின் மேல் நாம் மோதிக் கொண்டு உட்செல்வது மரியாதை யாகுமா?'' என்கிறார்கள்!

கரூரின் இன்னொரு சிறப்பு, நகருக்குள்ளேயே அமைந்திருக்கும் கல்யாண பசுபதீஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆநிலையப்பர். லிங்க வடிவிலான இறைவன் வடபுறம் சற்றே சாய்ந்திருப்பது ஒரு விசேஷம். தமது பக்தரான கருவூர்ச் சித்தர் என்பவருக்கும் தமது பீடத்தில் சரிசமமாக இடம் கொடுத்திருப்பதால்தான் இறைவன் சற்று சாய்ந்திருக்கிறார் என்பது ஊகீகம்.

இங்குள்ள இறைவனுக்கு அலங்கார வல்லி, சௌந்தர நாயகி என்று இரண்டு அம்மன்கள். இருவருக்கும் தனித்தனி சந்நிதிகள். பார்வதி தேவிதான் அலங்கார வல்லி. சௌந்தரநாயகி இறைவனின் தேவியான கதை சுவாரஸ்யமானது.

கரூரை ஒட்டியுள்ளது அப்பிபாளையம் என்னும் கிராமம். அங்கு வடிவுடையாள் என்னும் பெண் சதாசர்வ காலமும் சிவபெருமானையே வழிபட்டு வந்தாள். அவளுக்குத் திருமணம் செய்விக்கப் பெற்றோர் முற்பட்ட போது, தான் சிவபெருமானைத் தவிர வேறு யாரையும் கணவனாக அடைய முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

பெண்ணுக்குச் சித்தம் கலங்கி விட்டது என்று நினைத்த பெற்றோர், அவளைத் தனி அறையில் போட்டுப் பூட்டி விட்டனர். அங்கும் அவள் விடாமல் சிவ பூஜை செய்து வரலானாள். அதே சமயம் அவள் தந்தையின்



"இப்படியொரு புதுமையான நோயை நான் பார்த்ததேயில்லையே!"

"எப்படிச் சொல்றீங்க டாக்டர்?"

"ஆபீஸ் போயும் கூடத் தூக்கம் வரலே'ன்னு சொல்றீங்களே!"

– எஸ். முகம்மது யூசுப்.

கனவில் தோன்றிய பெருமாள், 'ஊரெல்லாம் பூக்கள் நிறைந்திருக்கும் நாளில் உன் மகளை என் சந்நிதிக்கு அழைத்துக் கொண்டு வா! அவள் விருப்பப்படி என் நாயகியாக ஏற்றுக் கொள்கிறேன்!' என்று கூறி மறைந்தார்.

அதன்படியே பங்குனி உத்திரம் ஏழாம் நாள் ஊரெல்லாம் மலர்களால் நிறைந்திருக்க, வடிவுடையாளைப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு இறைவன் சந்நிதிக்குச் சென்றனர். அங்கு சென்ற வடிவுடையாள் இறைவனோடு ஐக்கியமாகி விட்டாள். அவள்தான் சௌந்தரநாயகியாகக் காட்சி தருகிறாள்.

இதன் காரணமாக, இன்றும் ஆண்டுதோறும் பங்குனி உத்திரம் ஏழாம் நாளில் இறைவன் அப்பிபாளையம் சென்று வடிவுடையாளைத் திருமணம் செய்யும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது!

இந்தச் சிறப்பெல்லாம் போதாதென்று இன்னொரு சிறப்பும் கருருக்கு உண்டு என்கிறார்கள். கருவூர் என்பதுதான் கரூர் ஆனது. ஆயின், கருவூர் என்று எப்படிப் பெயர் பெற்றது? பிரம்மா முதன் முதலில் தமது படைப்புத் தொழிலைத் தொடங்கிய இடம் இதுதான். அதனால்தான் கரு தொடங்கிய ஊர் என்பதால் கருவூர் ஆனது என்றும் சொல்கிறார்கள்.


– சாங்கிருத்தியாயன்

தகவலளித்த வாசகர்கள் : என்.சி. ராமசுவாமி, கிருஷ்ணவேணி ரங்கநாதன், ராதிகா பாலசங்கர், மேலை பழனியப்பன், கரூர் பொன்னுசாமி.

ரசிகர் அனுப்பிய மணியார்டர்!

என்னுடைய ரசிகர் ஒருவர், என் கார்ட்டூன்களில் தமக்கு ரொம்பப் பிடித்தமான ஒவ்வொரு கார்ட்டூனுக்கும் ஒரு ரூபாய் விதம் மணி ஆர்டர் அனுப்பி வைப்பார். நானும் அதை வாங்கிச் செலவழித்து விடுவேன்.

ஒருநாள், அவருக்கு, 'நீங்கள் அனுப்பும் பணத்தையெல்லாம், பிரதமரின் நிவாரண நிதிக்கு அனுப்பி விடுகிறேன்' என்று லெட்டர் போட்டேன். அடுத்த முறையிலிருந்து, மணி ஆர்டர் தொகை பத்து ரூபாயாய் உயர்ந்தது.



நானும் அந்த ரசிகருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினேன். என் கார்ட்டூன் அடங்கிய புத்தகங்கள் ஒரு செட் எனது அன்பளிப்பாக அனுப்பி வைத்தேன். அதன் பின் அவரிடமிருந்து மணி ஆர்டர் வருவது நின்று போய் விட்டது. சில மாதங்கள் கழித்துக் காரணம் கேட்டு அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். பதில் வந்தது. 'நான் ஒரு சாதாரண ரயில்வே ஊழியன். உங்கள் கார்ட்டூன்களை மிகவும் ரசிக்கிறேன். அதற்காக என் பாராட்டுக்களை மணி ஆர்டர் மூலம் தெரிவித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய செயல், உங்களிடமிருந்து எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காத ஒன்று. ஆனால், நான் உங்களிடமிருந்து எதையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போல, உங்களது புத்தகங்களை அனுப்பி வைத்தது என்னைப் புண்படுத்தி விட்டது. மணி ஆர்டர் அனுப்புவதை நிறுத்தி விட்டதற்கு இதுவே காரணம்.'

– ராஷ்டிரிய சகாராவில் ஆர்.கே. லக்ஷ்மணன்

தகவல் : ஜூலி.

வீட்டில் பூச்சிகள்

மயக்கத்திலிருந்தவளை நீர் தெளித்து விடுவிக்கக் கூடத் தோன்றாதவளாய் ஷபானா குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தாள். அந்தப் பெண்ணைப் பார்க்கப் பார்க்க மனசுக்குள் பரிதாபம் பொங்கிற்று. ஓடி வந்த வேகமும் பயமும் பதற்றமும் தந்த வியர்வை வெள்ளத்தோடு ஓவென்று அலறிக் கொண்டே வந்து, அவள் தன் காலில் விழுந்த கணம் இன்னும் மனசை என்னவோ செய்தது. லேசாய் மேடிட்டிருந்த வயிற்றைப் பார்க்க, ஐந்து மாதம் இருக்கலாம் என்று தோன்றிற்று. சட்டென்று அனிச்சையாய்க் கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

வீட்டிற்கு வெளியே ஒரே கூச்சலும் குழப்பமுமாய் இருந்தது. தடதடவென்று யார் யாரோ ஓடுகிற சப்தம் தெளிவாய்க் கேட்டது. நடுநடுவே வெடிச் சப்தம் உடம்பை உலுக்கிப் போட்டது. ஆரம்பத்தில் இருந்த பயம் இப்போது இல்லையென்றாலும் துப்பாக்கி வெடிக்கிற சப்தம் மட்டும் ஒவ்வொரு முறையும் உடம்பைத் தூக்கி வாரிப் போடுகிறது. ஷபானா உட்கார்ந்த இடத்திலிருந்தே கதவு சரியாய் மூடியிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டாள்.

இந்த நான்கைந்து நாட்களில் கலவரம் பழகிப் போய் விட்டிருந்தது. கூச்சலும் குழப்பமும் வேட்டுச் சப்தமும் நாய் குரைப்பதும் சிறிது நேரத்தில், எல்லாம் அடங்கிப் போய் அமானுஷ்யமான நிசப்தம் நிலவுவதும் வழக்கம் போல் போலீஸ் மெதுவாய் வந்து எல்லாரையும் பார்த்து, என்னென்னவோ கேட்டு, காகிதங்களில் குறித்துக் கொண்டு போய்க் கையில் கிடைத்தவர்களைக் கைது பண்ணிக் கூட்டிக் கொண்டு போவதும் வாடிக்கையாகி விட்டிருந்தது.

ஆனால் இன்றைக்கு இந்தப் பெண் புதிது. நெற்றி மேட்டிலிருந்தும் வகிட்டிலிருந்தும் குங்குமம் ரத்தம் மாதிரி வழிய, அவள் அலறிக் கொண்டே இங்கே அடைக்கலமாய் வந்தது புதிது. அந்த ஐந்து மாத வயிற்று மேடு கூட ஷபானாவுக்குப் புதிது தான்.

அந்தப் பெண் லேசாய் அசைந்து படுத்து, மெதுவாய்க் கண் திறந்து பார்க்க, ஷபானா அருகே போய் உட்கார்ந்து கொண்டாள்.

''என்னைக் காப்பாத்துங்க அக்கா... ப்ளீஸ்...''

கண்களிலிருந்து நீர்ச் சொட்டுக் கிளம்பி, கீழே கோடாய்ப் பரவிற்று.

''மதராஸியா...? தமிழா...?''

ஷபானா கேட்க, தலையசைத்தாள்.

''நேத்து காலைல வெளியே போனாரு அவுரு. இன்னும் வரல. இந்த தாடிவாலாங்க கொன்னுட்டுருப்பாங்க. தெரியும். நான் கூட செத்துடுவேன். ஆனா எம் புள்ள... வயித்துல... அது என்ன தப்புப் பண்ணிச்சி? இந்த வெறி புடிச்சவனுங்க இதக் கூட கொன்னுடுவானுங்க. எவ்வோ தூரம் தொரத்திட்டே வந்தாங்க தெரியுமா? ஆனா... நீங்க என்னை... என் கொழந்தையக் காப்பாத்திட்டீங்க. உங்களுக்கு ரொம்ப நன்றி. நல்லாயிருப்பீங்க. இங்க கூட வந்தாங்களா அந்த முஸ்லீம் ஆளுங்க...?''

''இல்ல. இங்க வர மாட்டாங்க. இது முஸ்லீம் வீடுன்னு அவுங்களுக்குத் தெரியும்.''

ஷபானா மெதுவாய்ப் பதிலிறுக்க, அந்தப் பெண் பதறிப் போயிற்று.

''அய்யய்யோ...''

''பயப்படாதே. நான் உன்னைக் காப்பாத்தறேன். நாங்க கூட மனுஷங்கதான். எனக்குக் கூட இது புடிக்கல. இந்தக் கலவரம், கலாட்டா, துப்பாக்கிச் சூடு, ரத்த வெறி எதுவும்... எதுவும் புடிக்கல. எல்லாமே தப்பு. யாரோ எங்கயோ செஞ்ச தப்புக்கு ஒண்ணும் தெரியாத அப்பாவிங்க பலியாகறது அநியாயம். எம் புருஷன்கிட்ட கூட நிறைய சொல்லிப் பாத்துட்டேன். ஆனா அவருதான் மாறவே இல்ல.''

''அப்டின்னா... உங்க வீட்டுக்காரரும் அந்தக் கூட்டமா...? அய்யோ... நான் போறேன். இந்த இடம் வேணாம். வேற எங்கயாவது போய்ப் பொழச்சிக்கறேன். எம் புள்ளைய நான் பாக்கணும்... வளர்க்கணும்... பெருசா வளர்க்கணும்... காப்பாத்தணும். நான் போறேன்.. வேற எங்கயாவது...''

அந்தப் பெண் அவசரமாய் எழ முற்பட, ஷபானா அவள் தோள் பற்றி இதமாய் அமுக்கினாள்.

''அவசரப்படாதே... உம் பேர் என்ன?''

''ம்..? கௌ... கௌசல்யா.''

''கௌசல்யா. நல்லாயிருக்கு உம்பேரு. எங்க இருக்கே?''

''ராம் மந்திர் பக்கத்துல. அதக்கூட இடிச்சிட்டாங்க. நாங்க இருந்த வீடு கூட



இடிஞ்சி போச்சி.

முந்தா நேத்துலருந்து மார்க்கெட் பக்கத்துல தெரிஞ்சவங்க வீட்லதான் இருந்தோம். நேத்தெல்லாம் நல்லாத்தான் இருந்தது. அப்பத்தான் அவரு வெளிய போனாரு. ராத்திரி மறுபடி கலவரம். எங்கயோ மாட்டிக்கிட்டாரு. காலைல வருவாருன்னு நெனச்சேன். இன்னிக்கும் காலைல வரலையா... பயமாயிடுச்சி. அவர கட்டுட்டு இருப்பாங்க. எனக்குத் தெரியும். இவங்களப் பத்தில்லாம் எனக்குத் தெரியும்...''

கௌசல்யா சின்னக் குழந்தை மாதிரி புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே பேசினதை வியப்பாய்ப் பார்த்தாள் ஷபானா.

என்ன வயதிருக்கும் இந்தப் பெண்ணுக்கு? இருபது இருக்குமா? அதுவே அதிகம் போல் தோற்றம். குழந்தை மாதிரி பேச்சு. செய்கைகள். இந்த லட்சணத்தில் வயிற்றில் ஒரு குழந்தை வேறு. அது ஆணா பெண்ணா என்று தெளிவாய்த் தெரியாத பட்சத்தில் கூட அடிக்கொரு தடவை 'என் பிள்ளை... என் பிள்ளை' என்கிறாளே... ஐந்து மாதத்தில் அதற்கு ஒரு முழு வடிவம் கூட கிடைத்திருக்குமோ... இருக்காதோ.. ஆனால் எத்தனை அன்பு அவளுக்கு அதன் மீது? இதுதான் தாய்ப் பாசமா? யா.. அல்லாஹ்.. எனக்கு மட்டும் ஏன் இந்தப் பாக்கியம் இல்லை? கல்யாணமாகிப் பத்து வருஷம் ஆகியும் உமக்கு ஏன் இந்தப் பெண் மீது கருணை இல்லை? என் வயிற்றை மட்டும் ஏன் இப்படி காய்ந்த பூமியாக்கி விட்டு விட்டீர்? அவர் செய்கிற பாவத்திற்கு எனக்கு இப்படியொரு தண்டனையா? யாரோ மருதி இடித்த

வெ.மகேஸ்வரன்

தற்கு இந்தக் கௌசல்யாவின் கணவன் செத்துப் போவது மாதிரி...

''அக்கா... அவரு வந்தா என்னைக் கொன்னுடுவாரா?''

அவள் கண்களில் பயம் இன்னும் மிச்சமிருந்தது. ஷபானா இதமாய் அவளது தலையை வருடிக் கொடுத்தாள். நெற்றியில் முத்து முத்தாய்த் துளித்திருந்த வியர்வையைத் தன் முன்றானையால் ஒற்றி எடுத்தாள்.

''எந்த அக்காவும் தன்னோட தங்கையைச் சாக விட மாட்டா கௌசல்யா. பயப்படாதே. நானே செத்தாக் கூட உன்னையும் உன் குழந்தையையும் எப்படியும் காப்பாத்திடுவேன். கொஞ்சம் ரொட்டியும் பாலும் சாப்பிட்டுட்டு மேல போய்ப் படுத்துக்கோ. அவரு மேல வர மாட்டாரு.''

ரொட்டி சாப்பிடுகையில் கூட அவளது செய்கை குழந்தையைப் போலிருந்தது. எப்படி இந்தக் குழந்தையை ஒருவன் கல்யாணம் பண்ணிக் கொண்டான்? எப்போது கல்யாணம் ஆகியிருக்கும் இவளுக்கு? எவ்வளவு தீர்மானமாய் 'அவர் செத்துப் போயிருப்பார். எனக்கு நன்றாகத் தெரியும்...' என்கிறாள். என்ன பெண் இவள்? விஷயத்தின் தீவிரம் புரிந்துதான் பேசுகிறாளா? அவ்வப்போது அழுவது கூட அவனுக்காக இல்லை. பிறக்கப் போகிற அந்தக் குழந்தைக்காகத்தான் என்பது மாதிரிதானே தோன்றுகிறது? இந்த மாதிரி என்னால் இருக்க முடியுமா? அவளை விட அறிவு முதிர்ச்சியோ எனக்கு? பிள்ளைப் பாசம் என்கிற விஷயம் மட்டும் அறிவு முதிர்ச்சியோடு சம்பந்தப்பட்டது இல்லையோ? நான் கூட என் வயிற்றில் ஒரு கருவைச் சுமந்தால் இப்படித்தான் இருப்பேனோ?

மரத்தால் ஆன மேல் தட்டில் கிடந்த தட்டு முட்டுச் சாமான்களை ஷபானா ஓரம் ஒதுக்கிச் சுத்தப்படுத்த, கௌசல்யாவுக்குத் தாராளமாய் இடம் கிடைத்தது. அசதியில் படுத்ததும் தூங்கிப் போனாள்.

ஷபானாவுக்குத்தான் தூக்கம் வர மறுத்தது. காரணம் புரியாது மனசு குழம்பித் தவித்தது. கண்களை மூடிப் படுக்க, மறுபடி மறுபடி கௌசல்யாவின் மேடிட்ட வயிறு வந்து போய்க் கொண்டிருந்தது. அந்தக் குழந்தையைக் கண்டிப்பாய்க் காப்பாற்றியே தீர வேண்டும் என்கிற எண்ணம் வலுத்தது. அவர் வந்தால் அவரிடம் பேசி இந்தப் பெண்ணைக் கலவரம் முடிகிற வரை இங்கேயே வைத்துக் கொள்ளச் சம்மதம் வாங்க வேண்டும்!

சம்மதிக்காவிட்டால்? கையிலே துப்பாக்கியைத் தூக்கி விட்டால்...?

வேறு வழியில்லை. எதிர்த்துப் போராட வேண்டும்.

இப்படி வாயும் வயிறுமாய் உன் தங்கை வந்து நின்றால் என்ன செய்வாய்? உன் அம்மா என்றால் கூட இப்படித்தான் கொலை செய்யத் துடிப்பாயா? எங்கேயோ யாரோ மசூதி இடிக்க, இவர்கள் ஏன் சாக வேண்டும்? யாரோ செய்த தப்புக்கு இவர்கள் ஏன் பலியாக வேண்டும்? எதற்கு இந்த ரத்த வெறி? ஏனிந்தப் பழி உணர்ச்சி? அவர்கள் செய்த அதே தப்பையே நீயும் செய்ய வேண்டுமா? ரத்தத்திற்கு ரத்தம் என்றுதான் உனக்கு குர்ஆன் சொல்லிக் கொடுத்ததா? மசூதிகளிலும் கோயில்களிலுமா மதங்கள் வாழ்கிறது? எல்லாவற்றுக்கும் மேலாக மனசு என்ற ஒன்று ஏன் உங்களுக்கெல்லாம் இல்லாமற் போகிறது? ஏன் இப்படி ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு சாகிறீர்கள்? என்ன சாதிக்கப் போகிறீர்கள் இந்தக் கலவரங்களால்? ஏனிந்த வன்முறை? எதற்கிந்தக் கொடுமை? எதற்காக நாட்டையே சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்..?

மனசுதான் நிறையப் பேசுகிறது. இத்தனையும் வாய் பேசுமா? அவர் வந்து நிற்க இப்படிக் கேள்வியாய்க் கேட்டுத் துளைக்க முடியுமா? தெரியவில்லை. பயம் மனசைக் கவ்விற்று. ஷபானாவுக்கு அயர்ச்சியாயிற்று.


அப்படியானால் இந்தப் பெண்ணை எப்படிக் காப்பாற்றுவது? அவள் வயிற்றுக் குழந்தையை எப்படி சேதமின்றி இந்த மண்ணில் தவழ வைப்பது? என்னால் முடிகிற காரியமா இது? ஒரு பெரிய கூட்டத்திற்கெதிரே தனியொரு பெண்ணாய் நின்று என்னால் என்ன சாதிக்க முடியும்? ஏன் அவளைக் காப்பாற்றுவதாய் வாக்குக் கொடுத்தேன்? அந்த மேடிட்ட வயிற்றைப் பார்த்தா? எதற்குக் குழந்தை என்றால் என் உடம்பு இப்படி புல்லரித்துப் போகிறது?

காலையில் எழுந்திருக்கும்போதே ஷபானாவுக்கு கௌசல்யாவின் நினைப்புத்தான் முதலில் வந்தது. நன்றாகத் தூங்கியிருப்பாளா? நல்ல வேளையாய் ராத்திரி அவர் வரவில்லை. வந்திருந்தால் விபரீதமாய் ஏதாவது நடந்திருக்கக்கூடும். எனக்கும் அவருக்கும் வாக்குவாதம் முற்றி எல்லாம் எல்லை மீறிப் போயிருக்கக் கூடும். அல்லாவின் கருணை. அப்படி எதுவும் நடக்கவில்லை. ஓர் இரவு நிம்மதியாய் அந்தப் பெண் கழித்திருக்கிறது. அந்தக் குழந்தை ஒருநாள் வளர்ந்திருக்கிறது.

ஷபானா முகம் கழுவிக் கொண்டு டீ தயாரித்தாள். சூடு ஆற்றி கிளாஸின் ஊற்றிக் கொண்டு கௌசல்யாவுக்கு எடுத்துக் கொண்டு மேலே போக, அங்கே கௌசல்யாவின் படுக்கை காலியாய்க் கிடந்தது.

துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்ள யாரோ செத்துப் போனது மாதிரி ஓவென்று அழ ஆரம்பித்தாள் ஷபானா.

OWN YOUR CLASSIC APARTMENT AT THE TEMPLE TOWN OF NANGANALLUR



AKSHAYA

16, III Main Road, Nanganallur, Madras-600 061.
(MMDA Sanction No. B/22261/358A/B/92)

- Plot area 12000 Sq. Ft. (approx)
- 6300 Sq. Ft. Open Space for Car & Scooter Park
- 5 Ft. wide Corridors
- 27 Flats on G+2 Floors
- Single and Double bed room Flats from 400 to 850 Sq. Ft. in size
- Aesthetically and Tastefully designed
- Timely possession and Quality Construction
- Common T.V. antenna with Provision for Dish antenna
- Payment linked with Progress at site

ASSOCIATED BUILDERS

2nd FLOOR, 26, RANGANATHAN STREET, T. NAGAR, MADRAS - 600 017. INDIA.

© OFF : 440210; 440224 / Res : 2345244 Fax : (044) 2344333

சொன்னால் நம்பமாட்டீர்கள்; கரூரி லிருந்து மட்டும் ஆண்டொன்றுக்குச் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி வகைகள் உற்பத்தியாகின்றன! அவற்றில் சுமார் நானூறு கோடி ரூபாய் மதிப்புள்ள துணிவகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன!

எந்த நாடுகளுக்கு? ''ஆப்பிரிக்க நாடுகள் தவிர, மற்ற எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறோம். கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது அமெரிக்காவில் மேஜை விரிப்புகள், நாப்கின்கள் போன்றவற்றுக்கு ஏக கிராக்கி என்பதால் வரப் போகும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு ஏற்றுமதி செய்வதில் இப்போது மும்முரமாக இருக்கிறோம்!'' என்கிறார் கரூரிலிருக்கும் முன்னணி ஏற்றுமதியாளர்களில் ஒருவரும் கைத்தறி ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவருமான பி. ராஜு.

ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏன் ஏற்றுமதி செய்வதில்லை? ''அந்த நாடுகளிலிருந்து அந்நியச் செலாவணி மாற்றம் பெறுவதில் சில பிரச்னைகள். மற்ற நாடுகளின் தேவைகளே நிறைய இருக்கும் போது, ஆப்பிரிக்க நாடுகள் பற்றி நாங்கள் ஏன் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்?'' என்கிறார் ராஜு.

''வெளி நாட்டவர்களின் ரசனையை நீங்கள் எப்படித் தெரிந்து கொள்கிறீர்கள்?''

''நாங்கள் அடிக்கடி எல்லா நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் செய்கிறோம். அதோடு, நாங்கள் உருவாக்கும் புதுப் புது டிசைன்கள் அடங்கிய மாதிரி கேட்லாக்குகளை அந்தந்த நாடுகளிலுள்ள ஏஜெண்டுகளுக்கு அனுப்பி வைக்கிறோம். அவர்கள் அந்தந்த நாடுகளிலுள்ள மக்களின் ரசனைக்கேற்ப மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். நாங்கள் அதன்படியே நெசவு செய்து அனுப்புகிறோம். பொதுவாக வெளிநாட்டவர்கள் லைட் கலர்களைத்தான் விரும்புவார்கள். நாமோ டார்க் கலர்களைத்தான் அதிகம் விரும்புகிறோம். அதனால்தான் உள்ளூர்த் தேவைகளையும் வெளிநாட்டுத் தேவைகளையும் ஒருவராலேயே

கரூர்: இங்கு வேலைக்கு ஆட்கள் தேவை!



♦ வெளி நாடுகளில் நமது கரூர்த் துணிகள்.....







* கே.வி. நடராஜன்



* பி. ராஜு

நிறைவேற்ற முடிவதில்லை; ஏற்றுமதி செய்பவர்கள் ஏற்றுமதித் துணிகளை மட்டுமே உற்பத்தி செய்கிறார்கள்; உள்நாட்டுத் தேவைகளுக்காக உற்பத்தி செய்பவர்கள் அதில் மட்டுமே கவனம் செலுத்துகிறார்கள்!''



* ஜீவா, சுப்பம்மாள் : கைச் செலவுக்குக் கவலையில்லை....



* துணிகளின் தரம் நுணுக்கமாகப் பரிசீலிக்கப் படுகிறது...

''ஏற்றுமதித் துணிகள் என்றால், தரத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமே! அதற்கு என்ன செய்கிறீர்கள்?''

''நீங்களே பாருங்களேன்!'' என்று சுற்றிக் காண்பித்தார் ராஜு.

நெசவு செய்து வந்த ஒவ்வொரு துணியையும் பல பெண்கள் மிகுந்த கவனத்துடன் பிரித்துப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏதாவதொரு இடத்தில் ஒரு நூலிழை வித்தியாசமாகக் காணப்பட்டாலும் அந்த இடத்தை மார்க் செய்து விடுகிறார்கள். பேக் செய்யும் இடங்களில் அந்த மாதிரி துணிகளை நிராகரித்து விடுகிறார்கள்.

இதே மாதிரி ஒவ்வொரு சிறு நாப்கின் துணிகளில் கூட, அதை எப்படித் துவைக்க வேண்டும்; எப்படிப்பட்ட நீரில் துவைக்க வேண்டும்; எப்படிப்பட்ட சூட்டில் இஸ்திரி செய்ய வேண்டும் என்பதுபோன்ற குறியீடுகளும் இருக்கின்றன. ''காரணம், வெளிநாடுகளில் நுகர்வோர் விழிப்புணர்வு என்பது மிக மிக அதிகம் என்பதால், அவர்களுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் நாங்கள் தந்துதான் ஆக வேண்டும்!'' என்கிறார் ராஜு.

கைத்தறித் துணிவகைகளின் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுத் தேவைகள் காரணமாகக் கரூரில் மட்டுமின்றி கரூரைச் சுற்றியுள்ள ஏராளமான கிராமங்களையும் சேர்த்துச் சுமார் ஐம்பதாயிரம் குடும்பங்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்றன. தினசரி ஒவ்வொரு நெசவாளரும் சுமார் ஐம்பது ரூபாயிலிருந்து நூறு ரூபாய் வரை சுலபமாகச் சம்பாதிக்கிறார்.

தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள் போன்வற்றின் ஓரங்களிலுள்ள நூல்களைச் சேர்த்துக் குஞ்சங்கள் முடிவதிலும் பல பெண்களுக்கு வேலை வாய்ப்பு. இதன் மூலம் சாதாரணமாக ஒவ்வொரு பெண்ணும் தினசரி இருபது ரூபாய்வரை சம்பாதிக்க முடிகிறது.

வயதான சுப்பம்மா கூட வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. ''என்னாலும் ஒரு நாளைக்கு ஆறேழு ரூபாய் சம்பாதிக்க முடிகிறது!'' என்கிறார். பள்ளிச் சிறுமி ஜீவா, ''பள்ளிக்கூடம் போகாத நேரங்களில் குஞ்சங்கள் முடிவதன் மூலம் தினசரி மூன்று நான்கு ரூபாய் சம்பாதிக்கிறேன்!'' என்கிறாள் பெருமையுடன்!

''சாதாரணமாக உள்நாட்டுத் தேவைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் கைத்தறி துணிவகைகள் சில சமயங்களில் தேங்கிப் போய் விடுவதாகச் சொல்கிறார் களே, அது உள்



* சி. துரைசாமி

மைதானா?'' என்று கரூரிலுள்ள கைத்தறி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கே.வி. நடராஜனிடம் கேட்டபோது, சிரித்தார்.

''அ ப் ப டி ப் ப ட் ட தொரு நிலையை நாங்கள் ஒரு போதும் சந்தித்ததில்லை. சொல்லப் போனால், கோ-ஆப் டெக்ஸ் நிறுவனங்களில் நடக்கும் தள்ளுபடி விற்பனையின் போது, நாங்களே அங்கு சென்று மொத்த மாக வாங்கி, மற்ற மாநிலங்க ளுக்கு அனுப்புகிறோம். அந்த அள வுக்கு, தேவைதான் இருக்கிறதே தவிர, தேக்கம் என்பது எங்களைப் பொறுத்தவரை கிடையவே கிடை யாது!'' என்கிறார் அவர்.

''உள்நாட்டு விற்பனைக்காக நெய்யப்படும் துணிவகைகளில் கூட அந்தந்த மாநில மக்களின் ரசனை மற்றும் தேவைகள் வேறுபடும் என்பதால், அவர்களுக்குத் தகுந்த மாதிரி நெசவு செய்ய வேண்டும்; அவ்வளவு தான்!'' என்கிறார் நடராஜன்.



• கிறிஸ்துமஸ்'க்குத் தயாராகிறது....

கைத்தறித் துணிவகைகள் உற்பத்தி மாதிரியே கரூரில் நடக்கும் இன்னொரு முக்கியமான தொழில் கொசுவலைத் துணி (இது எல்லாமே நைலான் வகை; பருத்தி இழை சுத்தமாகக் கிடையாது) உற்பத்தி. இதன் மூலம் சுமார் ஐயாயிரம் தொழிலாளர் கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார் கள்.

•

''கொசுவலைத் துணி உற்பத்தி என்பது முழுக்க முழுக்க உள்நாட்டுத் தேவைகளுக் கானது. இந்தத் துணி கொசுவலைகளுக்காக மட்டும் பயன்படுவதில்லை. வடமாநிலங் களில் சிறு சிறு மீன்பிடி வலைகளுக்கும், ஆப்பிள் பழங்கள் எடுத்துச் செல்லப் பயன் படும் கைப்பைகள் தயாரிக்கவும் பயன்படுத் தப்படுவதால், நாங்கள் அப்படியே துணியாக அனுப்பி விடுகிறோம். மேலும் கொசுவலை களாகத் தைத்து அனுப்பினால் வரி கட்ட வேண்டும்; துணியாக அனுப்பினால் அதற்கு வரி கிடையாது என்பதும் இன்னொரு கார ணம்!'' என்கிறார் கரூரிலுள்ள கொசுவலைத் துணி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செய லாளர் சி. துரைசாமி.

துரைசாமிக்கு இரண்டு குறைகள். ஒன்று, தொழில் வரி மற்றும் தொழில் செய்யும் இடத்துக்கான வரி போன்றவற்றை அர சாங்கம் சகட்டுமேனிக்கு ஏற்றிக் கொண்டே போவது. மற்றொன்று, சொகக் கடியிலிருந்து தங்களைப் பாது காத்துக் கொள்வதற்காக, கொசு வத்தி போன்ற உடல்நலக் கேடு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களை உப யோகப்படுத் துவதில் காட்டும் அக்கறையில் துளிகூட, எந்த விதத்திலும் தீங்கே விளைவிக் காத கொசு வலை உபயோகிப் பதில் மக்கள் காட்டுவதில்லையே என்பது.

இருப்பினும் ஆண்டுதோறும் சுமார் இருபது கோடி ரூபாய் அளவுக்கான கொசுவலைத் துணி கள் கரூரில் உற்பத்தியாகிக் கொண்டுதான் இருக்கின்றன! கொசுவலை கட்டிக் கொண்டு உறங்கும் விழிப்புணர்வை மக்க ளிடம் அரசாங்கம் ஏற்படுத்தி னால் இன்னும் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமே என்பது கொசு வலைத் துணி உற்பத்தியாளர்களின் ஆதங்கம்.

உழைப்பதற்குத் தயாராயிருக்கும் யாரை யும் கரூர் கைவிடுவதில்லை; அங்கு எப் போதும் வேலைக்கு ஆட்கள் தேவைப் பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்!

– இளங்கோவன்

தகவல் தந்த வாசகர்கள் : **என்.எஸ். நவநீதம், வி.வி. நித்திலன், பூ. அனந்த கோபால், செல்வி சேதுராமன், மேலை பழனியப்பன், ந. விஸ்வநாதன், க.வே.ந. சம்புநாதன்.**

அட்டை வண்ணப்படங்களும் கரூர்ச் செய்திகள் தொடர்பான மற்ற படங்களும் : **கோபிநாத்.**

பாண்டியன் மகள்

42. முதல் நாள் யுத்தம்

தன் மீதே திடமான நம்பிக்கை அற்றவனின் மனம் சதா சந்தேகத்தில் உழல்கிறது. தெளிவாகச் சிந்திக்கவோ தீர்க்கமான முடிவெடுக்கவோ இயல்வதில்லை. சுபாவமாகவே சஞ்சலப்படும் மனம் படைத்த மாறவர்மனுக்கு, சோழ தூதனாக வந்த தனஞ்செயனின் அலட்சியப் பேச்சும் பார்வையும் மேலும் குழப்பமளித்தன. பராக்கிரமபாகுவின் சதியைப் பற்றி, சோழ இளவலுக்குத் திட்டமான தகவல் கிடைத்திருக்க வேண்டும் என்றே நினைத்தான் மாறவர்மன். தூதனின் பேச்சு அப்படித்தானிருந்தது.

கொற்கையில் அஞ்சனாதேவி இருப்பதும், காவலுக்குக் குலசேகரன் வேறு அங்கிருப்பதும் அவனை அமைதியிழக்க வைத்ததென்றால், பராக்கிரமபாகு தன் வீரர்களுடன் கூடிக் கூடி ஏதோ பேசுவதைக் கண்டு இன்னும் சஞ்சலம் அடைந்தான்.

நிலைகொள்ளாது தவித்த மாறவர்மனைக் கண்டு, கடிந்து கொள்ளவும் செய்தான் மார்த்தாண்டன். ''மாறவர்மா, இந்தப் போர் நமது விதியை நிர்ணயிக்கும் போர். உன் சஞ்சல புத்தியால் அதைக் கெடுக்காதே. எதிரே இருப்பவன் சாமான்ய எதிரியல்ல. உன் சிந்தனையைப் போரில் செலுத்து. நம் வீரர்களுக்குத் தலைவனாக உற்சாகமும் நம்பிக்கையும் ஊட்டும் வழியைப் பார். பராக்கிரமபாகு இன்றிக் குலசேகரன் தனித்துச் செயல்பட மாட்டான். எனவே கவலையை விடு.''

சற்று நிதானத்துக்கு வந்த மாறவர்மன், படைகளின் அணிவகுப்பைப் பார்வையிட்டான். யாருடைய சஞ்சலத்திற்காகவும் காத்திருக்காத காலம் வேகமாக ஓடியது. பின்னிரவில் ஒரு ஜாம நேரமே உறங்கிய மாறவர்மன் விழித்த போது, எதிரில் மார்த்தாண்டன் பூரண கவசங்களுடன் போருக்குச் சித்தமாக நிற்பதைக் கண்டான்.

தயங்கித் தயங்கி, சிவந்த நிறத்துடன் கதிரவன் தொடுவானத்தை எட்டிய போது, பாண்டியர் படை அணி வகுத்து நின்றிருந்தது.

எதிர்க்கரையில் படைகளின் முகப்பில் பெரும் வெண்ணிறப் புரவி மீது ஆரோகணித்துத் தன் நீண்ட வாளுடன் காத்திருந்த விக்கிரமனின் முகத்தில் மாறவர்மனைக் கண்டதும் முறுவல் ஒன்று மலர்ந்தது.

மார்த்தாண்டன் வாளை உயர்த்தியதும் தாரைகள் அலறின. மோகூர்ப் பழையனின் புரவிப்படை முன்னணியில் பாய்ந்தது. இரண்டு கடல்கள் சங்கமிப்பதைப் போல கூடிய படைகள், கோட்டாற்றங்கரையில் பெரும் ரண களத்தை சிருஷ்டிக்கத் தொடங்கின.

இரைக்காக வாயைப் பிளக்கும் பெரும் முதலையைப் போல் இரண்டாகப் பிளந்த சோழர் படை, பழையனின் புரவிப் படையை நன்றாக உள்ளே புகவிட்டது. முழுவதுமாக அது நுழைந்ததும் முகப்பில் மீண்டும் கூடிய சோழ வீரர்கள் முன்னாலும் பக்கவாட்டிலும் தாக்குதலை உக்கிரப்படுத்தினார்கள். பழையனின் அந்தப் போர்ப் புரவி, அன்று, தான் கற்றிருந்த சாகசங்கள் அனைத்தையும் காட்டத் துவங்கியது. முன்னால் துள்ளிப் பாய்வதும், பின்னால் உதைப்பதும், முன்னங்கால்களை உயரே தூக்கிப் பாய்வதும், பழையனின் வாள் சுழன்ற வகைக்கேற்ப பக்கவாட்டில் நடப்பதுமாகச் சோழ வீரர்களைத் திணறடித்தது. அந்தப் புரவியின் பாய்ச்சல்களை ரசித்தபடியே போரிட்ட தனஞ்செயன், விக்கிரமனது உத்தரவுப்படி படையை வடக்கே இழுத்துக் கொண்டிருந்தான். ஆனாலும் மோகூர்ப் பழையனை இதே வேகத்தில் முன்னேற விடுவது அபாயமென்பதை உணர்ந்ததால், தன் புரவியை முன்னே செலுத்தி பழையனின் வாளுடன் தன் வாளை மோத விட்டான். பழையனின் வாள் உறுதியாகத் தன்னைத் தடுத்ததையும், வெகு வேகமாகச் சுழன்று தாக்கியதையும் கண்ட தனஞ்செயன், அவனை வியந்தபடியே தன் வாளை வீசினான்.

தூதனாக வந்த போது தனஞ்செயன் காட்டிய அலட்சியம், அவன் வாள் வீச்சிலுமிருந்ததைக் கவனித்த பழையன், தன் புரவியை உதைத்து, உயரே கிளப்பி, அவன் மீது பாயமுற்பட்டான். ஆனால் அந்தப் பாய்ச்சலிலிருந்து வெகு அலட்சியமாக விலகிய தனஞ்செயன்,

விஷ்வக்சேனன்

கண்ணிமைக்கும் நேரத்தில் பக்கவாட்டில் தொங்கிய ஈட்டிகளில் ஒன்றை வீசி விட்டதால், அது பழையனின் கழுத்தில் உரசிச் சென்று, தனஞ்செயனைக் குறைவாக மதிப்பிட்டது எத்தனை தவறு என்பதைப் பழையனுக்கு உணர்த்தியது.

மாறவர்மன் உக்கிரமாகப் போரிட்ட போதிலும் அவன் படைப் பிரிவை விக்கிரமனின் படைப்பிரிவு ஆரம்பத்திலேயே திணறடித்தது. விக்கிரமன் கரத்தில் சுழன்ற அந்த நீண்ட வாள் கரகரவெனச் சுழலுவதும் திடீரென்று மார்பிலும் கழுத்திலும் தோள்களிலும் பாய்ந்து இழுபடுவதுமாகப் பாண்டிய வீரர்களை மளமளவெனச் சாய்த்தது. சோழர் படை மெல்ல வடமேற்காகப் பின் வாங்குவதன் காரணம் மாறவர்மனுக்குப் புரியவில்லை. புரிந்த போது, நிலைமை அவன் கைமீறிப் போயிருந்தது. படைகள் வடமேற்காக நகரத் தொடங்கிய சற்று நேரத்தில் இடதுபுறச் சரிவுகளிலிருந்து பெரும் காட்டாறு இறங்கி வருவதைப் போல் புதிதாக இறங்கிய சோழர் புரவிப் படை, மார்த்தாண்டனிருந்த பகுதியில் ஊடுருவி, ஈழத்துப் படை வரிசையையும் கலைத்தது. வேல்களும் அம்புகளும் தன்னையொட்டி பக்கவாட்டில் பறக்கத் தொடங்கியதைக் கண்ட மாறவர்மன் மனத்தில் பெரும் திகில் பரவியது.

உச்சிப் பொழுது சற்றுத் தாண்டியதும் போர் மேலும் உக்கிரமானது. அத்தருணம் பின்புலத்திலிருந்து பாண்டிய வீரன் ஒருவன் தலைதெறிக்க ஓடி வந்தான். அவன் கொண்டு வந்த செய்தி மாறவர்மன் தலையில் பேரிடியாக இறங்கியது.



அருள்வாக்கு

எப்போது பார்த்தாலும் காரியம் செய்து கொண்டிருப்பதே நமக்கு இயல்பாகி விட்டது. உடம்பால் காரியம் செய்யாதபோதும், வாக்கால் பேசிக் காரியம் செய்யாத போதும் கூட, நம் மனசு சதா எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவும் காரியம்தான். இந்தக் காரியம் நின்றால்தான், அதாவது மனசில் எண்ணமே தோன்றாமல் இருந்தால்தான், எந்தக் காரியமும் இல்லாத பிரம்ம நிலையை அடைய முடியும். ஆனால் இந்த மனசால் ஒரு க்ஷணம் கூட எதையும் நினைக்காமல் இருக்க முடியவில்லையே! இதை எப்படி நிறுத்தப் பழக்குவது?

இந்தப் பழக்கத்துக்கு வழிதான் பக்தி. காரியமில்லாத பிரம்மத்தை நாமும் காரியமில்லாமலிருக்கிற நிலையில்தான் அநுபவிக்க முடியும். அது முடியவில்லையா? அதே பிரம்மம் சகல பிரபஞ்சங்களையும் நடத்தி வைக்கிற – அதாவது காரியத்தைச் செய்கிற – ஈச்வரனாக இருக்கிறதல்லவா? இந்த ஈச்வரனையே சதா சிந்தனை பண்ணு. காரியத்தை எல்லாம் அதற்கே திருப்பு. உடம்பால் நமஸ்காரம், பூஜை, வாக்கால் ஸ்தோத்திரம், மனசால் தியானம் என்று சகல காரியங்களையும் ஈச்வரனிடம் செலுத்து. அவற்றை ஈச்வரன் அங்கீகரித்து, உன்னை பிரம்மஞானத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பான். இப்படிப்பட்ட இடைவிடாத ஈச்வர சிந்தனைக்குத்தான் பக்தி என்று பெயர். இதில் அன்பு ரொம்பவும் முக்கியம். அன்போடு அவனை நினைப்பதே பக்தி.

''இளவரசே, குமரியில் சோழர் கலங்கள் நிற்கின்றன. படைகள் இறங்கி நம்மை நோக்கி அணிவகுத்து வருகின்றன'' என்றான் அந்த வீரன்.

விக்கிரமன் அதுவரை வடமேற்கில் பின்வாங்கியதன் காரணம் புரிந்தது மாறவர்மனுக்கு. ஆனால் அந்த நிலையில் மீண்டும் பின்புறம் திரும்பவோ, பழைய நிலைக்கு மீளவோ வழியேதுமில்லையென்பது புரிந்ததால் செய்வதறியாது திகைத்தான் மாறவர்மன்.

குமரியில் வந்து இறங்கிய சோழர் படை சாரிசாரியாக அணிவகுத்து வந்து பாண்டியரைப் பக்கவாட்டில் தாக்கியது. பின்வரிசையில் படைகளை நடத்திய கொங்கு மன்னன் ஜெகவீர பாண்டியனை, சோழர் புரவிப் படைத்தலைவன் தன் பெரும் வாளுடன் எதிர்கொண்டான். அடுத்த ஒரு நாழிகைப் பொழுதில் வெகு அற்புதமான, உக்கிரமான வாட் போர் தொடங்கியது அங்கே. அணிவகுப்பு சிதறிய பாண்டியர் படையை வெகு விரைவில் ஒழுங்குபடுத்திய கொங்குப் பாண்டியன் தன் பட்டையான வாளை நரசிங்கராயனின் வாளுடன் மோத விட்டான்.

ஏதோ இரண்டு அரக்கர்கள் போரிடுவதைப் போல் மோதிக் கொண்ட இருவரும் ஒருவருக்கொருவர் எந்தவிதத்திலும் சளைத்தவர் அல்ல என்பதைச் சற்று நேரத்தில் புரிந்து கொண்டனர்.

வாட்கள் தீப்பொறி பறக்க உரசின. சுழன்று சுழன்று தாக்கின. சற்று அயர்ந்தாலும் கழுத்திலோ மார்பிலோ எதிரியின் வாள் பாய்ந்து விடுமென்று இருவருக்குமே தோன்றியது.

சாளுக்கியருடன் எத்தனையோ போர் முனைகளில் நின்று போராடியவனும், வடநாட்டுப் போர் முறைகளை நன்கு அறிந்தவனுமான நரசிங்கராயன், கொங்கு நாட்டின் அந்த வாட்போர் முறை சாளுக்கியரின் போர் முறைக்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல என்பதையும், ஒரு படி மேலேயே அபாயகரமானது என்பதையும் புரிந்து கொண்டான்.

சளைக்காமல் தொடர்ந்த அந்தப் போரின் போக்கை மாற்ற விரும்பிய நரசிங்கராயன், தனது போர் முறையை சற்றே சாளுக்கிய வாட்போர் முறைக்கு மாற்றி, தன் வாளைப் பெருவேகம் கொடுத்து வீசத் தொடங்கினான். ஜெகவீர பாண்டியனின் கை சற்று சளைக்கத் தொடங்கியது. நரசிங்கராயனின் வாள் சுழற்சியிலிருந்து தன் வாளை மீட்க முயன்றான். அடுத்தகணம் அவன் கை வாள் விண்ணை நோக்கிப் பறந்தது. நரசிங்கராயனின் பெரும் வாள் அவன் மார்பில் ஆழப் பாய்ந்தது.

போரிட்டபடியே அந்த அற்புதமான வாட்போரைக் கவனித்துக் கொண்டிருந்த பாண்டிய வீரர்கள் இனி தாக்குப் பிடிப்பது சிரமம் என்பதை உணர்ந்து, மெல்லப் பின்வாங்கத் தொடங்கினர். கொங்கு மன்னன் வீழ்ந்த பிறகு அதிகத் தடையேதுமில்லாததால் சோழப் படை பக்கவாட்டில் மளமளவென்று முன்னேறத் தொடங்கியது.

ஆதவன் முழுதுமாக மேற்கில் சாய்ந்து விட்டதைக் கண்ட விக்கிரமன் போரை நிறுத்த வீரர்களுக்கு உத்தரவிட்டான். பாண்டியர் படையை மெல்ல பின்வாங்க அனுமதித்தான். போரை நிறுத்த ஊதப்பட்ட தாரைகள் மாறவர்மன் செவிகளில் நாராசமாக விழுந்தன.

மறுநாள் மீண்டும் களத்தில் சந்திப்பதாக வீரனொருவனிடம் செய்தி அனுப்பிய



மனசு எதைத் தீவிரமாக, இடைவிடாமல் நினைத்தாலும் அதுவாகவே மாறுகிறது. இதை மனோதத்துவக்காரர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். தோஷங்கள் அற்ற க்ருபா சமுத்திரனான பகவானைத் தியானம் செய்து கொண்டே இருப்பதால் நம்முடைய தோஷங்கள் விலகி, நாம் அன்பு மயமாகிறோம். உண்மையான பக்தி வைத்து விட்டால் அப்புறம் மனசு அன்பு மயமாகி விட, அதன்பின் அது பாபத்தில் பிரவேசிக்கவே செய்யாது. உலகத்தில் பாப எண்ணங்கள் விலகுவதற்குப் பக்தியை விட வேறு வழி இல்லை. ஆனால் பக்தி செய்வதற்கு இதுமட்டும் காரணம் இல்லை. நாம் சத்தியமான நிலையை அடைவதற்கு பக்தி வழிபண்ணுகிறது என்பதுதான் முக்கியமான காரணம். மனசு என்பதே நின்று போய், ஆத்ம ஜ்யோதியில் அப்படியே பளீரென்று அடிப்பதற்கு முன்னதாக அந்த மனசிலிருந்து பாப அழுக்குப் போக வேண்டும். இப்படிப் பாபத்தைப் போக்குவதே பக்தி.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

விக்கிரமன், வடமேற்குப் பகுதியிலேயே தன் பாசறையை அமைக்க வீரர்களுக்கு உத்தரவிட்டான்.

பாசறைக்குப் பின்வாங்கிய மாறவர்மன், களத்தில் பராக்கிரமபாகு காணப்படாததைப் பற்றிக் கவலையுடன் மார்த்தாண்டனிடம் அறிவிக்கச் சென்றான். மார்த்தாண்டன் கொற்கையிலிருந்து வந்த ஒரு வீரனுடன் பேசிக் கொண்டிருந்தான். விக்கிரமன் கொடுத்த ஒரு நாள் அவகாசத்தில் கொற்கையில் நடந்தேறிய நாடகத்தை விவரித்துக் கொண்டிருந்தான் அந்த வீரன்.

கொற்கையின் துறைமுகப் பகுதி இருளில் மூழ்கிக் கிடந்தது. இரவு இரண்டாம் ஜாமம் முடிந்து விட்டதால் சற்றே ஒளியை அதிகமாகப் பொழிய முயன்ற நிலவையும் மேகங்கள் தடுக்க முயன்றன. விண்மீன்கள் மேகங்களுக்கிடையேயிருந்த இடைவெளியில் அந்தப் பகுதியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. குளிரைச் சற்று அதிகமாகவே அள்ளிக் கொண்டு வந்த காற்று அந்தக் கலத்தின் பாய்களைப் புடைக்க வைத்திருந்தது.

அலையில் மெல்ல ஆடிக் கொண்டிருந்த அந்தக் கலத்தில் அதிகமாக விளக்குகள் காணப்படாததால் கடல் பரப்பைக் கவிழ்த்து மூடியிருந்த இருள் தனித்து நின்ற அந்தக் கலத்தையும் மூடியிருந்தது. தளத்திலும் இரண்டொரு மாலுமிகளே உலவிக் கொண்டிருந்தனர். கலத்தின் தலைவன் அறையிலும் கூட அரையிருட்டே சூழ்ந்திருந்தது. அந்த அரை இருளில் அறையின் மூலையிலிருந்து வீசிய சரவிளக்கின் மெல்லிய ஒளியில் பஞ்சணையில் சாய்ந்து தங்கப் பதுமையாக அமர்ந்திருந்த அஞ்சனாதேவியும், பஞ்சணையை விட மிருதுவான அவள் மடியில் தலைசாய்த்துக் கிடந்த குலசேகரனும் இந்த உலகத்தைப் பற்றிய பிரக்ஞையேயின்றிக் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர். ஒரு பக்கத்திலிருந்து பாய்ந்த விளக்கின் ஒளி, அஞ்சனாவின் ஒருபுறத்தை பொன்னிறத்தில் மாற்றி மெருகை அளித்திருந்தது. பளபளத்த அவளது கன்னங்களும், நீரோட்டம் பாய்ந்த இதழ்களும் குலசேகரனை ஏதோ ஒரு மாயா உலகத்தில் கொண்டு விட்டிருந்தன. மடியில் தலையை அப்புறமும் இப்புறமும் திருப்பிய குலசேகரன், கொற்கையை மறந்தான். கோட்டாற்றில் அணிவகுத்திருந்த பாண்டியப் படைகளை மறந்தான், பிற்காலத்தில் தான் மன்னனாவதாகக் கண்டு கொண்டிருந்த கனவைக் கூட மறந்திருந்தான்.

அந்த மயக்கத்தில் சுழத்துக் கலத்தின் நங்கூரம் மெல்ல இழுக்கப்பட்டதையோ, அதிக ஆரவாரமின்றித் துழாவப்பட்ட துடுப்புக்கள் கலத்தை தெற்கு நோக்கிச் செலுத்தியதையோ கவனிக்கும் நிலையில் அவன் இல்லை.

கலம் நகர்ந்து ஒரு காததூரம் வந்திருக்கலாம். மேல்தளத்தில் பராக்கிரமபாகு அனுப்பிய வீரனுடன் பேசிக் கொண்டிருந்த காவலரும், உபதலைவனும் கொற்கையின் துறைமுகப் பகுதியில் தோன்றிய கலங்களைக் கண்டு திகைத்தனர். பெரும் புலிக் கொடிகள் பறக்க, வரிசையாகத் துறைமுகத்தில் நுழைந்த அந்தக் கலங்கள், மற்றக் கலங்கள் மீது எரியம்புகளையும் பந்தங்களையும் வீசுவதையும், வீரர்கள் வாயில் கவ்விய வாட்களுடன் மற்ற கலங்களுக்குத் தாவுவதையும் கண்டு பிரமித்தனர். உபதலைவன், கலத்தின் தலைவனது அறையை

பெறுவீர் சான்மேக் கிஃப்ட் கார்டு.



5வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி சான்மேக் சிட்ஸ் அளிக்கும் சிறப்புச்சலுகை

சான்மேக் சிட்ஸ் கடந்த 5 ஆண்டுகளாக அதன் வாடிக்கையாளர்களுக்கு உறுதிப்பாட்டுடன்கூடிய சேவையை அளித்து வருகிறது.

இனி வரும் ஆண்டுகளிலும் இது போன்ற சேவை தொடரும் என்பதை குறிக்கும் வகையில் சான்மேக் சிட்ஸ் அளிக்கும் இணையற்ற சலுகை

சான்மேக் கிஃப்ட் கார்டு.

செப்டம்பர் 15ம் தேதி முதல் நவம்பர் 15ம் தேதி, 1993 வரை எந்தவொரு சீட்டு குரூப்பிலும், சேரும் ஒவ்வொரு சந்தாதாரரும் பெறும் சிறப்புரிமை!

சான்மேக் கிஃப்ட் கார்டு. இந்த கிஃப்ட் கார்டு பெறுவதைத் தொடர்ந்து நீங்கள் மகிழ்வூட்டும் பல பயன்களைப் பெறுவீர்கள். சான்மேக் சிட்ஸிலிருந்து மட்டுமின்றி மற்ற சான்மேக் குரூப் நிறுவனங்களிடமிருந்தும் பலப்பல பயன்களை நீங்கள் பெறலாம்.

எனவே, வாடிக்கையாளர்களுக்குச் சேவையளிப்பதில் 5 ஆண்டு வெற்றிகரமாக நிறைவு பெறுவதை சான்மேக் சிட்ஸ் மகிழ்ச்சியோடு கொண்டாடும் இவ்வேளையில், நீங்களும் ஒரு 'கிஃப்ட் கார்டு' பெற்று மகிழ்வடையுங்கள்.

அதன்மூலம் ஒரு நம்பகமான, ஸ்திரமான சீட்டு நிறுவனத்தில் உறுப்பினராக இருப்பதனால் பெறக்கூடிய எல்லா சிறப்புரிமைகளையும் அனுபவியுங்கள்.

முக்கிய அம்சங்கள் :

- 5 ஆண்டுகளிலேயே ரூ. 22 கோடி சீட்டுப்பரிசுப் பணமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.
- 10,000 பேருக்கும் கூடுதலான சந்தாதாரர்கள்

சீட்டு குருப்புகள்	சீட்டுத் தொகை ரூ.	அனுமதி கட்டணம் ரூ.	பரிசுப் பொருட்கள்
ரூ. 400 × 25 மாதங்கள் ரூ. 500 × 20 மாதங்கள்	10,000	40	எவர்சில்வர் பேசின்
ரூ. 1,000 × 25 மாதங்கள் ரூ. 625 × 40 மாதங்கள்	25,000	75	எவர்சில்வர் சிற்றுண்டி செட்
ரூ. 500 × 60 மாதங்கள் ரூ. 1,500 × 20 மாதங்கள் ரூ. 750 × 40 மாதங்கள்	30,000	100	எவர்சில்வர் சாப்பாடு செட்
ரூ. 2,000 × 25 மாதங்கள் ரூ. 1,250 × 40 மாதங்கள் ரூ. 1,000 × 50 மாதங்கள்	50,000	125	எவர்சில்வர் பால் பாத்திரம்
ரூ. 1,250 × 60 மாதங்கள்	75,000	150	எவர்சில்வர் கடாய் (மூடி இல்லாமல்)
ரூ. 2,500 × 40 மாதங்கள் ரூ. 4,000 × 25 மாதங்கள்	1,00,000	250	சூட்கேஸ்
ரூ. 5,000 × 40 மாதங்கள்	2,00,000	500	வெள்ளி காமாட்சி விளக்கு
ரூ. 10,000 × 50 மாதங்கள்	5,00,000	800	தங்க காசு

எல்லா குருப்புகளுக்கும் உச்ச வரம்பு 30%.

அறிமுகம்

விசேஷ சீட்டு குருப்புகள் ரூ.10,000 முதல் ரூ.5 லட்சம் வரை.
ஒவ்வொரு சந்தாதாரருக்கும் பரிசு உண்டு.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

பதிவு & தலைமை அலுவலகம்

'ஜெம்ஸ் கோர்ட்', A-6, முதல்மாடி, 14, காதர் நவாஸ்கான் ரோடு,
சென்னை 600 006. போன்: 8250601/8251232.

BID FOR A BETTER LIFE

கிளை அலுவலகங்கள்: • **சென்னை:** 'மவுண்ட் சேம்பர்ஸ்', பிளாட் 'E' மூன்றாவது மாடி, 758, அண்ணா சாலை, போன்: 8277363 •5, பாலாஜி அவென்யூ II சாலை, தி.நகர், போன்: 8278515/8258637 • 6, இரண்டாவது அவென்யூ, அசோக் நகர், போன்: 4824737 • பிளாட்-B, தேவ்கர் அபார்ட்மெண்ட்ஸ், 147, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், போன்: 4992488 • 'கபில் காம்ப்ளக்ஸ்', C-31, இரண்டாவது அவென்யூ, அண்ணா நகர் மேற்கு, போன்: 6214454 • 31, அய்யாசாமி வீதி, மேற்கு தாம்பரம் (நேஷனல் தியேட்டர் அருகில்) போன்: 401934 (PP) • பிளாட் 55, 'Bhaiya Complex', 286, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (டோவ்டன் கபே எதிரில்) சென்னை 600 007 • **மதுரை:** 'NCS பில்டிங்ஸ்', இரண்டாவது மாடி, 113-B, மேற்கு பெருமாள் மேஸ்திரி வீதி, மதுரை-1. போன்: 23334 • **கோயம்புத்தூர்:** ஸ்ரீநிவாசா டிரேட் சென்டர், 160/27, D.B. சாலை, R.S. புரம் (கென்னடி தியேட்டர் அருகில்) கோயம்புத்தூர்-2. போன்: 46375 • **திருச்சி:** 21, முதல் மாடி, 'சித்ரா காம்ப்ளக்ஸ்', சிந்தாமணி, திருச்சி-2. போன்: 25324 • **திருவண்ணாமலை:** 'சவ்வரி காம்ப்ளக்ஸ்', 23/12, கோபால் பிள்ளையார் கோயில் சாலை, திருவண்ணாமலை-1. போன்: 2579 (PP). • **கும்பகோணம்:** 41, நாகேஸ்வரன் சன்னதி வீதி, கும்பகோணம்-1 • **திருநெல்வேலி:** 25-B, S.N. நெடுஞ்சாலை, 'SRC காம்ப்ளக்ஸ்', இரண்டாவது மாடி, திருநெல்வேலி-1. போன்: 322032.

Adwise/3426/93

அடைந்து, படபடவென்று கதவைத் தட்டினான்.

தாவிருந்த இன்ப உலகில் இடீரென்று ஏற்பட்ட குறுக்கீடு குலசேகரனைப் பெரிதும் ஆத்திரமும் கோபமும் கொள்ள வைத்தது. எழுந்து வந்து கதவைத் திறந்தவன், எதிரில் நின்ற உபதலைவனின் முகமிருந்த நிலையையும் காவலரின் பதற்றத்தையும் கண்டு விழித்தான். கலம் மெல்ல நகர்ந்து கொண்டிருப்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

உடைகளைச் சரிசெய்து கொண்டு முன்னால் வந்த அஞ்சனாதேவியின் விழிகள் காவலரைக் கண்டு தீ விழிவிழித்தன.

''எதற்காகக் கதவைத் தட்டினீர்கள்?'' என்று சீறவும் செய்தாள் அவள்.

''சற்று வெளியே வந்து பின்புறம் பாருங்கள்'' உபதலைவன் வழியை விட்டு விலகி அழைத்தான்.

தெற்கு நோக்கிய அறையின் வாசலை விட்டு வெளியே வந்த குலசேகரனும் அஞ்சனாதேவியும் துறைமுகத்தில் சூழ்ந்து நின்ற சோழர் கலங்களையும் அவை பாண்டிய - ஈழக் கலங்களைத் தாக்குவதையும் கண்டு திகைத்தனர். எரியம்புகளாலும் பந்தங்களாலும் பாய்மரச் சீலைகள் பற்றி எரிய, தத்தளித்த தங்கள் கலங்களைக் கண்டு பிரமித்தனர்.

துறைமுகத்தைச் சூழ்ந்து நின்ற கலங்களின் எண்ணிக்கையையும் பெரும் படகுகளில் கரைக்கு விரைந்த சோழ வீரர்களையும் கண்ட குலசேகரன், அந்தக் கோட்டை இத்தகைய தாக்குதலை ஒரு ஜாம நேரத்துக்கு மேல் தாக்குப் பிடிப்பது சிரமம் என்பதைப் புரிந்து கொண்டான்.

கொற்கையின் பாதுகாவலனாக நியமிக்கப்பட்ட தான், கோட்டையில் இல்லாது ஈழத்துக் கலத்தில் அஞ்சனாவுடனிருப்பதும், போரில் கலந்து கொள்ளாது தப்பியோடுவதும் பெரும் அபவாதத்தை ஏற்படுத்தும் என்பது புரிந்தது அவனுக்கு.

''கலத்தைத் திருப்புங்கள்'' என்று இரைந்தான் குலசேகரன்.

உபதலைவன், குலசேகரனது இரைச்சலை சட்டை செய்ததாகத் தோன்றவில்லை. தன் மாலுமிகளை அழைத்தவன்,

''பாய்களை முழுதுமாக விரித்து துடுப்புக்களைப் பலமாகத் துழாவுங்கள். சுக்கானைச் சற்று வலப்புறமாகப் பிடிக்கச் சொல். கலத்தின் முகப்பைத் தாழ்த்து...'' மடமடவென்று உத்தரவுகளிட்டான்.

உபதலைவனது இந்த உத்தரவைத் தொடர்ந்து கலம் வேகம் பிடித்து தெற்கு நோக்கி விரைந்தது.

குலசேகரன், தன்னை அசட்டை செய்து உபதலைவன் இட்ட உத்தரவுகளைக் கேட்டுச் சினம் தலைக்கேறவே வேகமாக அவனை நெருங்கியவன், ''உபதலைவரே, கலத்தைத் திருப்புமாறு நான் கூறியது காதில் விழ வில்லையா?'' - என்று இரைந்தான்.

குலசேகரனது கோபத்தையோ அவன் இரைந்ததையோ உபதலைவன் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. அவன் பதில் சற்று அசட்டையுடனே வந்தது. ''மன்னிக்க வேண்டும். போர் துவங்கி விட்டதாகவும் இளவரசியை அழைத்துச் சென்று விடுமாறும் எங்கள் இளவரசரிடமிருந்து உத்தரவு வந்தது. இந்தத் தாக்குதலைப் பற்றி அவர் அறிந்திருக்க வேண்டும். தாங்கள் துறைமுகத்திற்குச் செல்லப் படகு வேண்டுமானால் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் நீங்கள் அங்கு செல்வதால் எந்தப் பலனும் இருக்குமென்று தோன்றவில்லை'' என்றான் உபதலைவன்.

அவன் கூறியதை உண்மையென்று நிரூபிப்பது போல் கொற்கையின் பாதுகாப்புக்கென்று யவனர்களைக் கொண்டு நிர்மாணித்த பெரும் யந்திரத் தூண்கள், பற்றியெரிந்தபடி கடலை நோக்கிச் சாய்ந்தன: தன் கனவும் அவற்றுடன் சேர்ந்து சாய்ந்ததாக உணர்ந்தான் குலசேகரன்.

ஒரு காலத்தில் பெரும் கடற்கொள்ளைக்காரனென்று கருதப்பட்டவனும், கடற்போர் முறைகளை கரதலப் பாடமாக அறிந்தவனும் சோழர் கடற்படைத் தலைவனுமான கருணாகரப் பல்லவன், பெரும் படகொன்றில் தன் உபதலைவர்களுடன் கொற்கைத் துறைமுகத்தை நெருங்கிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



''பாட்டி! நம்ப வீட்டிலே பரம் பரை பரம்பரையா ஒரு ஜாடி இருந்ததுன்னு சொல்லுவியே... அது இந்தப் பரம்பரையிலே உடைஞ்சு போச்சு...!''

- கார்த்திக் ராஜா



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 120 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க,உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் விலை ரூ. 265/-
2. ரிக்வேத ச்ருங்கலா - நாகராக்ஷரம் - விலை ரூ. 60/-
3. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
4. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
5. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
6. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-
7. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/-
(1 ம் பாகம் ரூ. 85/- 2 ம் பாகம் ரூ. 85) (கிரந்தாக்ஷரம்)

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்

1. மனாசேச்லோக - ராமதாஸ்ஸ்வாமீச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருதமூலம் - தமிழ் பதவுரை)
3. நலோதந்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
5. ராமோதந்தம் - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம். "வேறு நூல்கள் பற்றிய விவரமான கேட்லாக் வாங்க விரும்புவோர் ரூ. 3/- தபால்தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்."

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, பாகசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

காத்திருந்தவர்கள்

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

நீண்ட வரிசை, வெயிலைப் பொருட்படுத்தாமல் நின்று கொண்டிருந்தது. சாதாரண நாட்களில் இவ்வளவு கூட்டம் வருமா என்று தெரியவில்லை. இன்று அரசாங்க லீவு நாள்.

''சாமியப் பார்க்க வந்தீங்களா?'' மூர்த்தியின் பின்னால் நின்றிருந்தவர் கேட்ட போது, வாயசைவுக்கேற்ப மூக்கக் காற்று மூர்த்தியின் பின்னங்கழுத்தில் மோதிக் குறுகுறுக்க வைத்தது.

மூர்த்தி நெளிந்தான். அவரது கேள்வியின் அபத்தம் அவருக்கே புரிந்திருக்க வேண்டும். சிரித்தார்.

''எத்தனை மணிக்கு வருவாராம்?'' இனியும் பேசாமல் இருப்பது அழகல்ல. மூர்த்தி அவரைப் பார்த்துப் பதில் கேள்வி கேட்டான். இந்தக் கேள்வியின் மூலம் அவர் கேட்ட கேள்விக்குப் பதிலும் சொன்ன திருப்தி அவனுக்கு ஏற்பட்டது.

''ஹ்ம்... இது என்ன சினிமா ஷோவா... டாண்ணு ஆறு மணிக்கு மணி அடிக்கத் திரை இழுக்க.. சித்தம் போக்கு.. என்ன நான் சொல்றது..?''

அவ்வளவு உறுதியாகச் சொல்கையில் இவனுக்கு வேறு அபிப்ராயம் எப்படி இருக்க முடியும். இணக்கத்தின் அடையாளமாய்த் தலையை ஆட்டினான்.

''இதான் மொதல் தடவையா நீங்க வர்றது...?''

பின்னால் இருந்தவர் கேட்க, இவன் தலையாட்டினான். கொஞ்ச நேரம் மௌனமாய் ஓடியது. காலம் தாழ்ந்தே மூர்த்திக்கு ஓர் எண்ணம் தோன்றியது. பதிலுக்குத் தானும் அவரைக் கேட்டிருக்க வேண்டும், 'இது முதல் முறையா அல்லது ஏற்கெனவே பழக்கம் உண்டா?' என்று.

மூர்த்தி இப்போது கேட்க வாயெடுத்தான். அதற்குள் அவர் பேசினார்.

''பாப்போம், ஒங்க ராசி எப்பிடி இருக்குன்னு.. சாமிக்கே இஷ்டம் இருந்தாத்தான் நீங்க பாக்க முடியும். அப்பிடித்தான், மெட்ராஸ்லேந்து ஒரு பெரிய ஆளு, கையில தட்டு, ரூவா நோட்டு, பழம், பூன்னு வந்து நின்னாரு. புறங்கையால தொரத்தி விட்டுட்டாரு. மேல ஷோக்கா இருந்தாப் போறுமா.. உள்ள என்ன கருமாத்தரமோ...?'' அருவருப்புக் காட்டினார்.

மூர்த்திக்கு லேசாகப் பயம் கிளம்பியது. இன்று தனக்குத் தரிசனம் உண்டா இல்லையா... ஏதுடா இது வம்பாய்ப் போயிற்று. திடீரென்று தன்னைப் பார்த்து, 'நீ பாவி, போடா' என்று கத்தினால்... இத்தனை பேர் மத்தியில் எவ்வளவு அவமானமாக இருக்கும். மூர்த்தி சுற்றிலும் நோட்டம் விட்டான். நல்லவேளை, தெரிந்த முகம் யாரும் இல்லை.

''பெரிய பெரிய போலீஸ் அஃபிஷியல்ஸ், ஜட்ஜுஸ், பத்திரிகைக்காரங்க எல்லாரும் வர்றாங்க. டில்லிக்கு ராஜான்னாலும் தல்லிக்குப் பிட்டைங்கறாப்பல, இங்க வந்தா நின்னுதான் ஆகணும். ஒங்களுக்கு எழுத்தாளர் சூர்யரூபனைத் தெரியுமோ...''

''ஆமாம்... எழுத்தாளர்னா அவுரு...'' மூர்த்தி பதில் சொன்ன பின்பே தன்னுடைய பதிலில் உள்ள அபத்தத்தை உணர்ந்தான். பின்னால் உள்ளவர் இதற்காகச் சிரிக்கப் போகிறார்.

அவர் சிரிக்கவில்லை.

''இப்பத்தான் ரெண்டு வருஷமாத்தான் பாப்புலர். அதுவும் சாமியப் பாத்தப்புறந்தான் கிறுகிறுன்னு அப்பல போனார். அவுரு எழுதின மௌனகுருங்கற நாவலைப் படிச்சீங்களா?''

மூர்த்திக்கு நாவல் படிக்க ஒழிந்ததில்லை... ஆபீஸ் க்ளப்பில் அவனும் மெம்பர்தான். தினம் இரண்டு புத்தகங்கள் தருகிறார்கள். சுற்றில் அநேகமாய் இவன் கடைசி ஆளாய் இருப்பதால் அட்டை போன பின்பே புத்தகங்கள் இவனை வந்தடையும். சாப்பிட்டு விட்டு இரண்டு துணுக்குகள் படிப்பதற்குள் தூக்கம் வந்து விடும். சில நாட்களில் படித்துக் கொண்டிருக்கும் போதே புத்தகம் கையிலிருந்து நழுவும். விளக்கை யாராவது அணைத்து விட்டுப் போயிருப்பார்கள். யாராவது என்ன, அவன் மனைவி சந்திராதான்.

ஆபீஸில் வனஜா என்றொரு பெண்மணி இருக்கிறாள். எல்லாவற்றிலும் சிஸ்டமாடிக் என்று பெயர் பெற்றவள். கையில் ஒரு லிஸ்டை வைத்துக் கொண்டுதான் ரிக்ரி

யேஷன் க்ளப் பக்கம் வருவாள். வரும் புத்த கங்களைத் தேதிவாரியாக இட்டுக் கொள் வாள். அந்த லிஸ்டில், வாங்கும் புத்தகத் தின் தேதியைச் சுழித்துக் கொள்வாள்.

ஏன் சார்... பன்னண்டு, ஒம்போது கல்கி தரலியே.. தொடர் விட்டுப் போயிடும் சார்...

சிலரால்தான் இவ்வாறு இருக்க முடி கிறது. வீட்டுக் காரியங்களையும் பார்த்துக் கொண்டு, இடைவிடாது எல்லாத் தொடர் களையும் எவ்வாறு அவளால் படிக்க முடி கிறது...

'எல்லாத்திலயும் ஒரே வெர்ஷன்தான் போடறான். டீ.வி. டைபின் சீரியல். இருந் தாலும் நம்ம வனஜா மேடம் மட்டும் அத் தனை வெர்ஷனையும் படிச்சாத்தான் திருப் தியேபடுவாங்க...' அலுவல கத்தில் புழங்கும் ஹாஸ்யம் இது.

வனஜாவிற்கு சூர்ய ரூபனைத் தெரிந்திருக்கலாம். லாம் என்ன, தெரிந்திருக் கும்..

யோசிக்கும் வேளையில் க்யூவைத் திரும்பிப் பார்த் தான். மெயின் ரோடில் போக்குவரத்தைப் பாதிக்கும் அளவில் நீண்டிருந்தது.

பின்னாலிருந்தவர் இவனை மௌனமாக இருக்க விடுவதாய் இல்லை.

''சூர்ய ரூபன், யாரோ சொல்லி அரை குறையாத் தான் சாமியப் பாக்க வந்தாரு சார். நொழஞ்சதும் சாமி கேட்ட மொதல் கேள்வியே, 'பணமுடிப்பு வந்தா என்னக் கவனிப்பியான்னு?'ன்னு தான். சூர்ய ரூபன் திருதிருன்னு முழிச் சுட்டுப் போயிட்டாரு. ஊருக்குப் போய்ப் பார்த்தா இலக்கிய விருதுக்கு அவர் நாவல் செலக்ட் ஆகி ஒரு லட்சம் பணமுடிப்பு. ஒன்னு அழுதுட்டாராம். அப்ப எழுதின நாவல்தான் மௌன குரு...''

மூர்த்தி யோசனையில் ஆழ்ந்தான். அவனுக்கு அந்தகைய வாய்ப்பு ஒன்றும் வருவதாக இல்லை. ஒரு லட்சம் ரூபாய் வர லாட்டரிச் சீட்டு கூட வாங்கவில்லை.

முதலில் அவன் இங்கு சாமியாரைத் தரி சிக்க வருபவனாக இல்லை. வேறு ஒரு காரியமாய்ப் புறப்பட்டவனைத் தடுத்து, இங்கே அனுப்பியவள் சந்திரா என்னும்



அவன் மனைவிதான். ஏதோ புத்தகத்தில் படித்தாளாம். சாமியாரின் அற்புதங்களைப் படிக்கையில் சிலிர்த்துப் போனதாம்...

சந்திராவே வந்திருக்க வேண்டியது. இது ஏழாம் மாதம். பிரயாணம் உகந்ததல்ல. இதோடு மூன்று முறை உருவாகிக் கலைந்தும் விட்டது. இம்முறைதான் ஏழாம் மாதம் வரை வந்திருக்கிறது.

பெண் பிறக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு வணங்கி வரச் சொன்னாள். டீவி விளம்பரங்களில் வரும் பெண் குழந்தைகளை வாத்சல்யம் ததும்பப் பார்க்கிறாள். 'அவரும் தேடிக்கிட்டே இருப்பாரு' என்று விரல் சுழற்றி ஈறு தெரியச் சிரிக்கும் குழந்தையைக் கண்டால் சந்திராவுக்கு அவ்வளவு இஷ்டம்..

''ஆச்சா... அப்புறம் எல்லா புத்தகங்களிலேயும் சாமியப் பத்தி எழுத ஆரம்பிச்சாரு சூர்ய ரூபன். அதுக்கு முன்னாடி வெறும் க்ரைம் சப்ஜெக்ட்தான் அவர் எழுதினாரு.. 'நிலாவும் நள்ளிரவும்' படிச்சிருக்கீங்களோ.. ரெண்டு நாள் நைட் நான் தூங்கல சார். படுத்திருப்பேன். திடீர்னு வேர்த்துக் கொட்டும். அவ்வளவு த்ரில் சார்..''

மூர்த்திக்கு நாவலைப் படிக்காமலேயே வேர்த்துக் கொட்டியது. வெயிலின் கடுமை அப்படி இருந்தது. விட்டால் பின்னாலிருந்தவர் நிலாவும் நள்ளிரவும் கதையை வரி விடாமல் சொல்வார் என்று தோன்றியது. அதற்கான அவகாசமும் இருந்தது. திரும்பிப் போக எவ்வளவு நேரமாகும் என்று கணக்குப் போட்டுப் பார்த்தான்.

ஒரு பஸ் நின்றது. அதிலிருந்து நாற்பத்துச் சொச்ச பட்டுப் புடவை மாமிகள் இறங்கினார்கள். பாதிக்கு மேல் தங்க ப்ரேம் கண்ணாடிகள் அணிந்திருந்தவர். இரண்டொருவர் எப்போதோ அடித்த தலைச் சாயம் காரணமாக முடியில் மூன்று நான்கு வண்ணங்கள் தெரிந்தன. மைலாப்பூராக இருக்கலாமா...

''பாத்தீங்களா சார். போன மாசம் 'மாதர் குலம்' பத்திரிகையில சூர்ய ரூபன் சாமியப் பத்தி எழுதின கட்டுரையைப் படிச்சுட்டு திபுதிபுன்னு வந்திருக்காங்க பாருங்க...''

பின்னால் உள்ளவர் கிசுகிசுத்தார்.

மூர்த்திக்குப் புதுக் கவலை பிறந்தது. கொத்தாக இத்தனை பெண்மணிகள் வந்திருக்கும் போது, அவர்களைத்தான் முதலில் விடுவார்கள். தலா ஒரு நிமிடம் என்று வைத்தாலும் ஒரு மணி நேரம் கூடுதலாக நிற்க வேண்டும்.

இந்தப் பெண்களுடன் மருந்துக்குக் கூட ஓர் ஆண் துணை வரவில்லை என்பதையும் மூர்த்தி கவனித்தான். பாவம் அவர்கள். அவர்களில் எத்தனை பேருக்கு நேரப்படி காப்பி சாப்பிடாவிட்டால் தலைவலி வருமோ.. மாற்று ஏற்பாடு செய்திருப்பார்களோ... இருக்கும். இல்லாவிட்டால் சாமியார் ஏதாவது கேட்டு விடுவார்.

''இன்னிய டேட்ல அந்த புஸ்தகத்துல சூர்யரூபன் அட் எ டைம் எழுதறாரு சார்.. எல்லாம் சாமியோட அருள். என்ன நான் சொல்றது..''

மூர்த்தி பதில் சொல்வதற்குள் வரிசை உயிர் பெற்றது. சாமியார் வந்து விட்டாராம்.

மூர்த்தி பயந்ததற்கு மாறாக வரிசைக் கிரமம் போனது. ஓர் ஆண், ஒரு பெண். எனவே ஒரு மணி நேரம் கூடுதலாக நின்று கொண்டிருக்க வேண்டாம்.

பின்னால் நின்றவர் மூர்த்தியை ஒட்டிப் பக்கவாட்டில் நின்றார். அவருக்கும் பின்னால் இருந்தவர்கள் ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாய் 'உச்' கொட்டியதை அவர் லட்சியம் செய்யவில்லை.


ஆயிற்று. இன்னும் இரண்டு பேர்தான். உள்ளே போய் விடலாம். மூர்த்தி திரும்பிப் பார்த்தான். பின்னால் நின்றவர் வரிசையுடன் நிற்காமல் விலகி நின்றார்.

''ஏன் அங்க நின்னுக்கிட்டு... வாங்க...'' மூர்த்தி அழைத்தான். பாவம் ஒரு மணி நேரமாய்க் காத்திருக்கும் அலுப்புத் தெரியாமல் பேச்சுக் கொடுத்தவர்.

அவர் சிரித்தார். தழைந்த குரலில் அவனை நெருங்கிச் சொன்னார்.

''சார்... இன்னிக்கு பௌர்ணமியில்ல. ஒவ்வொரு பௌர்ணமியும் சாமியப் பாக்க சூர்யரூபன் வருவார் சார். ஒரு புக்ல எழுதியிருந்தாரு. என் வொய்ஃப் அவரோட ஃபேன். அவளும் வரதா இருந்தது. விருந்தாளிங்க வந்துட்டதால என்னை மட்டும் அனுப்பிச்சா. இன்னிக்கு சூர்ய ரூபனைப் பாத்து அவரோட ஆட்டோகிராப் வாங்கணும்னு நிக்கறேன். நீங்க போங்க.''

அதிர்ந்து நின்ற மூர்த்தி, யாரோ தள்ளவே குழப்பத்துடன் உள்ளே போனான்.



தொண்டர் : அமைச்சர் பேசறதுக்கு முன்னாடி ஆழாக்கு அரைப்படியெல்லாம் எடுத்துக்கிட்டுப் போறாங்களே எதுக்கு?

நண்பர் : பேசும்போது கொஞ்சம் அளந்து பேசுங்கன்னு முதல்வர் சொல்லிட்டாராம்!

- ஆர். நரேந்திரன்.



சக்கரவர்த்தித் திருமகன்

57. சுக்ரீவன் சந்தேகம்

மனைவியையும் ராஜ்ய பதவியையும் மறுபடியும் அடைய வேண்டும் என்கிற ஆசை சுக்ரீவனை விட்டுப் போகவில்லை. ஆனால் அதற்கு அவன் ஒரு வழியும் காணவில்லை. வாலியின் பராக்கிரமம் தாண்டக்கூடாத ஒரு மலையாக நின்றது.

ராமச்சந்திரனுடைய சகாயத்தைக் கொண்டு காரியம் சாதிக்கலாம் என்று மந்திரி ஹனுமான் தைரியம் சொல்லி வந்த போதிலும் சுக்ரீவன் மனத்தில் சந்தேகம் இருந்து கொண்டேயிருந்தது. இந்த ராமனுடைய பராக்கிரமத்தைக் கொண்டு வாலியை வெல்ல முடியுமா? இது ஆகாத காரியமாகத் தோன்றுகிறது என்று ஐயப்பட்டுக் கொண்டேயிருந்தான். வாலியினுடைய தேகம் இரும்பைப் போன்றது. அவனை எப்படி ராமன் கொல்லப் போகிறான் என்பது சுக்ரீவனுடைய சந்தேகம்.

ஆயினும் இதைவிட்டால் வேறு வழி ஒன்றுமே இல்லை. நிராசையாகப் போவதற்கும் மனம் இணங்கவில்லை. ராமனுடைய பலத்தைப் பரீக்ஷை செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான்.

நண்பனுடைய பலத்தை எவ்வாறு சந்தேகித்துப் பரீக்ஷை செய்வது? நான் செய்து முடிக்கிறேன் என்று ராமன் பிரதிக்ஞை செய்து விட்ட பிறகும் எப்படி அவனுடைய பராக்கிரமத்தைச் சோதித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளுவது என்றெல்லாம் சுக்ரீவன் யோசித்தான். சுக்ரீவன் மிக்க சமத்காரம் பெற்றவன். மெள்ளப் பேசலானான் :

''ராமசந்திர பிரபுவே! நீ சொன்ன சொல் இதுவரையில் என் உள்ளத்தில் இருந்து வந்த துக்கத்தைப் போக்கி விட்டது. உன்னுடைய பராக்கிரமத்தை அறிவேன். உன்னால் விடப்படும் சரம் மூன்று லோகங்களையும் அழிக்கும். அப்படியிருக்க வாலியின் தேகக்கட்டு அதைத் தாங்குமா? ஆயினும் இந்த வாலியின் பராக்கிரமத்தைப் பற்றி உனக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமை. வாலியானவன் அதிகாலையில் எழுந்து ஒரே முகூர்த்தத்தில் நான்கு சமுத்திரங்களுக்கும் போய்ச் சந்தியாவந்தனம் செய்து முடிப்பான். மலைப் பாறைகளைப் பந்து போல் மேலே எறிந்து விளையாடுவான். காட்டிலுள்ள பெரிய பெரிய மரங்களைப் புல்லைப் பிடுங்குவது போல வேரோடு விளையாட்டாகப் பிடுங்கித் தள்ளுவான்.

“ஒரு காலத்தில் துந்துபி என்கிற எருமை வடிவம் பெற்ற அசுரன் தான் பெற்ற வரத்தினால் ஆயிரம் யானையின் பலம் அடைந்து, அந்த பலத்தை இன்ன விதத்தில் உபயோகிப்பது என்று தெரியாமல் சமுத்திர ராஜனைச் சண்டைக்கு இழுத்தான். சமுத்திர ராஜன், 'உனக்குச் சமானமான எதிரியோடு அல்லவோ நீ யுத்தம் செய்ய வேண்டும்? வடக்கே ஹிமவான் இருக்கிறான். அவனண்டை போய் யுத்தம் கேள். நான் உனக்குச் சமான எதிரியல்ல' என்றான். இது நியாயமே என்று துந்துபி ஒப்புக் கொண்டு மிக வேகமாக வடக்கே சென்றான். போய் ஹிமவானை 'வா! என்னோடு யுத்தம் செய். நீ மகா பலவான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயாம். உன் பலத்தை, பரீட்சை செய்ய வந்திருக்கிறேன்!' என்று இமயமலையிலுள்ள பாறைகளைக் கொம்பால் இடித்துத் தள்ளி அட்டகாசம் செய்து கர்ஜித்தான். ஹிமவான் தனக்குண்டான கோபத்தை அடக்கிக் கொண்டு, 'அப்பா, நீ என் மேல் ஏன் பாய்கிறாய்? எனக்கு யுத்தப் பயிற்சியே கிடையாது. நான் சாதுக்களாகிய முனிவர்களுக்கு இருக்க இடம் தந்து அவர்களோடு காலம் கழித்து வருகிறேன்' என்றான். அப்படியானால், எனக்குச் சமானமான ஒரு பலவானைச் சொல்லு. அவனோடு இன்றே நான் யுத்தம் செய்ய வேண்டும் என்று மஹிஷாகரன் மூர்க்கமாகச் சொன்

ராஜாஜி

னான்.

''இதைக் கேட்ட ஹிமவான், ''தெற்கே உனக்குச் சமமானவன் ஒரு பலவான் இருக்கிறான். வாலி என்ற வானர ராஜன் இந்திரனைப் போன்ற பராக்கிரமசாலி. அவன்தான் நீ யுத்தத் துக்கு அழைக்கத் தக்க சமான வீரன். உனக்கு இஷ்டமிருப்பின் உடனே அவ னிடம் போய் யுத்தம் கேள்' என்றான்.

இதைக் கேட்டதும் துந்துபி வாலி யின் நகரத்துக்குச் சென்றான். கிஷ் கிந்தை வாயிலில் பெரிய அட்டகாசம் செய்தான். மரங்களைத் தள்ளிக் கோட்டை வாயிலைத் தன் கொம்புக ளால் இடித்துப் பெருங் கர்ஜனை செய்து வாலியை 'வா, வெளியே! உனக்கு பலம் இருப்பது உண்மையா னால் என்னுடன் போர் செய்' என்றான்.

''அந்தப்புரத்தில் சுகமாகப் படுத் திருந்த வாலி இந்தச் சப்தத்தைக் கேட் டான். உடனே எழுந்து வந்தான். அவ னுடன் ஸ்திரீகளும் அச்சமயம் சென்றார் கள். வெளியே வந்து, 'துந்துபீ, ஏன் இம் மாதிரி என் நகரத்து வாயிலில் கோஷ மிடுகிறாய்? உயிரோடு இருக்க உனக்கு ஆசை இருந்தால் இவ்விடத்தை விட்டுச் செல்' என்றான்.

''இப்படி வாலி தன்னை அலட்சிய மாகப் பேசியதைக் கேட்ட துந்துபி மிகக் கோபங் கொண்டு 'உன்னுடைய மனைவிகளுக்கு எதிரில் ஜம்பமாகப் பேசாதே! போருக்கு வந்திருக்கிறேன். உனக்கு வீரியமிருக்குமாயின் என் னுடன் யுத்தம் செய். வீண் பேச்சு வேண் டாம். இப்போது நீ படுக்கையிலிருந்து மயக்கமாக வந்திருக்கிறாய். காலை வரையில் நான் காத்திருக்கச் சம்மதிக்கி றேன். கள்ளைக் குடித்து பலம் இழந்த வனைத் தாக்குவது பாவமாகும். இந்த ராத்திரி நீ எல்லா சுகங்களையும் அனுப வித்து விட்டு எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு சரியான நிலையில் வா. உன்னை வதம் செய்வேன்' என் றான்.

''துந்துபியின் வார்த்தைகளைக் கேட்ட வாலி சிரித்து விட்டுச் சொன் னான் : 'பெண்களே! நீங்கள் போங்கள். அசுரனே! நான் மயக்கத்தில் இல்லை. யுத்தத்துக்கு முன் அருந்தும் உற்சாக பானம்தான் குடித்து வந்திருக்கிறேன் என்று வைத்துக் கொள். போர் செய்ய விரும்புகிறாயானால் இப்போதே போர் செய்யலாம்' என்று சொல்லி மகிஷாசுரனுடைய வாலைப் பிடித்துக் கர கரவென்று அவனைச் சுழற்றி வீசி எறிந்தான். ரத்தம் கக்கிக் கொண்டு அசுரன் விழுந்தான்.

''பிறகு சமாளித்துக் கொண்டு அசுரன் எழுந்தான். இருவருக்கும் பெரும் போர் நடந்தது. இந்திரனுடைய புத்திரனான வாலி மகிஷாசுரனை இடித்து இடித்துக் கொன்றான். செத்து விழுந்த அசுரனை வாலி எடுத்துத் தூக்கி எறிந்தான். அது ஒரு யோசனை தூரம் போய் விழுந்தது.


''எறியப்பட்ட அசுரனுடைய தேகத் திலிருந்து ரத்தத் துளிகள் காற்றால் வீசப் பட்டு மதங்க முனிவர் ஆசிரமத்தின் மேல் விழுந்தன. முனிவர் யார் இதைச் செய்தது என்று கோபங் கொண்டு பார்த் தார். நடந்ததை உடனே அறிந்து கொண் டார்.

''கர்வம் கொண்டு இம்மாதிரி ஒரு சவத்தை விட்டெறிந்து ஆசிரமத்தின் பேரில் அசுத்தமான ரத்தத் துளிகள் விழச் செய்தானே என்று வாலியை முனிவர் சபித்து விட்டார். 'இந்த ஆசிர மத்து பூமியில் அவன் பிரவேசித்தானா னால் உயிர் நீப்பான்' என்று சாபமிட் டார்! இதனால்தான் ராமனே! நானும் என் மந்திரிகளும் இவ்விடம் வந்து க்ஷேமமாக இருக்கிறோம். வாலி இவ் விடம் வருவதற்கில்லை. மற்ற எந்த இடம் சென்றாலும் அவனுடைய தொந் தரவு உண்டாகும்.

''ரிஷியின் சாபத்தால் இந்த எல் லைக்குள் பிரவேசிப்பதற்குப் பயப்படு கிறான். இந்த ஆச்சா மரங்களைப் பார். வாலி இந்த மரங்களில் ஒன்றைத் தன் கையால் பிடுங்கி ஒரு அசைப்பு அசைத் தால் மரத்தில் உள்ள அவ்வளவு இலை களும் உதிர்ந்து போகும். அவனுடைய பராக்கிரமம் இவ்வாறு இருக்க அவ னுடைய விரோதத்தைச் சம்பாதித்த நான் எப்படித் தைரியமாக இருக்க முடி யும்?'' என்றான் சுக்ரீவன்.

லக்ஷ்மணன் சுக்ரீவனுடைய பயத் தையும் அவன் இம்மாதிரி வாலியின் பலத்தைக் குறித்துப் பேசி வந்ததன் நோக்கத்தையும் நன்றாக உணர்ந்து கொண்டான்.

''சுக்ரீவனே! உன் சந்தேகம் தீர ராம னுடைய பலத்தையும் நீ பார்க்கலாம்'' என்றான்.



''சந்தேகம் எனக்கில்லை. சாம்பல் பூத்த நெருப்பைப் போன்ற ராமனுடைய பலத்தை நான் அறிந்தவனே யாவேன். ராமனை நான் சரணமடைந்தேன். ஆனாலும் வாலியின் பல பராக்கிரமத்தைப் பிரத்யெட்சமாகப் பார்த்த நான் அவனை நினைக்கும் போதெல்லாம் நடுங்குகிறேன். அவ்வளவே'' என்றான் சுக்ரீவன்.

இப்படிச் சுக்ரீவனுடைய பக்தியையும், சரணமடைந்து விட்ட நிலையையும், வாலியை நினைத்துப் பயப்படுவதையும் பார்த்த ராமன், அவனுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்வதே சரி என்று எண்ணித் தன் கால் கட்டை விரலால் துந்துபியின் பிரேதம் ஒரு மலை போல் கிடந்ததை தெம்பி விளையாட்டாகத் தூக்கி எறிந்தான். பிரேதம் பத்து யோஜனை தூரம் போய் விழுந்தது.

பிறகு அதுவும் போதாதென்று ராமன் தன் வில்லைக் காது வரை இழுத்து வளைத்து ஒரு சரத்தை விட்டான். அது சுக்ரீவன் காட்டிய ஆச்சா மரத்தையும் அதன் பின் நின்ற ஆறு ஆச்சாமரங்களையும் ஒன்று சேர்த்துத் துளைத்து விட்டது. ஏழு மரங்களையும் துளைத்து அந்தத் தங்கக் கட்டுச் சரம் பூமியில் புகுந்தது. பிறகு திரும்பி ராமசந்திரனுடைய தூணியில் வந்து சேர்ந்தது.

இதையெல்லாம் கண்ட சுக்ரீவன் பரவசமாய்ப் போனான். வாலியின் வஜ்ஜிரதேகம் ராமனுடைய சரத்தால் பிளக்கப்படும் என்று நிச்சயமடைந்தான். வானர ராஜன் அப்படியே சாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து ராமனை நமஸ்கரித்து, ''உன் பராக்கிரமத்தை கண்ணாரக் கண்டேன். தேவகணங்கள் அவ்வளவு பேரும் இந்திரனைத் தலைமை கொண்டு வந்து நின்று உன்னை எதிர்த்தாலும், உன் வெற்றி நிச்சயம். இனி வாலியைப் பற்றி என்ன பேச்சு? உன்னுடைய நட்பை அடைந்த என் துயரம் இன்றே தீர்ந்து விட்டது. உடனே வாலியை அழித்து விட்டு என்னைக் காப்பாற்றுவாய். இன்றே கிஷ்கிந்தை செல்வோம்'' என்றான்.

லக்ஷ்மணனும் சம்மதித்தான். ''அப்படியே ஆகட்டும்!'' என்றான் ராமன். கிஷ்கிந்தைக்குச் சென்றார்கள். சுக்ரீவன் முந்திச் சென்றான். ராமன் பின்னால் சென்று அடர்ந்த காட்டில் ஒரு மரத்துக்குப் பின் நின்றான்.

சுக்ரீவன் ஒரு பெருங்கர்ஜனை செய்தான். அதைக் கேட்ட வாலி மகா கோபத்துடன் மலைக் கோட்டையிலிருந்து உதய சூரியனைப் போல் தேஜஸுடன் வெளியே வந்தான். இருவரும் கச்சை இழுத்துக் கட்டிக் கொண்டு கை கலந்தார்கள். உக்கிரமான முஷ்டி யுத்தம் நடந்தது.

இப்படி கோர யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் வில்லைப் பிடித்து மறைந்து நின்ற ராமன் திகைத்தான். இருவரும் ஒருவரோடு ஒருவர் கலந்து யுத்தம் செய்ய ஆரம்பித்ததும் யார் சுக்ரீவன், யார் வாலி என்று ராமனால் உணர முடியவில்லை. இருவரும் ஒரே வடிவம், ஒரே விதமான ஆபரணங்கள் பூண்டு ஒரே விதமான பராக்கிரமத்துடன் மல்யுத்தம் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனபடியால் யார் வாலி என்று தெரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. கொல்லும் சரத்தைப் பிரயோகிக்க இடமில்லாமல் போயிற்று.

இதற்கிடையில் சுக்ரீவன் மிக அடிபட்டு, ராமன் ஒன்றும் செய்யவில்லையே என்று ஏமாற்றமடைந்து, தன் உயிர் போகும் என்று பயந்து ரிஷ்யமுக வனத்துக்கு ஒரே ஓட்டமாக ஓடினான்.



''என்னங்க இது ஆபரேஷன் தியேட்டர்குள்ளே டிஷ்ும் டிஷ்ும்னு சத்தம் கேட்குதே...''

''டாக்டர் எமனோட சண்டை போடறாரு.''

- எஸ். ராகவேந்திரா.

''இன்று பிழைத்தாய், போ'' என்று வாலி தம்பி சுக்ரீவனை நோக்கிச் சொல்லி விட்டுத் தன் கோட்டைக்குள் சென்றான்.

ராமலக்ஷ்மணர்கள் அடிபட்டும் துக்கப்பட்டும் நின்ற சுக்ரீவனிடம் வந்து சேர்ந்தார்கள். வானர ராஜன் ராமனை நேரில் பார்க்காமல் தரையைப் பார்த்துப் பேசினான். சொன்ன சொல்லைத் தவறினான் என்பது சுக்ரீவனுடைய கோபம்.

''வாலியைக் கொல்ல நான் பிரியப்படவில்லை என்று முந்தியே என்னிடம் சொல்லி விட்டிருந்தாயானால் நன்றாக இருந்திருக்கும் அல்லவா? என்னை ஏன் வாலியைப் போருக்கு அழைக்கச் சொன்னாய்?'' என்றான் சுக்ரீவன்.

''சுக்ரீவனே! கோபிக்க வேண்டாம். நான் சொல்லுவதைச் சாவதானமாகக் கேட்க வேண்டும்'' என்றான் ராமன். ''நான் பாணம் விடாததற்குக் காரணம் சொல்லுகிறேன். நீயும் வாலியும் அலங்காரம், வேஷம், உயரம், பருமன், நடை எல்லாவற்றிலும் ஒரே மாதிரி இருந்தீர்கள். போர் ஆரம்பித்து விட்ட பிறகு உங்களில் யார் வாலி, யார் சுக்ரீவன் என்று தெரிந்து கொள்ள முடியாத நிலையில் நான் திகைத்து நின்றேன். நான் பாணத்தை விட்டு வாலிக்குப் பதில் உன்னைக் கொன்று விட்டேனானால் என்னவாகும்? சகோதரர்களாகிய நீங்கள் போட்ட கர்ஜனைகள், முகத்தின் காந்தி, யுத்தம் செய்த முறை எல்லாவற்றிலும் ஒருவனைப் போலவே மற்றொருவனுமாகக் கொஞ்சங்கூட வித்தியாசமின்றி இருந்தீர்கள். இந்த நிலையில் நான் ஏதும் செய்ய முடியாமல் நிற்க வேண்டியதாயிற்று. வாலி என்று எண்ணி உன்னைக் கொன்று விட்டேனானால் அப்புறம் என் கதி என்ன? பிழைப்பிக்க வந்து கொன்று விட்ட மூடனும் பாவியும் ஆவேனல்லவா? கோபிக்காதே சுக்ரீவா! மறுபடியும் வாலியை அறைகூவி யழைப்பாய். வாலியை நிச்சயமாகக் கொல்வேன். லக்ஷ்மணா, அதோ அந்த அழகிய பூப் பூத்த கொடியைக் கொண்டு வா. சுக்ரீவன் கழுத்தில் அதை மாலையாய் அமைத்துக் கட்டுவாய். யுத்தத்தில் யார் வாலி, யார் நம்முடைய நண்பன் என்று அதனால் நான் நன்றாகக் காண்பேன். நாம் எண்ணிய காரியத்தை நிறைவேற்றுவோம். இன்றே வாலி பூமியில் விழுந்து புரள்வதைப் பார்ப்பாய், சுக்ரீவனே!'' என்றான்.

சுக்ரீவன் சமாதான மடைந்து மறுபடியும் உற்சாகம் அடைந்தான். லக்ஷ்மணன் பூங்கொடியைச் சுக்ரீவன் கழுத்தில் மாலையாக அமைத்துக் கோத்தான். மாலையை அணிந்த சுக்ரீவன் முன்னைவிட அழகாகத் தோன்றினான். உடனே கிஷ்கிந்தை வாயிலுக்கு மறுபடியும் போனான். கூட ராமலக்ஷ்மணனும் பின்னால் சென்றார்கள்.

(தொடரும்)

பாம்பே டையிங்

மகிழ்வூட்டும் தீபாவளிக்கு அழகூட்ட பாம்பே டையிங்



பாம்பே டையிங்

- ஷர்ட்டிங்குகள்
- ★ சூட்டிங்குகள்
- ★ வேஷ்டிகள்
- ★ லுங்கிகள்
- ★ புடவைகள்
- ★ டிரஸ் மெட்டீரியல்கள்
- ★ சல்வார் கம்மீஸ்
- ★ டவல்கள்
- ★ படுக்கை விரிப்புகள்
- ★ போர்வைகள்
- ★ மேட்சிங் ரேஞ்சுகள்
- ★ ஃபர்னிஷிங்குகள்
- ★ தலையணை உறைகள்

விவால்டி

- ★ ஷர்ட்டுகள்
- ★ ட்ரௌசர்கள்
- ★ ஜீன்ஸ்கள்
- ★ குர்தாக்கள்
- ★ பனியன்கள்
- ★ ஜட்டிகள்
- ★ பான்மல்
- ★ பாத்ரோப்புகள்
- ★ கைக்குட்டைகள்
- ★ டைகள்
- ★ சாக்ககள்
- ★ பெல்ட்கள்
- ★ தலையணைகள்
- ★ ப்ரீஃப்கேஸ்கள்

● மில் நிர்ணயித்த விலை ● தரத்திற்கு உத்திரவாதம்

தமிழ்நாடு, கேரளா மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள எமது 130-க்கும் மேற்பட்ட ஷோரூம்களிலும் 750 க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற டீலர்களிடமும் கிடைக்கும்.

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Marketed by :
சிவ்ராம்ஸ் அஸோஸியேட்ஸ்
கோயமுத்தூர் - 11 & சென்னை - 17
Bankers : The Federal Bank Ltd.,

பாம்பே டையிங்

தனிக் குடித்தனம்

இந்த வீட்டில் நள்ளிரவுக்கு முன்னால் படுக்கையறைக்குள் நுழைய முடியாது. பிரும்மாண்டமான கூட்டுக் குடித்தனம், அதோடு அத்தைப் பாட்டியின் ஆசாரம். அன்றைய வேலைகளை ஒருவழியாக முடித்து விட்டுப் படுக்கையில் போய் விழும் போது, ''அப்பாடா! நல்லபடியா ஒருநாள் பொழுது கழிஞ்சதே!'' என்று தோன்றும்.

ஆனால் இந்த ஆறுதல் எவ்வளவு நேரத்துக்கு? அதிகாலையில் மணி நான்கு அடித்ததுமே அத்தைப் பாட்டியின் 'ஜயஜய கோவிந்த கோபால கதாதர!' ஆரம்பித்து விடும். பலவகை ராகங்களில் முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கு ஸ்தோத்திரம் சொல்லி, அவர்களைப் பள்ளியெழச் செய்து விட்டுத்தான் தன் அன்றாட வேலைகளைத் தொடங்குவாள் அத்தைப் பாட்டி.

இருள் பிரிவதற்கு முன்னாலேயே அத்தைப் பாட்டி வீட்டிலுள்ள ஒவ்வொருவரையும் பெயர் சொல்லிக் கூப்பிடத் தொடங்கி விடுவாள். வீட்டுப் பெண்கள் 'நடுப்பகல் வரை' தூங்கிக் கொண்டிருப்பதால்தான் வீடு களையிழந்து போய் விட்டது என்று குறைகூறிக் கொண்டே ஸ்நானம் செய்யப் புறப்படுவாள். இதற்குப் பிறகும் மாற்றுப் பெண்களுக்குப் படுத்துக் கிடக்கத் தோன்றுமா?

அன்று சில விருந்தினர்கள் வேறு வந்திருந்தார்கள். வீட்டில் வேலை அதிகம். இரவு வேலையெல்லாம் முடிந்த போது, மேலை நாட்டுக் கணக்குப்படி மறுநாள் தொடங்கி விட்டது.

மூன்றாவது மாற்றுப் பெண் வருணா பலத்த சப்தத்துடன் படுக்கையறைக் கதவைத் தாழிட்டு விட்டுப் பெருமூச்சு விட்டாள்.

''அப்பா! புழுக்கம் தாங்கல்லே. இந்த லட்சணத்திலே விருந்து வேறே! மணி பன்னெண்டு இருபதா? பலே?''

வருணாவின் குரலில் கேலி தீவிரமாகத் தொனித்தது. இவ்வளவு நேரமானதற்கு கதீன்தான் பொறுப்பு என்று அவள் குற்றஞ் சாட்டுவது போலிருந்தது.

கதீன் விழித்துக் கொண்டுதானிருந்தான். வருணா வரும் வரை அவன் தூங்குவதில்லை. அவள் சாட்டும் குற்றத்தை அவன் ஏற்றுக் கொண்டால்தான் அவள் கோபம் தணியும்.

''வாஸ்தவந்தான்... இப்பல்லாம் ரொம்பத்தான் லேட் ஆறது...'' வருணாவின் பேச்சை ஆதரித்துப் பேசினான் கதீன். ''மத்த வீடுகளிலே ராத்திரி பத்து மணிக்குள்ளே எல்லாரும் படுத்துடுவாங்க... ஆனா தூங்கிப் போயிடுவாங்கன்னு நிச்சயமாச் சொல்ல முடியாது!'' சிரித்தான் அவன்.

சிரிப்பில் கலந்து கொள்ளாமலிருக்க முடியவில்லை வருணாவால். இருந்தாலும் அவளுடைய கோபம் தீரவில்லை. அவள் சொன்னாள், ''மத்தவங்களைப் பத்தி ஏன் பேசணும்? என் பிறந்த வீட்டையே எடுத்துக்கங்களேன்! ராத்திரி ஒம்பது மணியடிச்சா எல்லாரும் அவங்கவங்க படுக்கையறைக்குப் போயிடுவாங்க. அவங்கவங்க இஷ்டப்படி படிப்போ, எழுத்தோ, தையலோ செய்வாங்க. அவங்க ராத்திரி பூரா முழிச்சிக்கிட்டிருந்தாலும் பிறத்தியாருக்கு இடைஞ்சலில்லே... அம்மாவோட குடித்தனம் தனிக் குடித்தனமாயிருந்ததாலேதான் அப்படியிருக்க முடிஞ்சது. அம்பது பேரோட இஷ்டப்படி நடக்க வேண்டாமே! குடித்தனப் பொறுப்பு ஒருத்தி கையிலே மட்டும் இருந்தா எப்படிக் குடும்பம் நடத்த



வங்கமூலம்: ஆசாபூர்ணா தேவி

றதுன்னு காமிப்பேன்... இருபத்து நாலு மணி நேரமும் மாடா உழைக்க வேண்டாம்...''

தமிழாக்கம் : சு. கிருஷ்ணமூர்த்தி

அவள் என்ன சொல்கிறாள் என்று புரிந்தது கதீனுக்கு. அதைப் புரிந்து கொள்ளாத அளவுக்கு அவன் அசடு இல்லை. ஆனால் அவன் அவளுடைய பேச்சுக்கு ஆதரவாகவோ எதிராகவோ எதுவும் சொல்லவில்லை. எப்போதுமே இப்படித்தான்.

கொஞ்ச காலமாகவே இந்த மாதிரி அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறாள் வருணா. இனியும் இந்த ஆட்டுக்கிடையில் அடைந்து கிடப்பதில் அர்த்தமில்லை என்ற உண்மையை அந்த ஆடுகளில் ஒன்றின் மூளையில் உறைக்கச் செய்ய அவள் முயற்சி செய்து வருகிறாள். வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், அவள் யாருடைய நன்மைக்காக இவ்வளவு பாடுபடுகிறாளோ அந்த ஆள் அசைந்து கொடுக்கவில்லை.

அவனுடைய மௌனத்தைப் பார்க்க அவளுக்கு எரிச்சலாயிருக்கிறது. அவன் கூட்டுக் குடும்ப முறையை ஆதரித்தோ அல்லது தனிக்குடித்தன வாழ்க்கையைத் தாக்கியோ ஏதாவது சொன்னாலும் அவள் பொறுத்துக் கொள்வாள். இந்த மௌனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை அவளால்.

கதீனுக்கு அவள் மேல் எவ்வளவு அன்பு! அவ்வளவு இருந்தும் ஏன் அவளுடைய துன்பத்தைக் குறித்து இவ்வளவு அலட்சியமாயிருக்கிறான்? அவன் அவளை இன்பமாக வைத்திருக்க முயற்சி செய்யாவிட்டால் அவனுடைய அன்பால் என்ன பிரயோசனம்?

கொஞ்சம் கொஞ்சல், ஓய்வு கிடைத்த போது நான்கு ஆசை வார்த்தைகள் - இவற்றில் அவள் மயங்கி விடும் வயது கடந்து விட்டது.


வீட்டில் வேறு மாற்றுப் பெண்களும் இருக்கிறார்கள்தான். வருணாவுக்கு மூத்தவர்கள் இரண்டு பேர், இளையவள் ஒருத்தி. அவர்களது நிலையும் வருணாவின் நிலை மாதிரிதான். பெரியவளின் இரண்டு பெண்களுக்குக் கலியாணம் கூட ஆகி விட்டது.

அவர்களுக்குத் தங்களைப் பற்றிய உணர்வே இல்லாவிட்டால் யார் என்ன செய்ய முடியும்?

ஆட்டுக்கிடையில் உழன்று கொண்டிருக்க இஷ்டப்படுபவர்கள் உழன்று கொண்டேயிருக்கட்டும். ஆனால் வருணா மனிதப் பிறவியாக, கௌரவமாக வாழ விரும்புகிறாள்.

அவள் வெகுநேரம் பேசாமலிருப்பதைக் கண்டு கதீன், ''இன்னிக்கு மௌன விரதமா?'' என்று கேட்டான்.

மிகவும் புழுக்கமாயிருக்கிறதென்று சொல்லித் தரையில் படுத்துக் கொண்டு விட்டாள் வருணா. கதீனின் நைச்சியப் பேச்சில் அவளுக்கு எரிச்சலேற்பட்டது. பெண்



டாட்டியை இல்லத்தரசியாகக் கொண்டு தனியாகக் குடித்தனம் நடத்த ஆசையிருக்காதா ஒரு மனுஷனுக்கு!

தனிக் குடித்தனமாயிருந்தால் நாள் முழுதும் பேசிக் கொள்ளலாம்; வேடிக்கைப் பேச்சு பரிமாறிக் கொள்ளலாம், நண்பர்கள் போல் ஒருவருக்கொருவர் யோசனை சொல்லிக் கொள்ளலாம், கணவன் மனைவியிடையே ஒரு மகிழ்ச்சியான, அன்னியோன்னியமான உணர்வு பிறக்கும். ஆகா, இதெல்லாம் இரவில் ஒரு சில மணி நேரம் சேர்ந்து தூங்குகிற நேரத்தில் கிடைக்குமா?

சுதீன் கட்டிலிலிருந்து இறங்கி வந்து அவளைத் தொட்டுக் கூப்பிட்டான், ''கோவிச்சுக்கிட்டது போதும். எழுந்திரு!''

''தொந்தரவு பண்ணாதீங்க!'' என்று சொல்லி விட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டாள் வருணா.

சுதீனின் முகம் இறுகியது. அவன் தலையணையை எடுத்துக் கொண்டு கட்டிலில் போய்ப் படுத்தான். ஆச்சரியமென்னவென்றால், சிறிது நேரத்தில் தூங்கியும் போய் விட்டான்.

வருணாவும் தூங்க முயற்சி செய்தாள். மணி நான்கு அடித்ததும் எழுந்து விடுவாள் அத்தைக் கிழவி. முப்பத்து மூன்று கோடி தேவதைகளைக் கூப்பிடத் தொடங்குவாள். அதற்குச் சிறிது நேரத்துக்குப் பிறகு பூலி வந்து கதவைத் தட்டுவாள், ''அம்மா, பொழுது விடிஞ்சுடுத்து, எழுந்திரு! பாட்டி அப்பவே எழுந்திருந்தாச்சு!...''

பூலி வருணாவின் பெண்தான். ஆனால் பாட்டியிடம்தான் அவளுக்கு ஒட்டுதல், பாட்டியோடுதான் படுக்கை. வருணா பூலிக்கு ஒரு வேற்று மனுஷிதான்.

நினைவுகளிலேயே வருணா தூங்கிப் போனாள்.

அடிமேலடி அடித்து இறுதியில் அம்மியும் நகர்ந்தது. வருணாவின் நீண்ட கால முயற்சிக்குப் பலன் கிடைத்தது. சுதீன் தனிக்குடித்தனம் வைக்க ஒப்புக் கொண்டான்.

புதிய வீட்டுக்குக் குடி வந்த வருணாவுக்கு, தான் அப்போதுதான் புதிய வாழ்க்கை தொடங்குவதாகத் தோன்றியது.

தெற்குப் பார்த்த, அழகான, காற்றோட்டமான ஃப்ளாட். பெரிய பெரிய ஜன்னல்கள்.

இனிமேல் ஜன்னல்களை மூடிவைத்துக் கொண்டு இருட்டிலும் புழுக்கத்திலும் அடைத்து கிடக்க வேண்டாம்!

வருணா பழைய வீட்டிலிருந்து பழைய மோஸ்தர் கட்டிலை எடுத்து வரவில்லை. கனமில்லாத புதிய மோஸ்தர் கட்டில் வாங்கப் போகிறாள். மேஜை விசிறி. மேஜை விளக்கு. படுக்கையில் படுத்துக் கொண்டே புத்தகம் படிக்கலாம். நல்ல





"என்னய்யா இது...! ஒரேயடியா பழைய பாடாவதி படங்களை டீ. வி. யிலே போடறீங்களே...?"

"நாங்க என்ன செய்யட்டும் சார்! புதுப் பாடாவதிப் படங்கள் கிடைக்க ரொம்ப லேட் ஆகுதே...!"

– எஸ். கோவிந்தன்

படுக்கை விரிப்பு வாங்க வேண்டும். அந்த வீட்டில் செய்தது போல் பழைய புடைவைகளைச் சேர்த்துத் தைத்துப் படுக்கையில் விரிக்கக் கூடாது. தலையணை உறைகளில் எம்ப்ராய்டரி போட வேண்டும், கொசுவலைக்கு லேஸ் வைத்துத் தைக்க வேண்டும்.

இந்த மாதிரி சொருசுகளெல்லாம் கூட்டுக் குடித்தனத்தில் நடக்காது. அங்கெல்லாம் இந்த மாதிரி செய்தால், "கெழவியாயிட்டா, இன்னும் சொருசைப் பாரு!" என்று பேச்சு எழும். கூட்டுக் குடும்பத்தில் காலை பத்து மணிக்கு எனாமல் உதிர்ந்த கோப்பையில் டீ என்ற பெயரில் கடுதண்ணீரைச் சமையலறை நிலைப்படியில் உட்கார்ந்து கொண்டு குடிக்க வேண்டியிருக்கும். இங்கு அந்த அவஸ்தை இல்லை. அதிகாலையில் வராந்தாவில் கதிரோடன் உட்கார்ந்து கொண்டு டீ குடிக்கலாம்.

ஒரு சமயம் மழைக் காலத்தில் அவளுக்குப் பொரி கடலை சாப்பிட ஆசையாயிருந்தது. அவள் கதிரிடம் சொல்லி, அவன் வாங்கிக் கொடுத்து விட்டான். அதற்கு வீட்டில் எவ்வளவு கேலி, இளக்காரம்! ஒரு தடவை அவள் கதிருக்காக ஸ்வெட்டர் பின்னப் போக அவளுடைய வெட்கமில்லாத நடத்தை பற்றி வீட்டில் எவ்வளவு பேச்சு!

இன்று சமையல் வேண்டாம். கொஞ்சம் பஜ்ஜியும் வறுவலும் பொரித்துக் கொண்டு கடையிலிருந்து ஸ்வீட் வாங்கிக் கொண்டு வந்து விடலாம். மூன்று பேர் தானே!

அடுப்பில் வாணலியை வைத்து விட்டு வருணா பூலியைக் கூப்பிட்டாள், "பஜ்ஜி இட்டுக் கொடுக்கறியா?"

பூலி விழித்தாள். இந்த மாதிரி காரியங்கள் செய்து பழக்கமில்லை அவளுக்கு. அத்தைப் பாட்டி ஆசாரங்காரணமாகப் பேத்தியைச் சமையலறைக்குள் விடுவதில்லை.

பூலியின் சங்கடத்தைப் பார்த்துச் சிரித்து விட்டாள் வருணா. "சரி, நான் பாத்துக்கறேன். நீ சாமான்களை எடுத்து அரேஞ்ச் பண்ணி வை..."

பூலிக்குப் பிடித்தமான வேலை இது.

ஃப்ளாட்டில் இரண்டு அறைகள். பூலி ஓர் அறையில் டிரங்க், சூட்கேசை வைத்தாள். துணிமணிகளை மடித்து வைத்தாள். ஒரு பக்கத்தில் கண்ணாடி, பவுடர், எண்ணெய், சீப்பு, க்ரீம்...

இன்னொன்று படுக்கையறை. இன்னும் கட்டில் வாங்கவில்லை. ஆகையால் தரையிலேயே படுக்கையை விரித்தாள்.

வருணா, பஜ்ஜி பொரித்து முடிக்கவும் கதிர் ஆபிஸிலிருந்து திரும்பவும் சரியாயிருந்தது.

எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். பூலி முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே சொன்னாள், "அம்மா, எவ்வளவு நல்லா சாமான்களையெல்லாம் ஒழுங்கு பண்ணி வச்சிருக்கேன், பாரு! எல்லா சாமானும் ஒரு ரூமிலே வச்சுட்டேன். படுத்துக்க மட்டும் தனியா ஒரு ரூம். அதிலே செவுத்தோரமா அப்பாவுக்குப் படுக்கையை விரிச்சுட்டேன். நீயும் நானும் ஜன்னல் பக்கத்திலே படுத்துக்கலாம். ஜோராக் காத்து வரும்!"

வருணா திகைத்துப் போய்ப் பெண்ணைப் பார்த்தாள், பிறகு கதிர் பக்கம் திரும்பிப் பார்த்தாள். கதிரும் ஒரு விநாடி முகத்தை நிமிர்த்தி அவளைப் பார்த்தான். ஆனால் அவனுடைய பார்வையின் பொருள் என்னவென்று புரியவில்லை.

புதுக் குடித்தனம் வந்த மகிழ்ச்சி, சுதந்திர வாழ்க்கையின் கவர்ச்சி எல்லாம் எங்கோ மறைந்து போய் விட்டன.

இதைத் தவிர வேறென்ன ஏற்பாடு செய்திருக்க முடியும்? பூலி அவளுடைய அறிவுக்குத் தகுந்தபடி, வயதுக்குத் தக்கபடி இந்த ஏற்பாடு செய்திருக்கிறாள்.

இந்த நிலையை வருணா ஏன் எதிர்பார்க்கவில்லை?

வருணா படுக்க வந்த போது கதிர் உறங்கி விட்டிருந்தான். தனக்கு முன் தூங்கி விட்டதற்காக இப்போது அவள் அவனைக் கோபித்துக் கொள்ள முடியுமா? கோபித்துக் கொண்டு அவன் தூக்கத்தைக் கலைக்க முடியுமா?

ஒன்றும் செய்ய வழியில்லை. வருணா தலையணையை இழுத்துக் கொண்டு வெறுந்தரையில் படுத்துக் கொண்டாள். தரையில் அவளுக்கும் கதிருக்குமிடையே இரண்டு முழ - ஆனால் நெருங்க இயலாத தூரம்.

தன் தனிக் குடித்தனத்தின் மகிழ்ச்சியில் தன் பதினாறு வயதுப் பெண்ணே இவ்வளவு பெரிய தடையாக ஆகி விடுவாள் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை!

14

மடிமீது தலை வைத்து

ஒரு குழந்தையைப் போல், படபடவெனப் பொரிந்து தள்ளிய சுஜீதாவைப் பார்த்தான்-கஸ்தூரிரங்கன். அவன் பார்வையில் சிருங்காரத்தை விட, வாத்ஸல்யம் அதிகமாக இருந்தது. கூடவே அவன் மனத்தில் சின்னதாக ஒரு கவலையும் எழுந்தது.

இந்த மாதிரியான 'நீரும், நெருப்பும்' கடைசிவரை ஒத்துப் போகுமா?

அதைப் பற்றிய ஆராய்ச்சியை அப்புறம் தனிமையில் செய்து கொள்ளலாம். இப்போது அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

ஏன் இந்த முகம் இஞ்சி தின்ற ஏதோ மாதிரி மாறிப் போயிற்று என்று கேட்டாள்.

''என்ன இது சொல்லுங்களேன்?'' என்று சுஜீதா மறுபடி அவனைச் செல்லமாய் ஒரு குத்துக் குத்தினாள்.

''நீ சந்தேகப்படற பொண்ணு, எனக்குத் தெரியாதுன்னு நெஜத்தைச் சொன்னேன். நீ நம்பலை. ஆனா எனக்குத் தோணறதைச் சொல்றேன்.''

''என்ன?''

''வட்டத்தில் சதுரம் பொருந்தாது இல்ல. அது மாதிரி...''

''அது மாதிரி?''

''இந்த மாதிரி ஒரு அழகான பொண்ணுக்கு என்னை மாதிரி ஒரு சோளிங்கர் ஸ்பெஷல் ஒத்து வராதுன்னு சொல்றதுக்காக இப்படிப் பண்ணிட்டுப் போயிருப்பான். இல்லேன்னா சின்னப்பசங்க ஏதாவது வெளையாட்டுக்காக இப்படிப் பண்ணியிருப்பாங்க. நாம பஸ்ல உக்காந்து வந்தமே. அப்பவே பான்ட்ல ஒட்டியிருந்திருக்கும். நான் பின்னால கைல என்னவோ தட்டுப்படற மாதிரி இருக்கேன்னு திரும்பிப் பாத்தா இந்த பேப்பர் இருந்தது. நீயும் அப்பத்தான் பாத்தே. ஒடனே ஒனக்கு நீரும் நெருப்பும் புத்தி வந்திரிச்சி. என்ன, ஏதுன்னு ரூங்கில வண்டு தொளைக்கற மாதிரி தொளைக்க ஆரம்பிச்சிட்டே.''

''ஸ்டாப்... ஸ்டாப்.''

''நிறுத்திட்டேன்.''

''உவமானம் எல்லாம் சொல்லி அழகாப் பேசிடறீங்க ரங்கா! அதென்ன சோளிங்கர் ஸ்பெஷல்?''

''அடுத்த சந்தேகமா? சோளிங்கர் ஸ்பெஷல்னா கொரங்குன்னு அர்த்தம்.''

''அப்ப நீங்க அதுவா?''

''எதுவா?''

''அதான் நீங்க சொன்னீங்களே. போங்க ரங்கா. ரொம்ப மோசம் நீங்க. என் ஃப்ரெண்ட்ஸ்ல்லாம் என்னை அப்புறம் கிண்டல் பண்ண ஆரம்பிச்சிடுவாங்க.''

''என்னன்னு?''

''போயும், போயும் ஒரு சோளிங்கர் ஸ்பெஷல்தான் ஒனக்கும் கெடைச்சதான்னு?''

''ஏய்....''

''சும்மா... வேடிக்கைக்கு ரங்கா. நான் நெஜமாவே அவ்வளவு அழகா ரங்கா?''

''ம்... ரொம்ப.''

பொதுவாகப் பெண்களுக்கு கண்ணீரை ஆயுதமாகச் சொல்லுவார்கள். கண்ணீர் சிந்தியே ஆண்களிடம் அவர்கள் எதை வேண்டுமானாலும் சாதித்துக் கொள்ள முடியும். ஆனால் பெண்களை வீழ்த்தும் ஒரே ஆயுதம் புகழ்ச்சி. ஆண்கள் இதைக் கையில் எடுத்துக் கொண்டு விட்டால் போதும், சமூகத்தில் எந்த நிலையில் இருக்கும் பெண்ணும், ஆணின் இந்த ஆயுதத்தின் முன்பு அடிபணிந்தே தீருவாள்.

கஸ்தூரிரங்கன், சுஜீதாவின் கவனத்தை அந்த பேப்பரில் இருந்து விலக்குவதற்கு அந்த ஆயுதத்தைத்தான் பயன்படுத்தினான்.

''ம்.. ரொம்ப' என்று சொன்னதிலேயே சுஜீதா வீழ்ந்தாள். அவளுடைய ஆதர்ச ஆண்மகனே, அவளழகில் மயங்கிவிட்டான் என்றால் அப்புறம் வேறென்ன வேண்டும்.

சுஜீதா சுற்று முற்றும் நிகழ்பவைகளை மறந்து அவன் தோளில் மெல்லச் சாய்ந்து அவனை ஒட்டின மாதிரி நடந்து வந்தாள்.

''நீ சொன்ன மாதிரி ஒங்கூட மொதலைப் பண்ணைக்கு வந்தாச்சு. சுத்தியாச்சு. இன்னும் என்ன இங்கிருக்கு?''

''வெளிய போகணும்.''

''போய்?''

''வெள்ளரி பத்தை சாப்பிடணும். உப்பு, மொளகா தடவி.''

கஸ்தூரி ரங்கனுக்கு முள்மேல் நிற்பது போலிருந்தது. மனம் கவர்ந்த பெண்ணுடன் கொஞ்ச நேரமாவது நிம்மதியான பேச்சுப்



பேச முடியாமல், அவளோடு உரசி உரசி நடக்க முடியாமல், அவள் விரல் பிடித்து பற்களுக்கிடையில் வைத்து பூனைக்கடி கடிக்க முடியாமல் இதென்ன தொந்தரவு என்று தோன்றியது.

என்னை மாதிரி ஆட்களுக்கெல்லாம் காதல் கூடாதோ? குடும்பம் கூடாதோ? மனைவி கூடாதோ? மழலை கூடாதோ?

யோசிக்க, யோசிக்க வினாடி டிக், டிக் என்று நகர்ந்து கொண்டிருந்தது. அவனுக்கு உடனே அவளிடமிருந்து விலகியாக வேண்டும். அவனுக்காகக் காத்திருக்கும் செய்தி என்ன என்று தெரிந்து கொண்டாக வேண்டும்.

சுபா

கஸ்தூரியிடம் என்ன சொல்லிவிட்டுப் பிரிவது? அவன்தான் எல்லாம் என்று நம்பி வந்திருக்கும் பெண். அவனிடம் தன்னையே ஒப்படைக்கத் தயாராய் இருக்கும் பெண்.

''சோளக்கதிர் கட்டது பிடிக்குமா?''

இவன் சிந்தனை நேரம் முழுக்க அவள் பேசிக் கொண்டுதான் இருந்திருக்கிறாள் என்பது திடீரென்று உறைத்தது கஸ்தூரி

அடுத்த இதழில்...



- **உங்கள் பாப்பா விரல் சூப்புகிறதா? பெற்றோரே ஜாக்கிரதை!**

  – மருத்துவக் கட்டுரை.

- **'கலைக்கு, மொழி பிரச்னை இல்லை!'**

  – 'ஜ"ஹுான்' படைத்தவர் பேசுகிறார்!

ரங்கனுக்கு.

அவனுடன் மெல்ல நடந்து வாசலை நெருங்கி விட்டிருந்தான் அவன். வாசலை ஒட்டியிருந்த ஒரு ஹாலில் பதப்படுத்தப்பட்ட முதலைகள் சுவரில் அங்கங்கே பொருத்தப்பட்டிருந்தன. திமிங்கலத்தின் எலும்புக் கூடு.

''சுசீதா.''

''ம்'' என்றாள் கொஞ்சலாக அவனைப் பார்த்து. ''நான் கேட்டதுக்குப் பதிலே இல்ல. சோளக்கதிர்.''

''கேட்டது பிடிக்கும்.''

''அப்ப எனக்கும். வாங்கித் தரீங்களா? எங்கூட சாப்பிடறீங்களா? இல்லன்னா கோவம் வரும்.''

ஐயோ பெண்ணே! எவ்வளவு சின்ன விஷயங்களுக்கெல்லாம் இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறாய். கைப்பிடித்து, விரல் கோத்து, அக்னி வலம் வந்து முப்பத்து முக்கோடி தேவாதிதேவர்களின் சாட்சியுடன் மணமாலை மாற்றிக் கொண்டான பின் என்னைப் பற்றித் தெரியவந்தால் நீ என்ன செய்வாய்? அப்போது உணர்ச்சி வசப்படுதலுக்கு எதுவும் மிச்சம் இருக்காதே.

''வெள்ளரிப் பத்தை, மாங்கா பத்தை, சோளக்கதிரு, பஞ்சுமிட்டாய், பருத்திக் கொட்டை எல்லாமே சாப்பிடலாம்.''

''ரங்கா'' என்று சிணுங்கலாய்க் காலால் தரையை ஜல் என்று உதைத்தாள் சுசீதா.

''கோச்சிக்காதே. சும்மா வேடிக்கைக்கு. நீ இந்த மொதலையெல்லாம் பாத்துக்கிட்டு இரேன். ஒரு டூ மினிட்ஸ். நான் இப்ப வந்திடறேன்.''

''எங்க போப் போறீங்க?''

''ஆத்திரத்தை அடக்கிடலாம்... ஆனா...'' என்று சொல்லி விட்டு நிறுத்தினான் கஸ்தூரிரங்கன்.

''ச்சீய்'' என்றாள் சுசீதா முகம் சிவக்க.

''அதான். போய்ட்டு தோ வந்துடறேன். ஒனக்குப் போகணுமா?''

மறுபடி ஒரு ''ச்சீய்'' சொன்னாள். உதடு குவித்து அவள் தன் வெண் பற்கள் மின்ன 'ச்சீய்' சொன்ன அழகைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலத்தான் இருந்தது. ''போய்ட்டு வாங்க'' என்றாள்.

கஸ்தூரிரங்கன் அவளிடமிருந்து ஏறக்குறைய பிய்த்துக் கொண்டு உள்ளே ஓடினான். சுசீதா பார்க்கிறாளா என்பதை ஓரக் கண்ணால் பார்த்தான். இல்லை. ஹப்பாடா!

சுற்று முற்றும் பார்த்தான். சுசீதா சற்று முன் சுட்டிக்காட்டிய 'தடிப்பசங்கள்' பாத்ரூமிற்குப் பக்கத்தில் இருந்தார்கள். அவன் அவர்களைப் பார்த்துவிட்டான் என்பதை அவர்கள் பார்த்தவுடன், பாத்ரூமிற்குள் நுழைந்தார்கள்.

கஸ்தூரிரங்கன் பாத்ரூம் நோக்கி நடந்தான். வேண்டாம் ரங்கா. அது உன் வாழ்க்கைக்கு ஒத்துவராத விஷயம். இதயத்தைப் பலவீனப்படுத்தும் செயல். ரத்த அழுத்தத்தை அதிகமாக்கும் விவகாரம். நீ உண்டு, உன் சபரி உண்டு, இப்போது புதிதாய்ச் சேர்ந்து கொண்ட பெண்ணுறவு உண்டு என்று எல்லாவற்றிலும் இருந்து ஒதுங்கிக் கொள்.

பாத்ரூம் வந்து விட்டது. இது வரை சிந்தனை செய்த மனம், சிந்தனையை ஒதுக்கி விட்டு, அவன் ஈடுபட்டிருந்த விவகாரத்தில் இருந்த வசீகரம் காரணமாக, அவனை விளக்கு நோக்கிச் செல்லும் விட்டில் பூச்சியாகச் செலுத்தியது.

உள்ளே நுழைந்தான். அது ஒரு திறந்த வெளி பாத்ரூம். கதவற்றது. நிற்கும் ஆண்கள் கண்களைச் செலுத்திச் சுற்று முற்றும் பார்க்கலாம் போல ஓர் அமைப்பு.

கஸ்தூரிரங்கன் தேடி வந்த ஆசாமிகளில் ஒருவன் பாத்ரூமின் வரிசையாக நின்ற சுவர் இடைவெளிகளில், ஒரு இடைவெளியிலிருந்து வெளிப்பட்டு, கஸ்தூரிரங்கனைக் கொஞ்சமும் கவனியாத மாதிரி சென்றான்.

கஸ்தூரிரங்கன் அந்த குறிப்பிட்ட இடைவெளிக்குச் சென்று நின்றான். சுவரில் பார்த்தான்.

'நாளைக்காலை மீன் வருகிறது.'

சுவரில் ஒரு ஐ-ப்ரோ பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. கஸ்தூரிரங்கன் ஒரு பெருமூச்செறிந்தான். எழுதப்பட்டிருந்த வாக்கியத்தை அழித்தான். பாத்ரூம் விட்டு வெளிப்பட்டான்.

சென்னை நோக்கிச் செல்லும் பஸ்

ஸில் அடர்ந்த கூட்டம் இருந்தது. பஸ்ஸின் டிரைவர் போனால் போகிறதென்று கஸ்தூரிரங்கனையும், சுசீதாவையும் ஏற்றிக் கொண்டான்.

சுசீதா ஏறி, அவன் கடைசிப் படியில் காலை வைத்துக் கொண்டிருக்கும் போதே பஸ் கிளம்பி விட்டது. சுசீதா பதறினாள். கஸ்தூரிரங்கன் சுதாரித்துக் கொண்டு சுசீதா மேல் படர்ந்தான்.

சுசீதா வெட்கப்பட்டாள். உள்ளே ஏறிக் கொண்டார்கள். கூட்டம் நெருக்கியடித்தது. சாராயவாடையுடன் கிராமவாசிகள். அவர்களின் மூச்சுக்காற்றுகளில் இருந்தும், மிட்டாய்க்கடைப் பார்வைகளிலிருந்தும் தப்பிப்பதற்காக, சுசீதா விளக்கெண்ணெயும், ஈறும், பேனும் கலந்த தலைமுடி கொண்ட பெண்கள் அமர்ந்திருந்த பக்கம் சாய வேண்டியிருந்தது.

கஸ்தூரிரங்கன் அவளுக்கு அரணாக நின்றான். சுற்றியிருந்தவர்கள் நெருக்கிய போதெல்லாம் அவள் மேல் பரவினாற் போல் நின்றவன், போகப் போக கிறக்கத்தில், மயக்கத்தில், மென்மையில், தாழம்பூ மணத்தில், காதலில் யாரும் அவனை நெருக்காமலேயே அவள் மேல் படர்ந்தான்.

சுசீதாவும் சொல்லமுடியாத இன்ப வேதனையில் இருந்தாள். கஸ்தூரிரங்கனின் அண்மை அவளுக்கு மிகத் தேவையாய் இருந்தது. இருந்தாலும் உணர்ச்சிகளின் மீறலைச் சமாளிப்பது அவளுக்குச் சிரமமாக இருந்தது.

பாலும் கொதிக்க வேண்டும். ஆனால் பொங்கக் கூடாது, என்பது இயற்கைக்கு முரணான விதியாக இருந்ததால், அவளால் பொங்காமல் இருக்க முடியவில்லை. மெல்லத் திரும்பி, தோள் வழியே கஸ்தூரிரங்கனைப் பார்த்து விலகி நிற்குமாறு கண்களால் கெஞ்சினாள்.

கஸ்தூரிரங்கன் அதைக் கவனித்தும், கவனியாதவன் போல இருந்தான்.

அந்த காதல் நாட்களில் இருந்த இருப்பை மனத்தில் பார்த்து நாணப்பட்டு, பரிதாபப்பட்டு, "இந்தாம்மா... வா. இங்க ஒக்காரு. பாவம். ஆம்படையான், பொண்டாட்டி எவ்வளவு நேரம்தான் நின்னு வருவீங்க?" என்று திடுக்கென இருவருமாய் எழுந்து அவர்கள் உட்கார இடம் பண்ணிக் கொடுக்க, கஸ்தூரிரங்கன் மனத்திற்குள் கிழவிகளைச் சபித்தான்.

சுசீதா ஜன்னலோரமாக அமர்ந்து கொண்டு, அவனை ஒய்யாரமாகப் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

"திருட்டுப் பூனை! திருட்டுப் பூனை" என்று முணுமுணுத்தாள்.

"ஆமா... பூனைக்குத்தான் ஆசை. பாலு பாவம். அது சந்நியாசிப்பாலு..... அப்படித் தானே?" என்று முனகலாகக் கேட்டான் கஸ்தூரிரங்கன்.

சர்க்கரை வியாதியிலிருந்து நான் விடுபட்டேன்!



T. தேவராஜன்

சர்க்கரை வியாதியின் கொடுமையிலிருந்து நோயாளியின் முகவரியும் கடிதமும் இது :

திரு. T. தேவராஜன், B.Sc., B.T.,
முதல்வர், ஜோதி பால மந்திர்,
காமராஜ் நகர் காலனி, சேலம் - 636 014.

அன்புள்ளம் கொண்ட நிறுவனர் டாக்டர் ஜே.வி.ஜி. சேகர் அவர்கட்கு,

கடந்த ஐந்து ஆண்டுகளாக கடுமையான நீரிழிவு நோயினால் நான் மிகவும் பாதிக்கப்பட்டு, வலுவிழந்து, மிகுந்த சோர்வுடன், எடையும் குறைந்து சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். இதனால் என்னுடைய வேலைகளைக் கூட செய்ய முடியாமல் இருந்து வந்த எனக்கு அடிக்கடி களைப்பு ஏற்பட்டு, கைகால்கள் வலித்தல், கண் பார்வைக் கோளாறு போன்ற தொல்லைகளுக்கும் ஆளானேன். பல வருடங்களாக ஆஸ்துமா நோயும் எனக்கு இருந்து வந்ததால் மூச்சுத் திணறல், சளித்தொல்லை போன்றவைகளாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன்.

இதற்காக மருந்துகளை மருத்துவர்கள் அறிவுரைப்படி சாப்பிட்டுக் கொண்டும், உணவுக் கட்டுப்பாட்டுடனும், இருந்து வந்தேன். அப்படியிருந்தும் சர்க்கரை அளவு குறையாமல், நாள்தோறும் என் உடல்நிலை மேலும் மோசமடைந்து வருவதைக் கண்டு, வேதனையுடன் என்னை நானே நொந்து கொள்வேன்.

உங்களை எனக்கு நன்கு தெரிந்திருந்தும், உங்களின் மூலிகை மருந்துகளின் அற்புத மருத்துவ குணங்களைப் பற்றி தெரியாமலிருந்த எனக்கு, தங்களைச் சந்திக்க வரும் போது, சர்க்கரை வியாதியின் தன்மைகளை எடுத்துரைத்து, பின்விளைவோ, பக்கவிளைவோ (Side-effect) ஏற்படுத்தாத இயற்கை மூலிகை மருந்துகளை வழங்கினீர்கள். மேலும் உணவில், வெந்தியம், வெங்காயம், சிறுகீரை சூப் இவைகளுடன் தங்களது மூலிகை மருந்துகளையும் சாப்பிட்டு வந்தேன். முதல் நான்கு மாதங்கள் வரை, வழக்கமாக நான் சாப்பிடும் ஆங்கில மருந்துகளையும் தங்கள் அறிவுரைப்படி சாப்பிட்டு வந்தேன்.

முதுமையடைந்து விட்ட நான், நீரிழிவு நோயின் கொடுமையிலிருந்து மீளவே முடியாது என்றிருந்த எனக்கு, சில மாதங்கள் கழித்த பிறகே உடலில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதைக் கண்டேன். நான் ஒரு நீரிழிவு நோயாளியே கிடையாது என்ற எண்ணம் இப்போது எனக்கு வந்துள்ளது. இப்போது என்னுடைய தினசரி வேலைகளை உற்சாகத்துடனும், களைப்பின்றியும் நான் முழுவதும் செய்ய முடிகிறது. எனக்கிருந்த சளி, இருமல், தொல்லைகளும் நீங்கியது. கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்து கொண்டிருந்த எனக்கு, மறுவாழ்வு அளித்தீர்கள். தங்களுக்கும், தங்களுடன் பணிபுரியும் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

நன்றியுடன்
T. தேவராஜன்



நிறுவனர், Dr. J.V.G. சேகர், Ph.D. (மருத்துவம்) போன் : 8257059

காந்திஜி இயற்கை நலவாழ்வு நிலையம் - சர்க்கரை நோய் ஆராய்ச்சி மையம்
43/2 விஜயராகவா ரோடு, (வாணிமஹால் அருகாமையில்)
தி.நகர், சென்னை - 600 017.
(ஆலோசனை நேரம் : தினமும் காலை 10 மணி முதல் 1 மணி வரை)

NATURE CURE

கதோ, அவன் மடியில் செல்லமாகப் பிறர் அறியாவண்ணம் கிள்ளிவிட்டு, தலையை அவன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

வெளியே வான் நிலாவும், நட்சத் திரங் களும் கூடவே உலா வந்தன. பஸ்ஸின் இடைவிடாத 'ர்.ர்.ர்' எனும் டீசல் ரீங் காரம். பஸ்ஸின் உள்ளே அங்கொன்றும் இங்கொன்றுமாய் எரிந்த மங்கலான, வெளிச்சம் தராத விளக்குகள். ஜன்னல் வழி யாக உள்ளே பாய்ந்து வந்த கடலோரக் குளிர்காற்று.

கதோ ஏன் பஸ்பயணத்திற்கு அவ் வளவு முக்கியத்துவம் கொடுத்தாள் என்று அப்போதுதான் புரிந்தது கஸ்தூரிரங் கனுக்கு.

சொர்க்கம்!

அவன் ஒரு விஷயம் தீர்மானித்தான்.

சென்னை வந்து சேர்ந்த போது மணி இரவு எட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. கதோ சைதாப்பேட்டையில் இறங்கிக் கொள்ளலாம் என்றாள். இறங்கினார்கள்.

கதோ ஆட்டோவில் ஏறி அவள் வீட்டை நோக்கிப் போய்விட்டாள்.

கஸ்தூரிரங்கனை வெறுமை தாக்கியது. விருந்து பாதியில் முடிந்த மாதிரி இருந்தது. மாயை கலைந்து போய் விட்டது. இவ் வளவு நேர சொர்க்கம், அண்மை, உஷ்ணம், மணம், தேன் தோய்ந்த வார்த்தைகள் எல் லாம் மாயமாகி, மேலே வான். எல்லை யற்ற பிரபஞ்சத்தில் அவன் மட்டும் தன்னந் தனியனாய்.... லாரிகள், பஸ்கள், சைக்கிள் கள், மனிதர்கள், ஹாரன் ஒலிகள், கிணிங், கிணிங்.... 'பஸ் வருது.... பஸ் வருது... பாத்து க்ராஸ் பண்ணு' என்று உலகம் இயங்கிக் கொண்டிருந்தாலும், அவள் இல் லாத உலகம், உலகமாய்த் தெரியவில்லை. பித்துப் பிடித்தாற் போல் இருந்தது.

''ஆட்டோ....''

ஏறினான். வழி சொன்னான். பின் பக்கம் சாய்ந்து அமர்ந்தான். கண்ணோரம் நீர் துளித்தது. கைக்குட்டையால் முகம் மூடி னான்.

'நான் உனக்கே உனக்கு' என்று மேல் வந்து விழும் பெண் அன்புக்கு இவ்வளவு வலிமையா?

டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் வாசலில் ஆட்டோவை நிறுத்தி விட்டு, புயலாக உள்ளே சென்று படியேறி, அன்று திறந்த அதே கதவு திறந்து உள்ளே சென்றான்.

அவர் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

''நான் வெலகிக்கறேன். எனக்கு வேணாம். எதுவும் வேணாம். என்னால ரெட்டை வாழ்க்கை வாழ முடியாது'' என்று சன்னமான, ஆனால் உறுதியான குரலில் சொன்னான் கஸ்தூரிரங்கன்.

(தொடரும்)

வட்டமேஜை

வை.கோ.வின் இமேஜ் எப்படி வளர்ந்தது?

◆ 'பூகம்பம் - ஒரு ஹைட்ரஜன் குண்டு' படித்தேன். பல்லாயிரக்கணக்கானோரின் பல்வேறு சொல்லொணாத் துயரங்களைக் கண்டு ஒருபுறம் வேதனை பெருக, மறுபுறம் நம்முடைய விஞ்ஞானிகளின் கையாலாகாத்தனம் முள்ளாய்க் குத்தியது. 'சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் வெகு சிலரே இறந்தனர்; காரணம், முன்பே அறிந்து வெளியேற்றியது தான்', 'ஜப்பான் பூகம்பம் 7.4 ரிக்டர் அளவுக்கு மேலிருந்தும் உயிரிழப்பு சொற்பமே!' முதலான செய்திகளைப் படிக்கும் போது, 'வரும் முன் காப்போம்' என்ற முன்னெச்சரிக்கை கூடவா நமக்குத் தெரியவில்லை என்று ஆச்சரியமாக இருக்கிறது.

மாதனூர், கரு. பி. கார்த்திகேயன்.

◆ ''வை.கோ.வுக்குக் கல்தா'' தலையங்கம் காய்தல் உவத்தல் இன்றி எழுதப்பட்டுள்ளது. ஆனால் ஒன்று. அவருக்குப் பெரும் ''பாப்புலர் இமேஜ்'' இருப்பதாகவும் எனவே அவரைக் கட்சிப் பணிக்கு வளைத்துப் போடுவதுதான் சாணக்கியம் என்றும் எழுதியுள்ளீர்கள். இந்த மதிப்பு அவருக்கு எப்படி வந்தது? சேவையாலோ, தியாகத்தாலோ அல்ல. கட்சி அனுமதி இன்றி, மூத்த தலைவர்கள் யாருக்கும் தெரியாமல், ரகசியமாகப் புலிகளின் தயவால் ஸ்ரீலங்கா சென்று, அவர்கள் தலைவனைச் சந்தித்து வந்த பின்னர் முளைவிடத் துவங்கியது தான். இதனாலேயே புலிகளுக்கும் தி.மு.க.வுக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதாகத் தேர்தல் சமயத்தில் பிரசாரம் செய்யப்பட்டு, தி.மு.க.வின் வீழ்ச்சிக்கும் மூலகாரணமாயிற்று. இப்படிச் சுயநல எண்ணத்துடன் கட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தியவரையா அரவணைத்துச் செல்ல வேண்டும் என்கிறீர்கள்? அடுக்காது ஐயா, அடுக்காது!

சென்னை, பொ. வஜ்ரவேலு.

◆ அனுபமாவின் பதில்களும், அதன் நேர்த்தியும் 'அவர் திரை உலகுக்குப் புதுக; புதுப் பாடகி' என்று எண்ணவே முடியவில்லை. பாட்டுத் திறமையோடு பேச்சுத் திறமையும் சேர்ந்தே இருக்கிறது அவருக்கு.

ஏத்தாப்பூர், செவேகா.

◆ கல்வி கற்று, வேலைக்காக அலைந்து திரியும் என்னைப் போன்ற இளைஞர்களுக்குச் சேவுகன் அண்ணாமலையாரின் பதில்கள், சுயதொழில் செய்ய உந்துதலாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை!

மானாம்பதி, பால. பசுபதி.

◆ யாரை முட்டாளாக்கி, மக்கள் தலையில் மிளகாய் அரைத்து ஆட்சிக்கு வர முடியும் என்ற கவலையில் அரசியல்வாதிகள் இருக்கும் போது UNICEF அறிக்கையைப் படிக்க அவர்களுக்கு நேரம் ஏது சார்?

திருச்சி - 14, ரத்னபாலன்.

◆ வில்வருபன் போட்ட 'கோடு' சிறப்பாக இருந்தது. மனத்தில் பதியும்படி கோட்டை ஆழமாக இழுத்திருக்கிறார்.

முடிகண்டநல்லூர், க. ராஜேந்திரன்.

◆ 'நவராத்திரி நாயகி' என்ற வைஷ்ணவி தேவி கட்டுரையைப் பார்த்தேன். எங்களிடத்திலிருந்து ரொம்ப பக்கத்தில்தான் என்றாலும், இவ்வளவு சிறப்புமிக்க வைஷ்ணவி தேவியின் விளக்கமான விஷயங்களைக் 'கல்கி'யில் பார்த்த பின்புதான் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டோம் என்பதை நன்றியுடன் சொல்லிக் கொள்கின்றோம்.

சென்னை - 109, எல். ஆர். ஹரிஹரன்.

◆ சித்த மருத்துவத்தில் அமெரிக்கா, ஜெர்மன் போன்ற நாடுகள் காட்டும் அக்கறையில் பாதி கூட நம் இந்தியா காட்டாமல் இருப்பது வேதனைதான். அதுவும் சித்த மருத்துவம் தோன்றிய நம் பூமியில் பிரும்மானந்த சுவாமிகள் போன்றோருக்கு அரசு பாரபட்சமின்றி உதவிகளைச் செய்து சித்தமருத்துவத்திற்கு ஊக்கம் தர வேண்டும்.

தொழுகிரிப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

◆ நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு ஹர்ஷத் மேத்தா அளித்த பதில்களால் நான் கூட அவர் கட்சியில் சேர்ந்து விடுவேனோ என்று பயமாயிருக்கிறது. அந்த மாதிரி கேட்டார் பிணிக்கும் தகையவாய் அவர் வேட்ப மொழிந்துள்ளார்! அவரது எதிர்காலம் ஒளிமயமானதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

சேலம் - 6, வரத. சண்முக சுந்தர வடிவேலு.

◆ ஹர்ஷத் மேத்தாவின் அபார மூளைத் திறன் கொஞ்சம் யோசிக்க வைக்கிறது. வங்கிகளில் நிலவி வந்த நிர்வாக ஓட்டைகள், ஊழல்கள், அதிகாரிகளின் அலட்சியப் போக்கு இவற்றை மனிதர் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இதனை வங்கிகளின் மொழியிலேயே கூற வேண்டுமானால் தேசிய வங்கிகள் Hypothicated to ஹர்ஷத் மேத்தா!

சென்னை - 59, ராமாபுரம் சந்துரு.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

''சொட்டு நீலத்துடன்'' வழங்கப்படும் இலவசப் பரிசுகள் என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.



பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது, அதன் தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே இந்த இலவசப் பரிசுகள் :

ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி

நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவை யில்லை ?

உஜாலாவின் நான்கு ''துளிகளே'' போதும் ஒரு லிட்டர் நீருக்கு.

உபயோகிப்பவர்களுக்கு.

உஜாலாவின் ஒவ்வொரு துளியும் துணிகளில் நிரந்தரமான வெண்மையை உண்டாக்கி மனதில் நிறைந்த திருப்தியை தருகிறது. நீரில் எளிதாக கரைந்து துணிகளின் இழைகளில் உடனடியாக உறிஞ்சப்பட்டு இரட்டை ஆக்‌ஷன் மூலம் ஒரே சீராக பரவும் தன்மையை உடையது உடைகளின் அழுக்கை நீக்கி துணிகளுக்கு பளபளப்பான வெண்மையை தருகின்றது. ORAL TOXICITY TEST சோதனை மற்றும் SKIN IRITATION TEST சோதனையில் சருமத்திற்கு எந்த கெடுதலையும் உண்டாக்காது என்று சான்றிதழ் பெற்றது உஜாலா. இது ஜோதி லெபாரட்டரியின் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.



JYOTHY LABORATORIES

Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.
Regd. Office: Sreekrishna Nagar
Bombay-400 066.

உஜாலா